Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
*Supplement to* Vol. 3—No. 1.

ஓம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

---

## அ றி க் கை

---

1. சென்ற இரண்டு மாதங்களாக வெளியிடப்பட்ட வி. பி. அறிக்கையைக் கண்ணுற்ற பல சந்தா நேயர்கள் எப்படியாவது 31-1-1930க்குள் சந்தாவைச் செலுத்தி விடுவதாகவும் அவ்வாறு செலுத்தத் தவறினால் பிப்ரவரி மாதத்தில் பத்திரிகையை வி. பி. மூலம் அனுப்பிவிடலாம் என்றும் தெரிவித்துள்ளார்கள். அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி பத்திரிகையை இம்மாதம் வி. பி. மூலம் அனுப்பவில்லை. இது வரை பல சந்தா நேயர்கள் தனித்தும் சேர்ந்தும் தங்கள் சந்தாவைச் செலுத்தி விட்டனர். செலுத்தாதவர்களும் விரைந்து 20-1-1930க்குள் தங்கள் சந்தாவை நமது விலாசத்துக்கு அனுப்பி உபகரிக்கவேண்டுகிறோம். அவ்வாறு செலுத்தத் தவறினால் மறுஅறிக்கையின்றியே பத்திரிகை அடுத்த மாதம் வி. பி. யில் அனுப்பப்படும்.

2. சென்ற ஆண்டு சில சந்தாதாரர்கள் விரைவில் வி. பி. தபாலை ஏற்றுக் கொள்ளாததினால் தபாலாபீசார் திருப்பியனுப்ப நேரிட்டது. பிறகு அந்த சந்தாதாரர்கள் அந்த நஷ்டத்தையும் ஏற்றுக்கொள்ள நேரிட்டது. ஆகையால் வி. பி. தபாலை முன் எச்சரிக்கையாகப் பெற்றுக்கொள்ளுதல் நலம்.

இங்ஙனம் :

சென்னை,
10—1—1930.

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி,
சைவசித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, ஜி. டி. மதராஸ்.

# திருவெண்ணெய்நல்லூரில்
# சமாஜ விழாச் சிறப்பு

நிகழும் சுக்கில ஸ்ரீ மார்கழிமீ அ, கூ, கo-ஆம் தேதிகளில் **திருவெண்ணெய்நல்லூரில்** நமது சமாஜத்திய உச-ஆம் ஆண்டு நிறைவு விழாவும் அதையொட்டிய சைவர் மகாநாடும் மிகச் சிறப்பாகத் திருக்கோவலூர் ஆதீனத்து **ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள்** அவைத் தலைமையில் நடைபெற்றன. தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஏறக்குறைய இருநூறு சைவசபைப் பிரதிநிதிகள் மிகுந்த ஆர்வத்தோடும் நிரம்பிய சைவப் பற்றோடும் வந்திருந்து விழாவையும் மகாநாட்டையும் மிகச் செவ்வையாக நடத்திவைத்தார்கள். பேரறிஞர்கள் பலர் உண்மைச் சைவநெறியையும் சைவமக்கள் ஒழுக்கத்தைச் சீர்திருத்திக் கொள்ளும் வழிகளையும் சைவசமய முன்னேற்றத்துக்குரிய பணி செயல்முறைகளையும் அழுத்தம் திருத்தமாக எடுத்து விளக்கினர். அவைத்தலைவரவர்கள் முன்னுரை, கருத்துரை, முடிபுரைகளெல்லாம் உண்மைஞானச்சுடர் கொளுத்தும் தகையனவாய் அனைவரையும் பேரின்பக்கடலுள் திளைக்கும்படி செய்தன. அண்மையில் சமயவளர்ச்சி பயிலுதற்குரிய தீர்மானங்களும் நிறைவேறின. அவைகளை நடைமுறையிற் கொண்டுவருதற்குத் தேவையான பொருளுதவியும் ஆங்கே வழங்கப்பட்டது. சிறப்பாக சமயகுரவர்கள் நால்வரின் சரிதையையும் அவர்கள் அருட்பாடல்களில் சிலவற்றின் திரட்டையும் 12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகள் உணரும் பொருட்டு 48 பக்கங்கொண்ட சிறு நூலாக 10,000 பிரதிகள் அச்சிட்டு வெளியிடுவதற்காகத் திருவாளர்கள் ச. சச்சிதாநந்தம் பிள்ளை, ந. மு. வேங்கடசாமி நாட்டார், கி. குப்புச்சாமி முதலியார், அ. மு. சரவண முதலியார் ஆகிய நான்கு பேரறிஞர்கள் பணிசெய்வதற்கு உட்கழகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்கள் வெளியிடும் இந்நூலுக்குத் தேவையான பொருளுதவியும் வழங்கப்பட்டது நோக்கத்தக்கது. இந்நூல் சுக்கில ஆண்டின் இறுதியில் வெளியாகுமென எதிர்பார்க்கின்றோம். நமது சமாஜ உத்தியோகஸ்தர்களும் கூடியவரையில் சைவத்துக்கு உழைக்கும் அறிவும் ஆற்றலும் அவகாசமும் உடையவர்களாகவே தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

திருவெண்ணெய்நல்லூர் ஸ்டேஷனிலிருந்து புறப்பட்டு விழா முழுமையுமிருந்து மீண்டும் ஸ்டேஷனுக்குப் போகும்வரையில் எல்லா அன்பர்கட்கும் தேவையான ஊர்தி, தங்குமிடம், உணவு, முதலிய எல்லா வசதிகளையும் யாதொரு குறைவுமின்றி மிகச் செம்மையாகத் திறம்பட அமைத்து உபகரித்த வரவேற்புக் கழகத்தார்க்கும் அதன் அமைச்சர் திருவாளர் M. சின்னசாமி ரெட்டியார் அவர்கட்கும் நம் சமாஜத்தின் நன்றியேயன்றி சைவப்பெரியார்கள் நன்றியும் சைவ உலகத்தின் நன்றியும் உரித்தாகும். சமாஜத்தின் விதிகளின்படி அப்பெரியாரை சமாஜ போஷக உறுப்பினருள் ஒருவராகப் பதிவுசெய்து கொண்டோம்.

இங்ஙனம் :

**ம. பாலசுப்ரஹ்மண்யம்,**

காரியதரிசி.

[குறிப்பு :—இவ்விழாவின் நடைமுறை விவரங்கள், தலைமைப் பேருரைக் குறிப்புகள், சொற்பொழிவுகளின் சுருக்கம் முதலியன அடுத்த இதழில் விரிவாக வெளிவரும். தூத்துக்குடி, சாத்தூர் முதலிய இடங்கட்குச் சென்று சமயப்பணி இயற்றி மீண்டும் சென்னைக்கு வரத் தாமதமானபடியால் இவைகளை விரிவாக இப்போதே எழுதி வெளியிட இயலவில்லை. ஆகையால் ஜனவரி, பிப்ரவரி, ஆகிய இரண்டு மாத இதழ்களையும் ஒன்றாக வெளியிடக் கருதியுள்ளோம். நமது சந்தா நேயர்கள் இதைப் பொறுத்து ஏற்றுக்கொள்வார்களென்றே எண்ணுகிறோம்.]

Registered No. M. 2330.

"SIDDHANTHAM"
Vol. 3—No's. 1 & 2.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சைவசித்தாந்த மகாசமாஜத் திங்கள் வெளியீடு

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"


| | | |
|---|---|---|
| மலர் ௩ | சுக்கில ஆண்டு தை, மாசித் திங்கள்<br>1930ஹு ஜனவரிமீ, பிப்ரவரிமீ | இதழ் க, உ |



| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| நமது பத்திரிகை ... ... | க |
| ஸ்ரீமத் ஞானியார் சுவ... ... பேருரை ... | ௩ |
| சைவர் மகாநாடு ... ... ... | ௫ |
| இருபத்து நான்காம் ஆண்டுவிழா ... ... | அ |
| இருபத்துநான்காம் ஆண்டு அறிக்கைப் பத்திரம் ... | கச |
| உ௫-வது ஆண்டு நிருவாகசபையினர் ... ... | கஎ |
| சதமணிக்கோவை ... ... ... | கக |
| "சென்றடையாத திருவுடையான்" ... ... | உக |
| அக்ஷமாலிகோபநிஷத் ... ... ... | உச |
| பண்டைத் தமிழரின் சமயம் ... ... | உஅ |
| "உம்பர்கட்கரசு" ... ... ... | ௩க |
| அறம் பொரு ளின்பம் வீடு ... ... | ௩௩ |


ஆசிரியர் :—ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், B. A., B. L.
உதவி ஆசிரியர் :—கி. குப்புச்சாமி முதலியார்

சைவ சித்தாந்த மகாசமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

ஆண்டுச் சந்தா ரூ. 1 8 0. 1930 வெளி நாட்டுக்கு ரூ. 2 0 0.
தனிப் பிரதி அணா 3.

# சைவசித்தாந்த மகாசமாஜ அறிக்கைகள்

1. "சித்தாந்தம்" பத்திரிகை, சைவசித்தாந்த மகாசமாஜம், தேவார வெளியீடு முதலியனபற்றிய எல்லாக் கடிதங்களும், மணியார்டர்களும் காரியதரிசி, சைவசித்தாந்த மகாசமாஜம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை என்ற விலாசத்துக்கே அனுப்பப்படல்வேண்டும்.

2. "சித்தாந்தம்" ஒவ்வொரு மாத யிதழும் அம்மாதம் 10-ம் தேதியன்று சென்னையில் ஜெனரல் போஸ்டாபீசு மூலம் அனுப்பப்படும். உரிய மாதயிதழை உரிய காலத்தில் பெறாதவர்கள் அம்மாதக் கடைசித் தேதிக்குள் காரியதரிசிக்குத் தெரிவிக்கவேண்டும். அவர்கட்கு அடுத்த மாத யிதழோடு தவறிய பத்திரிகை அனுப்பப்படும். அவ்வாறு உரிய காலத்தில் எழுதிப் பெற்றுக்கொள்ளாதவர்கட்கு இதழ் ஒன்று மூன்றணா வீதம் விலை போட்டு விற்கப்படும்.

3. "சித்தாந்தம்" பத்திரிகைக்குக் கட்டுரைகள் வழங்குவோர் தங்கள் தபால் விலாசத்தைத் தெளிவாக எழுதி, சைவசமய உண்மைகள், அமைப்புக்கள், குறியீடுகள், ஒழுக்கமுறைகள் முதலியவற்றில் ஏதேனும் ஒன்றைத் திறம்பட விளக்கி, எக்காரணங்கொண்டும் விவாதத்துக்கு இடந்தரக்கூடிய பொருள்களை நாடாது அறவே ஒழித்து, சாதாரண அறிவுடைய மக்களும் உணரக்கூடிய எளிய தமிழ்நடையில் மூன்று பக்கங்கட்கு மேற்படாமல் காகிதத்தில் ஒரு பக்கத்தில் எழுதி அனுப்புதல்வேண்டும்.

## தை மாதக் கூட்டங்கள்

4. இக்கூட்டங்கள் மிகச்சிறப்பாகத் திருமயிலாப்பூர் கபாலீச்சுரத்தில் சுக்கிலவூ தைமீ க, உ, ந-ம் தேதிகளில் மாலை 6-மணி முதல் $8\frac{1}{2}$ மணிவரை நடைபெற்றன. இம்மூன்று தினங்களும் ஆலயத்தில் தெப்போத்ஸவம் நடந்தபடியால் எளிய மக்களுக்குச் சமயபோதனை செய்யும் தருவாய் ஏற்பட்டது. முதல்நாள் திரு. கி. குப்புச்சாமி முதலியார் "மந்திரமாவது நீறு" என்பதுபற்றியும் திரு-திரு.வி. உலகநாத முதலியார் "சேக்கிழார் பெருமை" என்பதுபற்றியும் அரிய சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள். இரண்டாம் நாள் திரு. கி. குப்புச்சாமி முதலியார் "கோயில் வழிபாடு" என்பதுபற்றியும் திரு. வேள். துரைக்கண்ணனார் "அப்பர் தேவாரம்" என்பதுபற்றியும் இனிய சொற்பொழி வாற்றினார்கள். மூன்றாம் நாள் திரு. ம. பாலசுப்ரஹ்மண்யம் "சமயப்பணி" என்பதுபற்றியும் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் "சிவலிங்க மஹத்துவம்" என்பதுபற்றியும் உபந்நியசித்தார்கள். திரு. பா. கந்தநரசிம்ஹம் அவர்கள் இடையிடையே வீரமொழிகள் பகர்ந்தனர். ஆலய தருமகருத்தர்கட்கும், சொற்பொழிவாளர்கட்கும் ஏனையோருக்கும் வந்தனம் கூறிய பின்னர் கடவுள் வாழ்த்தொலி முழங்கச் சபை கலைந்தது.

## திருவிழாவில் சமயப்பிரசாரம்

5. திருவொற்றியூரிலும் திருமயிலாப்பூரிலும் நடைபெறவிருக்கும் திருவிழாக்களிலே சமயப்பிரசாரம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஏனைய சிவாலயங்களில் நடைபெறும் திருவிழாக் காலங்களில் வந்துகூடும் எளிய மக்களுக்குச் சமயபோதனை செய்யவிரும்பும் ஆலயதரும கருத்தர்களும் பிறரும் உடனே காரியதரிசிக்கு எழுதி வேண்டிய ஏற்பாடுகளைச்செய்து கொள்ளும்படி வேண்டுகிறோம். இத்தகைய பிரசாரம் செய்வதற்கு முன்வரும் சைவர்கள் தங்கள் பெயர் விலாசங்களை உடனே காரியதரிசிக்கு எழுதி அனுப்புதல்வேண்டும்.

இங்ஙனம் :

**ம. பாலசுப்ரஹ்மண்யம்,**

காரியதரிசி.

# சைவசித்தாந்த மகாசமாஜ அறிக்கைகள்

1. சமாஜ விஷயமான எல்லாக் கடிதங்களும் **காரியதரிசி, சைவசித்தாந்த மகா சமாஜம், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை,** என்ற விலாசத்துக்கே அனுப்பப்படல்வேண்டும்.

2. சமாஜத்துக்கு அனுப்ப வேண்டிய எல்லாத் தொகைகளையும் ஷை விலாசத்துக்கே மணியார்டர் செய்யவேண்டும்.

3. "சித்தாந்தம்" பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புவோர், ஷை பத்திரிகையின் சில இதழ்களைப்பெற விரும்புவோர், ஷை பத்திரிகையைப்பற்றிய கடிதப் போக்குவரவு செய்வோர் அனைவரும் ஷை விலாசத்துக்கே கடிதங்களை அனுப்பவேண்டும்.

4. "சித்தாந்தம்" பத்திரிகைக்குச் சந்தா செலுத்துவோர் ஷை விலாசத்துக்கே மணியார்டர் செய்யவேண்டும்.

5. "சித்தாந்தம்" பத்திரிகைக்குக் கட்டுரை எழுதியனுப்புவோர் ஷை விலாசத்துக்கே அனுப்பவேண்டும்.

6. "சித்தாந்தம்" பத்திரிகைக்குக் கட்டுரைகள் வழங்குவோர் தங்கள் தபால் விலாசத்தைத் தெளிவாக எழுதி, கட்டுரைகளைச் சாதாரண அறிவுடைய மக்களும் உணரக்கூடியவாறு எளிய தமிழ்நடையில் எழுதி, **கட்டுரையொன்று மூன்று பக்கங்கட்கு மேற்படாமல் காகிதத்தில் ஒரு பக்கத்தில்** நல்ல கையெழுத்தில் வரைந்து, எளிய மக்களுக்கு அறிவூட்டுவதே சிறந்த பணியென்ற நோக்கத்தோடு சைவசமயத்தின் உண்மைகள், அமைப்புக்கள், குறியீடுகள் முதலியவற்றில் ஒன்றைத் திறம்பட விளக்கி, எக்காரணங்கொண்டும் விவாதத்துக்கு இடந்தரக் கூடிய பொருள்களை நாடாது அறவே ஒழித்து, நமது பத்திரிகைக்கு உபகரிக்க வேண்டுகிறோம். இவ்வுயரிய நோக்கங்கள் இனிது முற்றுப்பெறுதற்குக் கட்டுரை வழங்கும் நண்பர்களின் ஒத்துழைப்பே பெருந்துணையாகும்.

7. "சித்தாந்தம்" பத்திரிகையில் மதிப்புரைகள் வெளிவர வேண்டுமென்று கருதி, நூல்களை அனுப்புவோர் மேற்கண்ட விலாசத்துக்கே அனுப்பவேண்டும்.

8. "சித்தாந்தம்" பத்திரிகையில் விளம்பரம் செய்ய விரும்புவோர் முன் பணம் அனுப்பி ஷை விலாசத்துக்கு எழுதவேண்டும்.

9. சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் முதலிய சமாஜ வெளியீடுகளை விலைக்குப் பெற விரும்புவோர் மேற்கண்ட சமாஜ விலாசத்துக்கே முன் பணம் அனுப்பிப்பெறுதல் வேண்டும்.

10. சைவசித்தாந்த மகாசமாஜம், "சித்தாந்தம்" பத்திரிகை இவைகள்பற்றிய எல்லா விதமான கடிதப் போக்குவரவும், பணம் அனுப்புதல் முதலியனவும் மேற்கண்ட விலாசத்துக்கே செய்தல்வேண்டும்.

இங்ஙனம்:

150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை. 10—1—1930.

**ம. பாலசுப்ரஹ்மண்யம்,** காரியதரிசி.
சைவசித்தாந்த மகாசமாஜம்,
**ஆசிரியர் "சித்தாந்தம்" பத்திரிகை.**

## சைவ இளைஞர்கட்கு ஒரு வேண்டுகோள்

தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒருசைவ இளைஞர் சங்கம் ஏற்படுத்துவ தோடு மிக விரைவாக ஒரு சைவ இளைஞர் மகாநாடும் கூட்டவேண்டும். இதற்காக உழைக்க முன் வருவோர் நமக்கு விரைவில் தெரிவித்தால் வேண்டிய வசதிகள்செய்து கொடுக்கத் தயா ராக இருக்கிறோம்.

---

## சைவப்பெரியார்கட்கு ஒரு வேண்டுகோள்

பன்னிரண்டு வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமிகட்குரிய தேவாரத்திரட்டு ஒன்று வெளி யிடத் தீர்மானித்துள்ளோம். அறிஞர்கள் ஒவ்வொருவரும் அத்திரட்டில் இன்றியமையாது இருக்கவேண்டும் எனக் கருதும் தேவார, திருவாசகப் பாடல்களை நமக்கு விரைவில் தெரி விக்க வேண்டுகிறோம். பிப்ரவரிமீ 15உக்குப் பிறகு அனுப்பும் கடிதங்கள் பயன்படா.

---

## சைவசபைகட்கு ஒரு வேண்டுகோள்

இதுவரை தங்கள் சபை சமாஜத்தோடு இணைக்கப்பட்டிராவிடில் இன்றே இணைத்துக் கொள்ளுங்கள். "சித்தாந்தம்" பத்திரிகையைப் பெறலாம். மற்றும் சமாஜ நடவடிக்கைகள் எல்லா வற்றிலும் கலந்து கொள்ளலாம். சமயப்பணியிலும் ஒத்துழைக்கலாம். இன்றே விவரங்கட்கு எழுதுங்கள்.

---

## சமாஜத்திய ஜனவரி மாதக்கூட்டங்கள்

திருமயிலாப்பூர் ஸ்ரீ கபாலீச்சுரர் திருக்கோயிலில் நிகழும் சுக்கிலஹூ தைமீ முதல் மூன்று நாட்களில் தெப்போத்ஸவத்தை யொட்டிப் பல சொற்பொழிவுகள் சமாஜத்தின் சார் பில் நடைபெறும். அனைவரும் வருக.

---

# சுந்தரர் தேவாரம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர் சுந்தரர் தேவாரம் 10,000 பிரதிகளை அச்சிட்டு அடக்க விலைக்கு வழங்குகின்றனர். நேரில் வருவோர் நான்கணு தந்து தனிப்பிரதி பெறலாம். மொத்தமாக ரூபாவுக்கு ஐந்து பிரதிகள் வீதம் பெற்றுக்கொள்ளலாம். முன்பணமாக அனுப்பு வோருக்கு 25பிரதிகட்கு மேற்பட்டால் ரயில்வே பார்சலாகப் புத்தகங்கள் அனுப்பப்படும். முன் பணம் அனுப்புவோர் புத்தகக் கிரயத்தோடு பார்சல் கட்டும் செலவிற்கும் ரயில்வே ரசீதனுப்பத் தபாற் செலவிற்கும் 2 அணு சேர்த்தனுப்ப வேண்டும். ரயில்வே ரசீது கிடைத்தவுடன் பார்சலை ஒப்புக்கொள்ளா விட்டால் ரயில்வே கம்பெனிக்கு டிமரேஜ் கட்டணம் கட்டநேரிடும். ரயில்வே பார்சலைப் பெற்றுக் கொண்டதை ஒவ்வொருவரும் தயவு செய்து காரியதரிசிக்குத் தெரிவிக்கவேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தனிப்பிரதி (பார்சல் செலவு, வி. பி. அல்லது ரிஜிஸ்தர் செலவுள்பட) | | | ரூ. | 0 | 8 | 0 |
| 5 பிரதிகள் | ஷ | ஷ | ,, | 1 | 9 | 0 |
| 10 ,, | ஷ | ஷ | ,, | 2 | 15 | 0 |
| 25 ,, | ஷ | ஷ | ,, | 6 | 14 | 0 |
| 50 ,, | ஷ | ஷ | ,, | 13 | 8 | 0 |

ஷ ஐம்பது பிரதிகளைத் திருநெல்வேலிக்கு ரயில்வே பார்சலில் அனுப்ப மொத்தச் செலவு 11-2-0. ரயில்வே ஸ்டேஷனில்லாத உள்நாட்டு ஊர்களிலிருப்போர் ரயில்வே ஸ்டேஷனுக் கருகிலுள்ள நண்பர் விலாசத்துக்கு அனுப்பும்படி செய்தல் நலம். மூன்று நான்கு அன்பர்கள் சேர்ந்து ஒரே பார்சலாகப் பெற்றுக்கொள்வதும் நலம். இப்பிரதிகள் வெளிவந்தது முதல் மிக விரைவாய் செலவாய் வருகின்றன. ஆகவே புத்தகம் தேவையுள் ளவர்கள் விரைந்து கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்புவார்களாக.

இங்ஙனம் :

150, கோவிந்தப்பநாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை.

ம. பாலசுப்ரஹ்மண்யம்,
காரியதரிசி.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

சென்னை, சைவ சித்தாந்த மகா சமாஜத்தின்
மாதத் தமிழ்ப் பத்திரிகை

மலர் மூன்று

**1930**


பத்திராசிரியர் :

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், பி. ஏ., பி. எல்.,
அட்வகேட், சென்னை.

உதவிப் பத்திராசிரியர் :

கி. குப்புச்சாமி முதலியார்
திருக்குறள் விளக்க ஆசிரியர்.



சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.

---

விலை ரூபா இரண்டு.


சாது அச்சுக்கூடம்,
இராயப்பேட்டை,
சென்னை.

உ

# சித்தாந்தம் மலர் மூன்றின் உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| அதர்வசிகோப நிஷத்து ... ... | பலாசூர் - இராமநாத சாஸ்திரியார் | 62 |
| அறம்பொருளின்பம் வீடு ... ... | R. M. அண்ணாமலை செட்டியார் | 33 |
| அக்ஷமாலிகோப நிஷத்து ... ... | பலாசூர் - இராமநாத சாஸ்திரியார் | 24 |
| ஆடும்பரிவேலணி சேவல் ... ... | பத்திராசிரியர் | 209 |
| ஆலங்குடியின் பெருமை ... ... | சாமிவேலாயுதம் பிள்ளை | 69 |
| இயற்கைத் தத்துவ நூலும் சைவசமயமும் ... | E. T. இராஜேஸ்வரி யம்மாள் | 45 |
| இரண்டு அரிய நிகழ்ச்சிகள் ... ... | பத்திராசிரியர் | 89 |
| இராமநாதனவர்களின் தேகவியோகம் ... | ‘ இந்துசாதனம் ’ | 275 |
| இருபத்து நான்காம் ஆண்டு அறிக்கைப் பத்திரம் ... ... | காரியதரிசி | 14 |
| இருபத்து நான்காம் ஆண்டு விழா ... | ப. கந்தநரசிம்ஹன் | 8 |
| இருபத்தைந்தாவது ஆண்டு நிருவாக சபையினர் ... ... | காரியதரிசி | 17 |
| இளைஞர்கட்குத் திருமுகம் ... ... | மா. வே. நெல்லையப்ப பிள்ளை | 94 |
| உண்மைச் சமய உணர்வு ... ... | காழி. சிவ-கண்ணுசாமி | 237 |
| உமாபதிசிவம் திருமுறைத்திரட்டு (கட்டுரை) ... | சோமசுந்தர தேசிகர் | 74 |
| ஷை ஷை (மூலம்) ... | | 113 |
| உம்பர்கட்கரசு ... ... | உதவிப்பத்திராசிரியர் | 31 |
| ஒழுக்கம் ... ... | C. S. சுவாமிநாத முதலியார் | 149,176 |
| ஓவியக்காட்சி ... ... | R. பச்சைய பிள்ளை | 197 |
| கார்த்திகை தீபம் ... ... | பத்திராசிரியர் | 233 |
| கார்த்திகை ... ... | கருவூலத்தன் | 272 |
| கிறித்து சமயம் ... ... | காழி. சிவ - கண்ணுசாமி | 173 |
| கேவேடரும் கெளிறும் ... ... | தா. நா. ஆறுமுகம் பிள்ளை | 145 |
| ஷை ... ... | வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் | 111 |
| கொல்லி மலையின் வளங்களும் யான்கண்ட புதுமைகளும் ... ... | செ. அருணாசலம் பிள்ளை | 230 |
| கோகழி ... ... | தா. நா. ஆறுமுகம் பிள்ளை | 172 |
| ஷை ... ... | கணபதிப் பிள்ளை | 171 |
| ஷை ... ... | வே. மு. ஸ்ரீநிவாஸ முதலியார் | 143 |
| சதமணிக்கோவை ... ... | சோமசுந்தர தேசிகர் | 19 |
| சமயக்கேடு ... ... | காழி. சிவ - கண்ணுசாமி | 104 |
| சமயத்தொண்டு ... ... | பத்திராசிரியர் | 65 |
| சமயமும் சட்டசபையும் ... ... | பத்திராசிரியர் | 41 |
| சமய வளர்ச்சியும் சட்டசபையும் ... | பத்திராசிரியர் | 161 |
| சமாஜ ஆண்டுவிழா நடந்த இடங்களும் தலைவர்களும் ... ... ... | காரியதரிசி | 140 |
| சமாஜ வெள்ளிவிழா ... ... | பத்திராசிரியர் | 137 |
| ஷை முன்னுரை ... ... | திரு. வி. கலியாணசுந்தர முதலியார் | 212 |

| | | பக்கம் |
|---|---|---|
| சான்றோர்க்கணி ... | அ. வரதநஞ்சைய பிள்ளை | 133 |
| சிவஞானபோத விளக்கம் ... | உதவிப் பத்திராசிரியர் | 156, 163, 185, 226, 267 |
| சிவலிங்கம் ... | மா. வே. நெல்லையப்ப பிள்ளை | 112 |
| சிவன் செயலும் சீவன் செயலும் ... | வை. கந்தசாமி முதலியார் | 43 |
| சென்றடையாத திருவுடையான் ... | தா. நா ஆறுமுகம் பிள்ளை | 97 |
| டிை டிை ... | உதவிப் பத்திராசிரியர் | 102 |
| டிை டிை ... | G. கல்யாணம் | 61 |
| டிை டிை ... | ஒ. கோ. கோவிந்தசாமி பிள்ளை | 100 |
| டிை டிை ... | வேள் - N. துரைக்கண்ணன் | 21 |
| டிை டிை ... | பொ. முத்தைய பிள்ளை | 81 |
| சேரன் செங்குட்டுவன் ... | C. S. இராஜாப் பிள்ளை | 53 |
| சைவ இளைஞர் மகாநாடு ... | தி. கு. கி. நாராயணசாமி | 91 |
| டிை தலைவர் பேருரை ... | கா. சுப்பிரமணியம் பிள்ளை | 107 |
| சைவ மங்கையர் மகாநாடு ... | ஸ்ரீமதி ஆண்டாளம்மாள் | 57 |
| சைவர் மகாநாடு ... | காரியதரிசி | 6 |
| திருக்குறளில் காணப்பெறும் சமய உண்மைகள் ... | அ. முத்தைய பிள்ளை | 191 |
| திருக்கோயில் ... | வீ. உலக ஊழியன் | 146 |
| திருச்செந்தூர் சுப்பிரமணிய வித்தியாசாலைப் பிரவேசச் சிறப்பு ... | சண்டுகளித்த தொண்டன் | 181 |
| திருத்தொண்டத்தொகை யாராய்ச்சி ... | வி. ச. அருளாநந்தம் | 199 |
| திருவெம்பாவைக் கருத்து ... | பத்திராசிரியர் | 257 |
| திலகவதியார் சரிதத்தின் அரும்பொருள்கள் ... | பண்டிதை - கிருஷ்ணவேணியம்மாள் | 204, 247 |
| தேவாரம் என்னும் சொற்பொருள் ... | ராம. சொ. சொக்கலிங்க ஐயா | 224 |
| நமது பத்திரிகை ... | பத்திராசிரியர் | 1 |
| நம் சமாஜத்தின் அரிய தொண்டுகள் ... | சைவத் தொண்டன் | 184 |
| நன்றி மறவாமை ... | சு. சுவாமிநாதன் | 78 |
| நினைப்பற நினைத்தல் ... | இ. ஆதிமூல முதலியார் | 270 |
| பஞ்சாக்கரமாலை ... | சோமசுந்தர தேசிகர் | 142 |
| பண்டைத் தமிழரின் சமயம் ... | K. சோமசுந்தரம் | 28 |
| பதினோராந் திருமுறை ... | கபிலர் | 180 |
| பெரிய புராணம் ... | C. K. சுப்பிரமணிய முதலியார் | 82 |
| பொதுநிலைக்கழக விழா ... | டிை கழகமாணவர்கள், நேயர்கள் | 242 |
| மரணத்தின் தன்மை ... | ‘நவசக்தி’ உதவி ஆசிரியர் | 128 |
| வையமெங்கும் சைவம் ... | “வீரசைவம்” | 43 |
| வெண்ணீறு ... | சிதம்பரம் சபாபதி சுவாமிகள் | 239 |
| ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் பேருரை ... | ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் | 3 |



சைவத் திருவாளர்

அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், எம். ஏ.,

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் உதவித் தலைவர்.

அப்பர் சுவாமிகள் தேவாரம் அச்சிட ஆயிரம் ரூபாயும், சுந்தரர் தேவாரத்துக்கு ஐந்நூறு ரூபாயும் முன் பணமாக உதவிய பெரியார்.

ருக்மணி குக்கர் கம்பெனி சொந்தக்காரர்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சித்தாந்தம்

" ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானதரு வாணியை உள்நாடு "


| | | |
|---|---|---|
| மலர் ௩ | சுக்கில ஆண்டு தை, மாசித் திங்கள் 1930 ஆம் ஜனவரி மீ, பிப்ரவரி மீ | இதழ் க, உ |


## நமது பத்திரிகை

[பத்திராசிரியர்]

நமது பத்திரிகையாகிய ஞானச் செல்விக்கு மூன்றாவது ஆண்டு தொடங்கி விட்டது. புதுவைமா நகரிலே புத்துயிர் கொண்டெழுந்த இச் செல்வி தனக்குப் புத்துயிர் கொடுத்த ஞானத் தந்தையைக் காண்பதற்குத் திருவெண்ணெய் நல்லூர் சென்றாள். ஆங்கு தனது தந்தையைக் கண்டு இன்புற்றதே யன்றி ஞானப்பாலையும் உண்டு இன்புற்றாள். இவள் திறனையும் ஞானப் போக்கையும் கண்ட சகோதரர்கள் வியப்புற்றார்கள். இவள் இயற்றும் திருப்பணிக்குப் பொருள் கொடுத்து உபகரித்தார்கள். இவளுக்குத் தந்தை நிலையிலிருக்கும் பல ஆன்றோர்கள் இவள் இன்பவாழ்க்கையைக் கண்டு பெருமகிழ்ச்சி எய்தினார்கள்.

மூன்று வயதிலேயே மும்மலங்களை யெரித்த ஞானச் செல்வரைப்போல் நமது ஞானச் செல்வியும் மும்மலங்களைத் தொலைக்கும் முத்தி உபாயங்களைப் போதிக்கத் தொடங்கி விட்டாள். நமது செல்வியின் திறமையைக் கண்டு மெச்சிய அறிஞர்கள் பலர், அரிய மாணிக்கப் பொருள்களைக் கோவை கோவையாகச் செய்து நமது செல்விக்கு அணிகலன்களாக அனுப்புகின்றனர். உலகோர் பயன்பெறுமாறு நமது செல்வியும் அவைகளை அச்சுவாகனமேற்றி விளக்குவள்.

சில நண்பர்கள் இச் செல்விக்குப் பயன் படுமாறு இருப்புக் கடலையை மெல்வது போன்ற பண்டங்களை யனுப்புகின்றனர். அத்தகைய பொருள்கள் இச் செல்விக்கும் இவள் சுற்றத்தார்க்கும் ஒருபோதும் பயன்படா வென்பதை அவர்கள் உணர்ந்திலர் போலும்! உணர்த்தினும் உணரார் போலும்! இருப்புக் கடலையை மெல்வதால் பல்லும் போகும், பசியும்வலுக்

கும், ருசியும் தொலையும், கசியும் குருதியே எஞ்சி நிற்கும். ஆகவே இத்தகைய மறக்கருணை புரியாதிருக்குமாறு நண்பர்களை நமது செல்வி மிகத்தாழ்மையுடன் வேண்டுகிருள்.

'கடாக்களை ஆசங்கித்துப் பரிகரித்துச் சூத்திரங்களைக் கண்ணழித்துரைத்து அவை என்னுதலியனவோ வெனின்' என்று தொடங்கி, 'மேற்கோடன் முதலியன' என்று முடிக்கும் வாணவேடிக்கைகளைக் கண்டால் நமது செல்விக்கு வெறுப்பே பெருகுகின்றது. "கல்லார் நெஞ்சில் நில்லான் ஈசன்" என்ற பழமொழியைப் பழைய மொழியாக்கி, பழையன கழிதல் என்ற முறையில் கழித்து, எல்லார் நெஞ்சினு நிற்பான் ஈசன் என்ற உண்மையின் படி, கல்லார் நெஞ்சினு முள்ளான் ஈசன் என்ற புதுமொழியைப் புதியன கோடல் முறைப்படிகொண்டு ஈசனை வருவிப்பதற்கு முன்னர் தானே கல்லார் நெஞ்சிற்சென்று குடிகொண்டு அவர்கள் நெஞ்சைப்பண்படுத்தி ஈசனை வரவேற்றுக் கல்லார் நெஞ்சிலும் இருத்தச் செய்வதே நமது செல்வியின் திருவிளையாடலாகும். ஆகவே மெல்வதற் கரிய இருப்புக்கடலையைத்தரும் நேயர்கள் இனியேனும் சொல்வதற்கரிய கடவுளின் அருளிருப்புக் கடலை உணர்ந்து அச் செல்வியின் திருவிளையாட்டுக்குரிய கலன்களை நல்குவர் என்று எதிர்பார்க்கிறேம். வேறு வகையான கலன்களை நமது செல்வியின் நண்பர்கள் நல்குவரேல் அவைகளை அவ்வருளிருப்புக் கடலுக்கே இரையாக்கி அவைகள் அமிழ்வதையோ அன்றி மிதப்பதையோ கண்டு நமது செல்வி இன்புறுவள் என்பது திண்ணம்.

மேற் கூறியதின் முடிபென்னவென்று நமது செல்வியின் தோழி வினவுகின்ருள். நமது பத்திரிகையின் நோக்கம் எளிய மக்கள் நமது சமய உண்மைகளை அறிந்து, கடவுளை வணங்கி, திருவருள்நெறியில் நிற்கவேண்டுமென்பதே அது. அந்த நோக்கம் நிறைவேறுவதற்கு நமது பத்திரிகைக்குக் கட்டுரை யெழுதி அனுப்பும் புலவர்கள் மிக எளிய தமிழில் எல்லோரும் உணரும் நடையில் நல்ல பொருள்களைப்பற்றி வீண் விவாதங்களுக்கு இடந்தராத முறையில் கட்டுரைகள் எழுதி உபகரிப்பதுதான் மிகச் சிறந்த உதவியாகும் என்பதை அவர்கட்கு மிகத் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேம். இதற்கு மாறுபட்ட வகையில் கட்டுரைகள் எழுதியனுப்புவோரை நமக்கும் நமது சமயத்துக்கும் உதவி புரிவதாக நாம் கருதமாட்டோம் என்பதையும் தெரிவித்துக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேம்.

நமது பத்திரிகையால் நமது சமாஜத்தின் பணிகளுக்குப் பேருதவியேற்பட்டிருக்கிற தென்பதை ஒருவரும் மறுக்கவியலாது. மகாநாடுகள் நடத்துவதற்கும், திருமுறை வெளியீட்டுக்குரிய உதவி புரிதற்கும், சமய விரோதமான இயக்கங்களை வேரற ஒழித்தற்கும், பல புலவர்கள் அரிய கருத்துக்களை வெளியிடுதற்கும், சமயப் பணியாளர்கள் பல விஷயங்களை அவ்வப்போது தெரிந்து கொள்வதற்கும் தெரிவித்துக் கொள்வதற்கும் கருவியாக இருந்ததும் இருப்பதும் நமது பத்திரிகையே. இந்நூற்ருண்டிலே இத்தகைய அரிய கருவியைக் கைவிடுதல் நீதியோ? கைவிடாது மழுங்க விடுதல்தான் நீதியோ? சம

யப்போரில் இக்கருவி யொன்றே பெரிதும் பயன்படுவது என்பது கண்கூடு. இக்கருவியை மிகச்செம்மையாக வைத்திருப்பது சைவர்கள் கடன். ஆகவே சைவர்கள் செய்தற்குரிய முதற்பணி ஒன்றுண்டு. அஃதாவது நமது பத்திரிகைக்குப் பெரும்பொருள் திரட்டித் தருவதேயாகும். நமது தமிழ் நாட்டிலும், தமிழ் வழங்கும் மலாய் முதலிய நாடுகளிலும் உள்ள ஒவ்வொரு சைவர் கையிலும் நமது பத்திரிகை இருக்கும்படி செய்வது இன்றியமையாதது.

இதற்காகப் பரிசும் போட்டியும் கூட வைக்கத் தயாராக இருக்கிறோம். அதற்காகவாவது சைவ மக்கள் தங்கள் கடமையைச் செய்வார்களா? எத்துணை ஆழம் இம்முறையீடு அன்பர்கள் உள்ளத்தில் ஊடுருவிச் செல்கிறதென்று ஒரு மாதகாலம் பார்த்து அடுத்த மாதம் நம் அநுபவத்தை மீண்டும் வெளி யிடுவோம். அதற்குள்ளாவது நமது நண்பர்கள் "இல்லையென மாட்டார் இசைந்து" என்று எண்ணுகிறோம்.

---

# ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் பேருரை

(திருவெண்ணெய் நல்லூரில்)

[உதவிக் காரியதரிசி தொகுத்தது]

**மெய்யன்பர்களே!**

இத்திருத் தொண்டில் அடியேனை அகப்படுத்திய இறைவன் திருவருளை மறவாதிருக்கும் கடமை உண்டு. அத்திருவருளும் தங்களன்பும் துணையிருக்க, அடியேன் இக்கடமையைக் கூடிய வரை செய்வேன் என்று துணிகிறேன்.

### நாட்டின் பெருமை

நாம் கூடியிருக்கும் இந்த நாடு நடுநாடெனப்படும். சேர சோழ பாண்டியராகிய மூவருக்கும் உரியதாக நடு நிலைமையி லிருந்தமையால் இதை நடு நாடென்று நூல் வழங்கும். நம் பெரியோரையும், நம்மையும் நம் சந்ததிகளையும் உய்விக்கத் தோன்றிய திருநாவுக்கரசு சுவாமிகளும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் தோன்றிய நாடு ஈதாம். மேலும், மெய்கண்டதேவர் பெருமான் திருவவதாரம் செய்ததும் இந்த நாட்டிலே தான். அருணந்தி சிவாசாரியர் தோன்றியதும், நாயன்மாரில் ஏழுபேர் அவதரித்ததும் இந்த நாட்டில் தான். இப்படி சமயாசாரியரும், சந்தானுசாரியரும் தோன்றிய இந்நாட்டில் இப்போது சைவமிருக்கும் நிலையைப் பார்த்தால் வருந்தத் தக்கதே.

### ஊர் பெருமை

இந்த ஊரை 'நல்லூர்' என்று பெரியோர் வழங்கினார்கள். வெண்ணெய்க் கோட்டை கட்டி உலகன்னையாம் மங்களாம்பிகை தவம் செய்த ஊரானதால் இதற்கு வெண்ணெய்நல்லூர் என்று பெயர். "பித்தா பிறைசூடி" என்ற தேவாரப் பாட்டிலும் இவ்வூரின் பெயர் வருவது காண்க. "நல்லார் தொழும் வெண்ணெய் நல்லூர்" என்றும் வரும். மேலும், இவ்வூரில் சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சிவபெருமான் தடுத்தாட் கொண்டதைப்பற்றிக் கூறுகையில், சேக்கிழார் சுவாமிகள் இதை "நல்ல அந்தணர் வாழும் வெண்ணெய் நல்லூர் நண்ணி" என்று சிறப்பித்துக் கூறியிருக்கிறார்.

## ஆலயச்சிறப்பு

நாமிருக்கும் ஆலயத்தின் பெயர் அருட்டுறை. நம் முதல் ஆசையானது அநுபவிக்கவேண்டிய பொருள் மேலே யே செல்கிறது. இது ஜன்ம ஜன்மமாக வருவது. இரண்டாவதுள்ளது அதிக ஆசையுள்ளவன் அதிக பணம் தேடு வது. அதன் பின், போக இச்சை உண் டாகிறது. இதனால் அநேக குற்றமிழை க்கநேரிடுகிறது. ஆனால் நமக்குவேண்டு வன முக்கியமாக மூன்று. அவைதான் அருள், அன்பு, அறம் என்பன. மனி தன் இரண்டு கால் பசு போன்றவன். பசுக்குப் புல், நீர், நிழல் தேவையான வை. அம்மூன்றும் கிடைத்ததும் அது ஒருவித விடுதலை யடைவதுபோல, மனிதன் ஆணவம் கன்மம் மாயை என்ற கட்டுக்களினின்று விடுபட்டு வீடுபெற அருள்வேண்டும். விடுபட் டடைவது வீடு. நமக்கவ் வீட்டை அடைவிக்கத் துறையா யிருப்பது அருள். ஆகவே, இது அருள்துறை எனப்பட்டது. கடுவன் இளவெயினனர் என்ற தமிழ்ப் புலவர் பரிபாடலுள்,

"யாமிரப்பவை பொன்னும்
பொருளும் போகமும்அல்ல
நின்பால் அருளும்அன்பும்
அறனும் மூன்றும்"

என்றார்.

"நின்னையா மிரப்பவை நுகரப் படும் பொருள்களும் அவற்றை உள வாக்கும் பொன்னும் அவ்விரண்டா னும் நுகரும் நுகர்ச்சியுமல்ல : எமக்கு வீடு பயக்கு நின்னருளும் அதனை யுண்டாக்க நின்னிடத்து யாம் செய்யு மன்பும் அவ்விரண்டானும் வரும் அறனுமாகிய இம்மூன்றுமே" என இதற்குப் பரிமேலழகர் மிக அழ காக உரை செய்திருக்கிறார். சைவர் கள் எப்போது மிறங்கி உழைக்க வேண்டியது அருளே-அருள் துறை யே. அதனலேயே அன்புண்டாகும். அன்பால் அறம் வளர்க்கலாம். அப் படிப்பட்ட அருள்துறையில் நாமிருக் கிறோம்.

நாமிருப்பது குணிப்பொருள். அதா வது நம்மிடம் சிற்சில குணங்களிருக் கின்றன. முக்கியமானவை இன்பம் பற்றவும், அதற்கெனத் தொழிலைப் பற்றவும் செய்யும் குணங்களாம். இவை அறிவை மறைத்து அசாக்கிர தையை வெளிப்படுத்துங் குணங்கள். அதாவது அழிவுடைய தேகத்தில் அழிவில்லாத தேகியை இறுக்கிக் கட் டுவது குணம். பகவத் கீதையிலும் ஸ்ரீகிருஷ்ணன் கச - ம் அத்தியாயம் ரு-ம் சுலோகத்தில்,

"ஸத்வ ரஜஸ்தம இதிகுண ஃ
ப்ரக்ருதி ஸம்பவா ஃ
நிபத்நந்தி மஹாபாஹோ தேஹே
தேஹிந மவ்யயம்"

என்று கூறுவது காண்க.

நாம் செய்ய வேண்டுவது நம் குண தோஷங்களை அறியவேண்டுவதே. நம் துன்பங்களை எப்படி நீக்குவதென்று நினைக்க வேண்டும். முற் சொன்ன முக் குணங்கள் நமக்கிருப்பது போல இறைவனுக் கில்லாமையால் இறைவன் நிர்க்குண ஃ என்ற பெயருடையவன். அவன் ஆத்மாவுக்கு வரும் துன்பத் தைத் தவிர்ப்பவன்.

"சிவ ஃ மஹேஸ்வா ஃ ருத்ர ஃ
விஷ்ணு ஃ பிதாமஹ ஃ
ஸம்ஸார வைத்ய ஃ ஸர்வக்ஞ ஃ
பரமாத்மா"

என்ற எட்டுப் பெயர்களில் இறைவனை 'ஸம்ஸார வைத்திய ஃ' என்றதால்

இறைவன் ஜீவர்களின் உயிருக்கு வந்த ஜன்ம ரோகமாகிய மலத்தைத் தொலைக்க வேண்டி, வைத்தியன் மருந்து கொடுப்பது போல், நம்மைப் பற்றிய மலம் மாயை இவைகளை நீக்கி ஆனந்த நிலையை யடைவிக்கிறான் என்பதறிகிறோம். நேயத்தால்-அன்பால்-பொன்னம்பலவன் நம்மை ஆனந்த வெள்ளத்தில் அழுத்துகிறான்.

சிவ: என்பதிலும் ஒரு முக்கிய அர்த்தமுண்டு. அதாவது ஒவ்வொன்றிலும் தங்கி யிருப்பவன் என்று பொருள். அப்பொருளை உணர்த்தவே **இறைவன்** என்று நந்தமிழர் உரைத்தனர்.

‘ சிவம் ’ என்பதற்கு மங்களம் என்றும் பொருளுண்டு. அம் மங்களமாகிய சிவத்தின் சம்பந்த முடையதே சைவம். அதைப் பற்றியதே சைவ சாத்திரம். ஆனால் இதைச் சைவ சித்தாந்த சாத்திரமென்பர். இது திருக்கைலாயத்தில் நால்வர்க் குரைத்ததாகும். சித்தாந்தம் என்றால் முடிபு என்று பொருள். சிவபெருமானைப் பற்றிய முடிந்த முடிபுக ளாகையின் இது சைவ சித்தாந்த சாத்திரமெனப்படும். சைவத்தைப் பரப்பி எல்லாருக்கும் இன்பம் அளித்தவரே இத்திரு வெண்ணெய் நல்லூரில் பிறந்த குருமூர்த்தியாகிய மெய்கண்ட தேவ சுவாமிகள். ‘ திருவளர் நாட்டம் கருணையில் ’ என்ற பாட்டில் பட்டினத்தார் உரைப்பதுபோல், திருவருள் நாட்டத்தால் யாவும் பொய்யாகி இறைவனே மெய்யாகத்தோன்ற அவ்விறைவனைக் கண்டவ ராதலின் அவருக்கு மெய்கண்டார் என்னும் பெயர் வந்தது. காலாதீதமாகச் சைவம் நூல்களால், ஆசாரியர்களால், வளர்ந்தது. ஆனால் தற்போது சைவரது நிலை வருந்தத்தக்கதா யிருக்கிறது. ஆண் மக்கள் மட்டுமன்றிப் பெண் மக்களும் நன்குணர்ந்து சைவ நெறியில் நிற்றல் வேண்டும். பெண் மக்களால் தான் சைவம் சிறப்புற்றதென்பதைச் சேக்கிழார் சுவாமிகள்,

“ மங்கையர்க்குத் தனிஅரசி எங்கள்தெய்வம்
திருக்குலக் கொழுந்து ” [வளவர்

என்ற பாட்டில் மிக அழகாகப் பாடி ஒரு பெண் சைவத்திருநீற்றைப் பரப்பிய பெருமையைக் கூறியிருக்கிறார். ஆகையால் முக்கியமாகப் பெண்கள் சைவத்தைப் பரப்ப முந்துதல் வேண்டும். இந்த ஊருக்குச் சமீபத்தில் நரசிங்கபுரத்தி லிருந்தாண்ட அரசர்கள் நம் சைவத்தை வளர்த்தார்கள். அரசிகளும், மடங்களும், ஆசாரியர்களும் சைவத்தை வளர்த்தார்கள். ஆனால் நம் தற்போதைய அரசாங்கம் சைவத்தைப் பரப்பாவிடினும் நாம் பரப்பத் தடை செய்யாது சுதந்திரம் கொடுத்திருக்கிறது. தமிழ் நாட்டில் பலர் - சைவர்கள் - பிற சமயத்தில் சேரும் நிலையி லிருக்கின்றனர். ஆனால் சைவ சித்தாந்தத்தைப் பற்றி, திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த (Pope) போப் என்பாரும் (Godwin) குட்வின் என்பாரும் போற்றிப் போற்றி எழுதியிருப்பது நோக்கத் தக்கது.

சமீபத்தில் கனம் வைசிராய் தமிழ் நாட்டுக்குப் போந்தபோது நம் சைவ சித்தாந்தத்தின் சார்பாக எவரேனும் ஏதேனும் பத்திரிகை வாசித்துக் கொடுத்தார்களா? இல்லை. ஆனால் சென்னையில் மகம்மதியர் அவருக்குப் பத்திரிகை வாசித்துக் கொடுத்தார்கள். அப்

பத்திரிகைக்குக் கனம் வைசிராய் இறுத்த மறுமொழி நோக்கற் குரிய தாகும்.

நாம் செய்ய வேண்டுவது நம் சைவ சித்தாந்தத்தைப் பரப்புதலே. இவ் வேலையைச் சைவ மடங்களின்மேல் ஏற்றி விடுவது வழக்கமா யிருக்கிறது. ஆனால் அது இயற்கையே. அதற் காகச் சைவ மடங்கள் தற்கால நிலை யுணர்ந்து உதவி செய்ய முன்வருவது சிறப்பாகும். இதற்கோ ரறிகுறி, திருவாவடுதுறை மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிக சுவாமிகள் நம் சைவ சித்தாந்த மகா சமாஜத்திற்கு ரூ. 100 (நூறு) நன் கொடை யளித்திருப்பதாகும்.

கிறிஸ்தவ மதத்தவர் 'All India Reverends Conference' என்று பெரிய, ஒரு மகாநாடு கூட்டுவதுபோல நாமெல்லோரும் சேர்ந் துழைத்தால் தமிழ் நாடெல்லாம் சைவம் தழைத் தோங்கும்."

---

# சைவர் மகாநாடு

நிகழ் சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள் அஉ (22-12-29) அன்று காலை திருவெண்ணெய் நல்லூரில் திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை யவர்கள் தலைமையில் விஷயாலோசனைக் கூட்டம்நடந்தது. மறுநாட்காலையில் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞானசிவாசாரிய சுவாமி கள் தலைமையில் சைவர் மகாநாடு கூடிற்று. ஒவ்வொரு தீர்மானத்தைப்பற்றியும் பல அன் பர்கள் பேசினார்கள். கீழ்வரும் தீர்மானங்கள் நிறைவேறின :—

க. தமிழ்நாட்டுச் சைவசமயச் சிறுவர் சிறுமிகட்குச் சமயஞானத்தை இயன்றவளவு புகட்டற் பொருட்டுச் சைவசமய வினு விடையையும், சமயாசாரியர் சரிதங்களையும், திருமுறைத் திரட்டொன்றையும் இலவச மாகவும், மிகக் குறைந்த விலைக்கும் அச்சிட் டுத் தருதற்கு இம்மகா சமாஜம் தீவிரமாக முயற்சி செய்யவேண்டும்.

உ. இவ்வேலையை நிறைவேற்றுவதற்குத் திருவாளர்கள் ந. மு. வேங்கடசாமி நாட்டார் ச. சச்சிதாநந்தம் பிள்ளை, கி. குப்புச்சாமி முதலியார் அ. மு. சரவண முதலியார் ஆகிய நால்வர் உட்கழகமாகப் பணி செய்தல்வேண் டும்.

இப்பணியில் அச்சு வேலைக்கு வேண்டிய தற்கெனப் பொருளுதவி செய்ய முன் வந்த பெரியார்கள் :—

| | | | ரூ. |
|---|---|---|---|
| 1. | திரு. | சதாசிவக்கண்டியார் அவர்கள், ஆவாரம்பட்டி | 50 |
| 2. | ,, | ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், திரிசிராப்பள்ளி | 50 |
| 3. | ,, | ராவ்சாகேப் குழந்தைவேல் உடையார் அவர்கள், முடிய னூர் | 50 |
| 4. | ,, | க. சபாபதி முதலியாரவர்கள், கட்டியாம்பந்தல் | 50 |
| 5. | ,, | P. தானப்ப முதலியாரவர்கள், சென்னை | 25 |
| 6. | ,, | P. K. இராமலிங்க செட்டி யார், அங்குசெட்டிபாளையம் | 25 |
| 7. | ,, | பரமசிவசுவாமிகள், திருவை யாறு | 5 |

௩. சென்னையில் பல்கலைக் கழகத்தார் வட மொழியில் வியாகரணம், மீமாஞ்சை, தருக் கம், வேதாந்தம், சாகித்யம் முதலியவற்றிற் குத் தனித்தனி தேர்தல்கள் வைத்திருத்தல் போலத் தமிழிலும் இலக்கணம், சங்கநூல், நீதிநூல், சித்தாந்தம் முதலியவற்றில் தனித்

தனி தேர்தல்கள் வைத்துத் தேரியவர்கட்குப் பட்டமும், பரிசும், அளித்தல் வேண்டும் என்று இம் மகாநாடு அன்னாரைக் கேட்டுக் கொள்கிறது.

௪. சென்னைப் பல்கலைக் கழகத்தார் சைவ சித்தாந்த நூல்களுக்குச் சிறப்பாக ஏற்றம் அளிக்குமாறு அவர்களை இம்மகாநாடு வேண்டு கிறது.

ரு. மேற்கண்ட ௩, ௪-வது தீர்மானங்களைத் தாங்கள் உடனே நிறைவேற்றுமாறு இம்மகாநாடு சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தாரை வேண்டுகிறது.

௬. "ஒவ்வொரு கிராமத்திலும் சண்டேசுவர நாயனார் சங்கம் ஒன்று தாபித்து நாலைந்து பசுக்களைக் குறைவில்லாமல் வளர்த்து விபூதி தயார் செய்வதற் கென்றே ஏற்படுத்த வேண்டும்" என்ற தீர்மானம் "சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் ஒவ்வொரு கிளைச் சபையும் பல கிராமங்களுக்குச் சென்று விபூதி தயார் செய்ய முயல வேண்டும்" என்று திருத்தப்பட்டு நிறைவேறிற்று.

எ. சைவ சமயாசாரியர்கள் திருவவதரித்த இடங்களை நன்னிலையில் இருத்த வேண்டுவது நமது கடமையாதலின் சமாஜ அங்கத்தினர்களில் ஒரு கணக்கிட்ட குழுவினர் அவைகளைப் பார்வையிட்டுத் தகுந்த ஏற்பாடுகள் செய்வதோடு, நால்வர் சரித்திர சம்பந்தமாகக் கிடைக்கும் சின்னங்களைச் சேகரித்துக் காப்பாற்ற ஏற்பாடு செய்வதோடு, 'சித்தாந்தம்' வாயிலாகத் தெரிவிக்க வேண்டும்.

அ. சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் உட்கிளையாகச் 'சைவத் துறவிகள் திருக்கூட்டப் பகுதி' ஒன்றேற்படுத்தித் தக்க விதிகளை அமைத்துக்கொண்டு அத்துறவிகளிலிருந்தே ஒரு பெரியாரைத் திருக்கூட்டப் பகுதிக்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலா மென்றும், சைவத் துறவிகளின்னாரென அன்பர்கள் எளிதிலறிந்து கொள்ளுமாறு தக்க சின்னங்களைத் தலைவர்பால் பெறுதல் நலமாமென்றும், மகா சமாஜத்தின் ஆதரவில் மேற்படி திருக்கூட்டத்தினரைக் கொண்டு சைவ சமயத் தொண்டுகளை நிகழ்த்துவித்தல் பெரும் பயனுடையதாகு மென்றும் இம்மகாநாடு கருதுகின்றது.

௯. இக்காலத்தில் சைவ சமயத்திற் கேற்பட்டுள்ள ஆபத்துக்களினின்றும் நம் சமயத்தாரைப் பாதுகாத்து வளர்த்தற் பொருட்டு சமயப் பிரசாரகர்களை நியமித்துச் சமயப் பிரசாரம் செய்வித்தல், நூல் வெளியிடல், துண்டுப்பிரசுரம் வழங்கல் முதலிய வழிகளில் திருத்தொண்டைச் சீரியமுறையில் நடைபெறச் செய்வதற்கு வேண்டிய உதவிகள் யாவற்றையும் விரைவிற் புரிந்தருளும்படி தமிழ்நாட்டுச் சைவப் பெருமடங்களை இச் சைவமகாநாடு பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறது.

௧௦. இவ்விண்ணப்பத்தை மடாலயத்தவர்கட்கு நேரில் தெரிவிக்கும் பொருட்டு அடியிற் காண்பவர்களைப் பிரதிநிதிகளாக இச் சைவ மகாநாடு நியமிக்கிறது; இவர்கள் தமக் கவசியமென்று தோன்றும் வேறு பிரமுகர்களையும் தம்மொடு சேர்த்துக் கொள்ளலாம்.

பிரதிநிதிகளின் பெயர்களாவன :—

1. திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை அவர்கள், மாஜி தாசில்தார், திருநெல்வேலி.
2. திரு. T. நல்லசிவம் பிள்ளை அவர்கள், அட்வகேட், சென்னை.
3. திரு. T. V. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், தஞ்சாவூர்.
4. திரு. K. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., M. L., சிதம்பரம்.
5. திரு. அ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள், M. A., சென்னை.
6. திரு. பாலி-சு. நெல்லையப்பப் பிள்ளை அவர்கள், "லோகோபகாரி" பத்திராசிரியர், சென்னை.
7. திரு. P. முத்தைய செட்டியார் அவர்கள், B. A., B. L., தேவஸ்தானக் கமிட்டி அங்கத்தினர், கூடலூர்.
8. திரு. W. T. மாசிலாமணி முதலியார் அவர்கள், வாலாஜாபாத்.
9. திரு. L. N. பரமேஸ்வரம் பிள்ளை அவர்கள், டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பர், லால்குடி.
10. திரு. கே. ஆறுமுகம் பிள்ளை அவர்கள், வடிவீசுவரம், திருநெறித் தொண்டர் குழாம் தென் திருவிதாங்கூர்.

### சைவ சித்தாந்த மகா சமாஜம்

# இருபத்து நான்காம் ஆண்டு விழா

[ப. கந்தநரசிம்மன், பி.ஏ., பி.எல்., உதவிக்காரியதரிசி]

'நல்ல அந்தணர் வாழும் வெண்ணெய் நல்லூர்' என்று சேக்கிழார் பெருமானால் சிறப்பித்துக் கூறப்பட்டதும், இயற்கை அழகு வாய்ந்ததும் அருட்டுறையெனுந் திருக் கோயில் தன்னகத் தொளிரப்பெற்றதுமான திருவெண்ணெய் நல்லூரிலே இச்சமாஜத்தின் இருபத்து நான்காம் ஆண்டு நிறைவிழா நிகழும் சுக்கில ஆண்டு மார்கழித் திங்கள் அ, கூ, க0-ஆம் நாட்களாகிய (1929ஞு டிசம்பர்மீ 22, 23, 24உ) ஞாயிறு, திங்கள், செவ்வாய்க் கிழமைகளில், திருக்கோவலூர் ஆதீனம் ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் என வழங்கும் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அப்போது அருட்டுறையாகிய திருக்கோவில் அன்பும் அறிவும் அருளும் நிறைந்து விளங்கும் பேரவையாக இருந்தது.

முதல் நாள் பிற்பகல் க-மணிக்கு ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியசுவாமிகளை மேள வாத்தியத்துடன் அழைத்துக் கொண்டு ஊர்வலம் வந்ததும், திருக்கோயிலிலுள்ள மண்டபத்தில் பேரவை குழுமியது. திருப்பாதிரிப் புலியூர் தேவார பாடசாலை ஆசிரியர் திரு. மு. நடராஜ ஓதுவார் மூர்த்திகள் அவர்களால் கடவுள் வணக்கமானதும், திரு ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார்எடுத்து மொழிய, திரு மா. வே. நெல்லையப்ப பிள்ளை அடுத்து மொழிய, தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம், தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை, பாளயங்கோட்டை சைவ சபை, பூவாளுர் சைவ சித்தாந்த சபை, திரிசிராப்பள்ளி சைவ சித்தாந்த சபை, சிவகங்கை நால்வர் திருச்சபை, காஞ்சி ஞானியார் கழகம், சிந்துபூந்துறை அறத் திருநெறிக் கழகம், "சிவநேசன்" அடியார் கழகம் முதலிய பல சபைகளின் சார்பாக வந்திருந்த அன்பர்கள் பலர் தொடுத்து மொழிய ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகள் தலைமை பூண்டார்கள். சைவசித்தாந்த மகா சமாஜத்தார் ஸ்ரீலஸ்ரீ சுவாமிகளை அன்புடன் வரவேற்கும் நல்வரவுப் பத்திரிகைகள் இரண்டினையும் திரு கி. குப்புச்சாமி முதலியார் சமாஜத்தின் சார்பாக வாசித்து வழங்கினர்.

திருவாவடுதுறை ஆதீனத்தின் பிரதிநிதியாக ஸ்ரீமத் குமாரசாமித் தம்பிரான் சுவாமிகள் விழாமுழுமையும் உடனிருந்து உபகரித்ததோடு ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகளுக்கு அவ்வாதீனத்தார் அனுப்பிய இரு காவியுடைகளையும் சமர்ப்பித்தனர். மேலும், சைவ சித்தாந்த மகாசமாஜம் இயற்றிவரும் பணிகளை மெச்சி, அச்சமாஜ விழாவுக்குப் பயன் படும்படியாக திருவாவடுதுறை ஆதினத்தார் அனுப்பிய நன்கொடை ரூபாய் நூறையும் தலைவர் அவர்களிடம் சமர்ப்பித்தனர். பின்னர் திரு ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார் சமாஜத்தின் ஆண்டு அறிக்கைப் பத்திரம் வாசித்தனர். (இதை மற்றோரிடத்தில் காண்க.)

பிறகு, ஸ்ரீமத் ஞானியார் சுவாமிகள் சிந்தைக்கினிய செவிக்கினிய வந்த விருவினைக்கினிய தமது பேருரையை ஒளியாரும் வெளியாரும் ஒருங்கே உணர்ந்து வியப்ப நிகழ்த்தினார்கள். (இதன் சுருக்கத்தை மற்றோரிடத்தில் காண்க.)

பின்பு, சைவசித்தாந்த மகா சமாஜத்தின் ஆண்டு நிறை விழா இன்பத்தை ஆக்கஞ் செய்யும் சொற்பொழிவுகள் தொடங்கின.

முதல்முதலாக திரு.கி. குப்புச்சாமிமுதலியார் "சென்றடையாத திருவுடையான்" என்ற அரிய பொருள்பற்றிப் பேசியபோது, பிறரைச் சென்று அடையாத திருவைத் தன்னிடத்தே உடையான் என்ற பொருளைச் சிறப்பாகவும் ஏனைய பொருள்களைக் குறிப்பாகவும் விளக்கினர்.

அவரை அடுத்துத் திரு. E. N. தணிகாசல முதலியார், (அட்வகேட்) "தேவாரம் கற்க

வேண்டிய வயது'' என்பதைப் பற்றிப் பேசியபோது மக்கள் வாழ்க்கைக்குரிய எல்லா அறிவு வகைகளையும் நிரம்ப, தன்னகத்தே கொண்டு மிளிர்வது தேவாரக் களஞ்சியம் என்றும் அதைப் பிறந்தது முதல் இறுதி வரையில் இடைவிடாது பயில வேண்டு மென்றும் கூறினர்.

பின்பு, திருநிறைச்செல்வி E. T. இராஜேஸ்வரி அம்மாள், பி. ஏ., "இயற்கைத் தத்துவ நூலும் சைவ சமயமும்'' என்ற பொருள் பற்றி, மேனாட்டறிஞர் சமீபத்தில் ஆராய்ந்து கண்ட அணுசாத்திர உண்மைகளைத் திருவாசகத்தில் திருவண்டப் பகுதியிலுள்ள மணிவாசகரது பாடல்களில் காணலாமென்றும், திருநாவுக்கரசு சுவாமிகள், "மாதர்பிறைக் கண்ணியானை'' என்று பாடிய பாடல்களில் சத்திசிவ மிரண்டும் உடனுறைந் தியங்கும் பெற்றியை நோக்கிலுல்—காரிய அணுக்கள் காரண அணுக்கள் இயங்கும் நிலையைப் பௌதிக ஆராய்ச்சியாளர் கூறும் உண்மையை அப்பாடல்கள் தெரிவிக்கின்றன வென்றும் கூறி, திரிபுரத்தை எரித்த கதை வரலாற்றால், 'ஒளியால் கொல்லலாம்' என்ற (X—Ray) உண்மையை நன்கு விளக்கியும், கடவுள் சோதிமயம், நாதமயம் என்று சைவ நூல்கள் கூறுவதை ஒளிநூல் ஒலி வல்லார் முடிபுகளை ஒட்டி விளக்கியும், அவ்வப்போது பலகையில் வரி வடிவங்கள் வாயிலாகத் தெளிவித்தும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய,

"நாதனை நாதத்தின்ஓசை உளானை''

என்ற தேவாரப் பாடல்களில் சிலவற்றைப் பண்ணுடன் பாடியும், அவையை அகமகிழ்வித்து அறிவைப் பெருக்கினர். (இச்சொற்பொழிவு பின்னர் வெளிவரும்.)

பிறகு திரு. அ. மு. சரவண முதலியார் 'அரசும் கன்றும்' என்ற பொருள்பற்றி, திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசு சுவாமிகளை அப்பராகக் கொண்டு உறவாடிய நட்பங்களையும், சொற்கோவும் தோணிபுரத் தோன்றலை "பிள்ளாய்'' என அழைக்க நேர்ந்த சந்தர்ப்பத்தையும் மிக விரிவாக விளக்கினர்.

பிறகு, திரு. அ. முத்தைய பிள்ளை பி. ஏ., பி. எல்., சிவஞான போதமும் திருக்குறளும் என்ற பொருள்பற்றிப் பேசுகையில் திருக்குறளின் கருத்தே சைவ சித்தாந்தத்தின் கருத்தெனவும், சிவஞான போதத்தில் உள்ள கஉ சூத்திரங்களிலுள்ள சைவ சமயஉண்மைகளைத் திருக்குறளில் காணலாம் என்றும் , இருபெரும் நூல்களிலுள்ள ஒற்றுமைப் பகுதிகள் இவை என்றும் எடுத்துரைத்தனர்.

பின்பு,சென்னை உயர்தர நீதிமன்றவழக்கறிஞர் திரு. பா. கந்தநரசிம்மன் பி. ஏ. பி. எல்.

"முன்னைப்பழம் பொருட்கும்
முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும்
பேர்த்துமப் பெற்றியனே''

என்ற மணிவாசகப் பெருமானருளிய பாடல்களின்டிகளைப் பீடிகையாகக்கொண்டு பேசுகையில் கடவுளே எல்லாவற்றிற்கும் ஆதியாகையின் அதுவேஎல்லாவற்றிற்கும் பழைய முழுமுதற் பொருளாய் விளங்குவதெப்படியென்றும் கடவுளே மனிதனுணர்விற்கும் ஆராய்ச்சிக்கும் முடிவில் தோன்றும் புதுமையாக விளங்குவார் என்றும் விளக்கி, இனி நாம் முடிவில் பெறப்படும் புதுமையான இன்பம் இறையின்பமே யானதால் இவ் விறைவனே எப்புதுமைக்கும் புதுமையான பொருளெனவும், இப்புதிய உண்மையை உலகுக்கெடுத்துரைக்கும் கடமை இந்தியருக்கும் அவர்களிலேயும் சைவருக்கும் உண்டாகையால் சைவத்தை உலகெலாம் பரப்பச் சைவமக்கள் உழைக்க வேண்டு மெனவும் கூறி, ஆழ்ந்த கருத்துக்களுடனும், சமயப் பற்றுண்டாகுமாறு ஊக்கத்துடனும் பேசி முடித்தனர்.

இரண்டாம் நாள் பிற்பகல் மீண்டும் சபை கூடிற்று. அப்போது திரு. C. S. இராஜா பிள்ளை "சேரன் செங்குட்டுவன்'' என்பதைப்பற்றிப் பேசுகையில், செங்குட்டுவன் ஓர் ஆற்றல்மிக்க அரசனா யிருந்ததுமன்றி, தெய்வபக்தி மிகுந்து தன் போகத்தைத் துறந்து ஓர் ஆலயத்திருந்தவன் என்பதை நன்கு விளக்கினர்.

பிறகு, திரு. வை. கந்தசாமி முதலியார் "சிவன் செயலும் சீவன் செயலும்'' என்

னும் பொருள்பற்றி, 'சிவன்' என்றால் மங்கள சொரூபன், பூரண அறிவுள்ளவன், பூரண இன்பமுடையவன் என்றும் சிவன் தன் பூரண அறிவைக் கொடுத்து ஆனந்தங் கொடுக்கவே செயல் செய்கிறான் என்றும், பூரண ஆனந்தத்தைப் பெற முயலுவதே சீவன் செயலாகும் என்றும் விளக்கினர். (இவ்விரு சொற்பொழிவுகளும் பின்னர் வெளிவரும்).

பிறகு திரு. C. S. சுவாமிநாத முதலியார் பி. ஏ., 'இத்தருவாயின் தேவை' என்பதைப்பற்றிப் பேசும்போது, தற்போது உலகு, சமுதாயம், சமயங்கள் முதலியவைக ளிருக்கும் நிலையில் சிறப்புப் பகுதிகளைவிடப் பொதுப் படையான விஷயங்களையே வற்புறுத்துவதால் நன்மை வளரும் எனவும், ஒழுக்கத்தால் பெரியாரின் கருணையைப்பெற லாம் எனவும், திருவள்ளுவர் சமயத்தைவிட ஒழுக்கத்தையே தம் நூலில் சிறப்பித்திருக்கிறார் எனவும், ஆகையால் நாம் நாடோறும் எழுந்தது முதல் படுக்கச் செல்லும்வரை ஒழுக்கத்துடன் ஈசுரார்ப்பணமாக எல்லாக் காரியங்களையும் செய்து வாழவேண்டும் எனவும் நன்றாக விளக்கினர்.

பின்பு திரு ந. சிவகுருநாத பிள்ளை 'சைவத் தனியரசு' என்பதைப் பற்றி விரிவுரை நிகழ்த்தும் போது, சைவம் தனித்த நிகரற்ற ஒரு சமயமாகு மென்றும், சைவசமய உண்மைகள் மாறுபடாதவை யென்றும், அவை பௌதிக நூல் வல்லார் முடிபுகளுக்கு முரண்படாது ஒத்து வருவன வென்றும், 'உள்ளது போகாது, இல்லது வாராது' 'எவ்வுயிர்க்கு மன்புசெய்' முதலிய நம்சமய வாக்கியங்களில் மிக ஆழ்ந்த கருத்துக்கள் அடங்கி யிருக்கின்றன வென்றும், மோன நிலையுமாகி யுள்ளது சிவம் என்பதால் சைவம் சிறந்ததோர் உண்மையைக் காட்டுகிறது என்றும், ஆகையால் கொல்லா விரதங் கொண்ட இச்சைவ மார்க்கத்தை உலகெல்லாம் பரப்ப வேண்டும் என்றும் இனிது பேசி முடித்தார்.

அவருக்குப் பின், திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை பி. ஏ., எல். டி., "பிற சமயிகளிடமிருந்து சைவர்கள் கற்றுக் கொள்ள வேண்டியவை" என்ற பொருள்பற்றிப் பேசுகையில், எல்லா மதத்தின் உயரிய கொள்கைகளையுஞ் சைவம் தன்னுள் ளடக்கிக்கொண்டுள்ளது; எல்லா மதத்தினும் உயர்ந்தொளிர்கிறது. அச்சீரிய சமயத்தை யனுட்டிப்பவர் எனக் கூறிக் கொள்ளும் சைவர், புறச் சமயத்தவரிட மிருந்து கல்வியி லாசை, சமயப் படிப்பாளரைப் போற்றல், வறுமையிலும் சமயச் சடங்குகளை அநுஷ்டித்தல், சமய நூல்களில் ஆர்வம், சமயப் பிரசாரம், சுத்தமான வழிபாடு, சாதி பேத மின்மை, ஆண்டவனிடம் அதிதீவிர அன்பு, தன் சமயத்தாரிடம் சகோதரத்வம், சமத்வம் காட்டல், கோயில்களில் தொழப் போகும்போது தோட்டிமுதல்தொண்டமான் வரை யாவரும் சமமாக வழிபடல், நாகரிகமற்றாருக்கும் சமயபோதனை செய்து தம் சமயத்தைத் தழுவச் செய்தல், சமய நூல் வளர்ச்சிக் கேற்ற பொருளுதவுதல், பிணி தீர்த்தல் கல்விச் சாலைகள் வைத்தல் ஆகிய பொது ஜன சேவை புரிந்து தம் மதத்தினைப் பின்பு பரப்புதல், சமய வளர்ச்சிக்கெனத் தன் வருவாயில் ஒருகூறு கொடுத்துதவுதல், குருகுலங்கள் பள்ளிகள் வைத்து தீண்டாதார் என்றொதுக்கப்பட்டவர்களை மேம்பாடடையச் செய்தல், ஆகிய குணங்களை நாம் பின்பற்றி நடந்து சைவத்தைப் பரப்ப வேண்டுமென்று மிக்க ஆர்வத்தோடுபேசினர்.

மூன்றாம் நாள் காலை ஒன்பது மணிக்குத் திருவருட்டுறையில் மீண்டும் அவை குழுமியது. திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, பி ஏ., "சைவ சமய உண்மைகள் தற்காலத்தில் மக்கள் முன்னேற்றத்திற்கு எத்துணைப் பொருத்தமாயுள்ளன" என்னும் பொருள்பற்றிப்பேசும்போது, "'நாகரிகம்' என்பது 'திருத்தம்' எனப்பொருள்படும். அது வெறும்வெளி ஆடம்பரமல்ல. தமிழர் நாகரிகமே எல்லா நாகரிகத்துக்கும் தாயா யிருந்தது. தமிழர் நாகரிகமே கிரேக்க, உரோம தேசங்கட்குச் சென்றது. 'அறிதல்' என்பது மேலிருந்து கீழ்வந்தறிதல், அதாவது அருள்நிலையிலிருந்து கீழ்வந்தறிதல் எனவும், கீழிருந்து மேல் சென்றறிதல், அதாவது உலகிலிருந்து அருள் நிலை சென்றறிதல் எனவும் இருவகைப்படும். கிரேக்க உரோமர் நாகரிகங்கள் பின்னைய

வகை; தமிழர் நாகரிகம் முன்னேய வகை. ஐரோப்பிய யுத்தத்தின் பிறகு போட்டிநெறி மறைந்து அருள் நெறியாம் சகோதரநெறி அல்லது அன்புநெறியே சிறப்பாக விளங்குகிறது. சைவசமய உண்மைகள் இச்செந்நெறியைப் பற்றியனவே யாம்'' என இனிது விளக்கினர்.

பின்பு, திரு. சிதம்பரநாதம் பிள்ளை ''நடராஜ தத்துவம்'' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தும்போது, இருள் என்பது அகண்ட இருள், கண்ட இருள், அக இருள் என மூவகைப் படும் எனவும் முன்னிரண்டு மகல சூரிய சந்திரர்களும் மூன்ருவ திருள் அகல ஞானமாகிய ஒளியுமிருக்கின்றன வென்றும், அந்த ஞானத்தைக்குறிப்பாகக்காட்டுவதே அம்பலம் அல்லது நடராஜப்பெருமான் திருநடமிடும் சிதம்பரம் என்றும், மூன்று சிதம்பரத் தலங்கள் மனிதவுடலில் ஞான நிலையங்களாம் தலை, புருவமத்தி, நெஞ்சு என்பவைகளைக் குறிக்கின்றனவென்றும், ஒருகாலூன்றி ஒருகால் தூக்கி நடராஜர் நடனமிடுவது நம் இருதய அமைப்பைக் குறிப்பதாகுமென்றும், நடராஜர் திருக்கூத்தென்பது உலகம் நிகழ்வதைக் குறிப்பதென்றும், ஒரு காலெடுத்து ஒருகால் தூக்கி ஆடுவதென்பது, நாம் மாறி மாறி மூச்சு விடுவதைக் குறிப்பதென்றும், சுத்தசிவானுபவ நிலையே அப்பெருமான் நடிக்கும் நிலையென்றும், உயிர்களுய்யக் காட்டுவதே அபயஹஸ்த மென்றும், அவ்வுய்விற்கேற்ற துணை தன் பாதமே எனக் குறிப்பது மற்ருெரு ஹஸ்தமெனவும், இவ்வுண்மையை தீ சாட்சியாக உறுதி கூறுவதாகப் பெருமான் குறிக்கிருர் என்பதற்கே ஒரு கையில் நெருப்பிருக்கிறதென்றும், இன்னும் பிற சின்னங்கள் பல உண்மைகளைக் குறிப்பன வென்றும் தெளிவாக எடுத்து விளக்கினுர்.

அவரை அடுத்து உயர்திரு கருணையசுவாமிகள் ''அடியாரும் சமயப்பணியும்'' என்ற பொருள்பற்றிப் பேசுகையில் ''புறஅக இலக்கணங் கொண்டிலங்குபவர்களே உண்மை யடியார்கள். வெறும் வேடந்தாங்கி எம்மடத்திற் கும்சாராது இருப்பவர்க்கு ஒருசிக்ஷைவிதித்தலும் வேண்டும்; சந்நியாசவேடந் தாங்குவதற்கொரு வரம்பிருத்தல் வேண்டும். பல போலி வேடதாரிகளான திண்ணைத் தூங்கிகளை நற்பணிகளியற்றும் துறையிற் செலுத்த சைவர் மகாநாடு தீர்மானங்கள் செய்ய வேண்டும். மடாதிபதிகளும் உண்மையான அடியார்களும் முயன்று பிரசங்கங்கள் புரியவும் கல்விச்சாலைகள் அமைக்கவும் உதவிபுரிய வேண்டும்'' என்று குறிப்பிட்டார்கள்.

பின்பு திரு. சோமசுந்திரம் ''தமிழ்'' என்பதுபற்றிப் பேசுகையில் நாம் நம்மொழி வளர்ச்சிக்கான வழிகளில் முற்பட்டுழைக்க வேண்டுமென மிக உருக்கமாகப் பேசினுர்.

பிற்பகல் சுமார் 2-30 மணிக்கு மீண்டும் அவை குழுமியது. காவித்தண்டலம் திரு. வேதாசலமுதலியார் ''வன்ருெண்டர் பிரபாவம்'' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில் தமிழ்நாடுய்யவே சுந்தரமூர்த்திசுவாமிகள் இந்நாட்டில் அவதரித்தார் என்று சேக்கிழார்சுவாமிகள் சொன்ன அழகை எடுத்துச் சொல்லி, சுந்தரமூர்த்தி சுவாமிகளே இளவயதில் வாகீச மூர்த்திகளைக் காட்டிலும் அதிக எண்ணுள்ள பாடல்களைப் பாடினுர் என்று விளக்கினுர்.

அவரை அடுத்துத் திருக்கழுக்குன்றம் மறைத்திரு - சந்திரசேகர சிவாசாரியார் ''மோக்ஷ உபாயம்'' என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசும்போது, 'மோக்ஷம்' என்பது பாசத்திலிருந்துவிடுபடல் அல்லது சர்வேசுவரனை அடைதல் என்றும், எல்லாவற்றையும் இயக்கும் சிற்சக்திபெற்ருல் அதையடையலாமாகையின் அச்சிற்சக்தியை அடைய ஏற்பட்டதே தீக்ஷை என்றும், தீக்ஷையால் தான் ஞானம் பெறலாமென்றும், கர்ம யக்ஞங்கள் நான்கும், ஞானயக்ஞம் ஒன்றும் மோக்ஷமடைவதற்கான சஹ காரியங்களே என்றும், கருமத்தை அநுபவித்தலினுலேயே பாசம் நீங்குமென்று சிவாகமங்கள் கூறுகின்றன வென்றும் சொல்லி பல வடமொழி எடுத்துக் காட்டுகளுடன் விளக்கினுர்.

அதன் பின்னர், திரு. கே. வஜ்ரவேல் முதலியார், பி. ஏ., ''மெய்கண்ட தேவர்'' என்னும் பொருள்பற்றிப் பேசுகையில், ''ஒவ்

வொரு சமயத்திலும் தத்தம் ஒழுக்கச் சீலத்தாலும், நூல்கள்வாயிலாகவும், உபதேசவாயிலாகவும் உலகுக்குதவும் பேராசிரியர்களே சந்தனசாரியர்கள் எனப்படுவர். நமது சைவ சமயத்தில் அவர்கள் மெய்கண்டதேவர், அருணந்திசிவம், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் எனநால்வராவர். மெய்கண்ட தேவரே அவர்களுள் முதன்மையானவர். 'மெய்கண்ட தேவர்' என்பதற்கு "மெய்யான பொருளைத் தம் அனுபவத்திற் கண்டவர்" என்று பொருள். எக்காலத்தும் நிலையா யுள்ளதே மெய்ப் பொருள். இம் மெய்ப்பொருளைக் கண்டதோடு இறைவன் சக்தியாகிய அருளைச் சார்ந்த வண்ணத்தாராகையால் மெய் கண்ட தேவர் என்று சுவாமிகள் அழைக்கப் பட்டார்" என்று மிகத் தெளிவாகப்பேசினர்.

இதன் பிறகு சமாஜ உத்தியோகஸ்தர் நியமனம் நடைபெற்றது. இதன் முடிவை மற்றோரிடத்திற் காண்க.

பிறகு திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார் "சொல்லும் பொருளும்" என்னும் பொருள் பற்றி விரிவுரை நிகழ்த்துகையில், "'சொல்' என்னும் கருவி வாயிலாகத்தான் ஒரு பொருளை உணாகிறோம். ஒரு பொருளை உணர்வதற்கான கருவியாயுள்ள ஓசையே சொல். புலவர்கள் தஞ் செயல்களால் உலகை வெளிப் படுத்தும் போது தம்மையும் வெளிப்படுத்திக் கொள்வதேபோல், சொல்லை உணரவும் சொல்லே கருவியா யிருக்கிறது. ஒவ்வொருவருள்ளத்திருந் தெழும் ஓசை சொல் என்பது. தொல்காப்பியம் எழுத்தின் பிறப்பிடத்தைப் பற்றிக் கூறுகையில் உந்தியில் காற்றினல் மோதப் பட்டுப் பிறகு சில வாயில்களாக வெளிப்பட்டு விளங்கு மொலியே எழுத்து என்று கூறும், நச்சினார்க் கினியர் உரையில் அதைக் காற்று என்கிறார். மேனாட்டார் ஒலிக்குக் காரணம் பிராணவாயு வென்கிறார்கள். ஒலிக்குக் காரணம் 'வர்ணம், மதம், மந்திரம்' என்று சைவ சித்தாந்த நூல்கள்கூறும். சூக்குமம், பைசந்தி, வைகரி இவை உட்பட்ட பிற நான்கு காரணங்களையும் கூறும் மணிவாசகப் பெருமான்,

> "பாதாள மேழினுங்கீழ்
> சொற்கழிவு பாதமலர்
> போதார் புனைமுடியு
> மெல்லாப் பொருண்முடிவே"

என்று கூறியிருப்பதால், இறைவன் சொல்லையும் பொருளையும் கடந்து நிற்பதால் ஓர் எல்லை வரைதான் சொல்லும் பொருளும் பயன்படுவன" என்று மிக விரிவாக விளக்கினார்.

பின்பு திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., "தொல்காப்பியமும் பழந்தமிழர் கடவுட் கோட்பாடும்" எனும் பொருள் பற்றிப் பேசுகையில், "ஓர் ஆராய்ச்சியாளர் 'ஆரியர் நாகரிகம் தமிழர் நாகரிகமே ஆனால் சொல் மாத்திரம் வேறு' என்கிறார். ஆரியர் நாளா வட்டத்தில் தம் மொழியை நம் மொழியிற் கலந்து விட்டனர். டாக்டர் கால்ட்வெல் என்பார் தமிழ்ச் சொற்களி லிருந்தே பல வடமொழிச் சொற்கள் வந்தனவென்று காட்டியிருக்கிறார். தொல்காப் பியத்தில் 'தெய்வம்' என்ற சொல் சொல்லதிகாரத்திலும் பொருளதிகாரத்திலும் வருகின்றது. 'தெய்வம்' என்ற சொல் 'தே' என்னும் அடிப்படையாகப் பிறந்தது. 'தே' என்பது இனிமையைக் குறிக்கும். 'தேங்காய்' என்பதிலும் இனிய காய் என்று இனிமையைக் குறிக்கும் 'தே' என்பது காண்க. யாவன் ஒருவனுக்கு நன்மை செய்பவனே அவன் இன்பம் பயப்பவனாகிறான். இனிமையை - இன்பத்தைத் தரும் அவனைத் 'தேவன்' என்று அழைப்பதியல்பு. இந்திரன், வருணன், மாயோன் என்பன தமிழ்ச் சொற்களே யாம். இவைகளிலிருந்து இத் தெய்வங்களைத் தமிழ் நாட்டில் தான் முதன் முதலாகக் கொண்டாடியதென்பது அறியப் படும். மழை, ஆனினம், அந்தணர், அரசர், வானவர் ஆகிய இவர்கள்தான் வணங்கப்பட்டனர் என்பதை,

> "வாழ்க அந்தணர் வானவ ரானினம்
> வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக"

என்ற தேவாரம் விளக்கும்.

தொல்காப்பியத்தில் 'கடவுள்' என்றசொல் சிலவிடங்களில் வருகிறது. 'கடவுள்' என்பது எல்லாவற்றையும் கடந்து நிற்பதென்றும் யாவற்றையுங் கடந்து நிற்பதோடமையாது உயிர்க்குயிராய் இருக்கிறான் என்றுணர்த்தவே 'உள்' என்று தமிழர் வழங்கியதாகவும் தெரிகிறது. ஆகவே சொரூப லக்கணம் அத்துவித லக்கணம் என்ற வாயில்களாக நோக்கினாலும் 'கடவுள்' என்பது இறைவனைக் கூறும் சொல்லாகிறது; 'கந்தழி' என்பதும் பரம் பொருளைக் குறிக்கும் சொல்; அறுசமயம் என்பதும் தமிழ் நாட்டில்தான் தோன்றியது. பிள்ளையார் வழிபாடு-குறிஞ்சி நிலத்தார் வழிபாடாகும். யானை காட்டிலே இருப்பதால் அவ்வுருவ வழிபாடு குறிஞ்சி நிலத்தார் வழிபாடாகும். இனி, யானை என்பது பிரணவத்தைக் குறிக்குங் குறியாகையின், யானை வழிபாடு பிரணவ வழிபாடாகும். ஆகவே, இக் குறிஞ்சி வழிபாடு முதன் முதல் தோன்றிய தமிழ்நாடே பிரணவ வழிபாட்டின் பிறப்பிடமும் ஆகும் எனப் பெறப்படும். சக்தி மதத்தின்படி கணபதி, குமரன், கதிரவன், சிவன், விஷ்ணு, சக்தி இவைகளில் எதை வழிபடினும் முதன் முதலாகச் சிவலிங்க வழிபாடாற்றவேண்டும். இல்லாவிடில் வழிபாட்டில் பயனில்லை என்ற கொள்கையிருப்பதால் தமிழ்நாட்டுஅறுசமயவழிபாடென்பது பரமசிவ வழிபாட்டையே குறிப்பதாகும். தொல்காப்பியத்தில் கூறி யிருக்கிறபடி, 'அவன் அவள் அது' என்று உலகை மூவகைப்படுத்திய தமிழர் ஆண் பெண்ணாகவும், அவை கடந்த ஒன்றாகவும் கடவுளை வழிபட்டார்கள் என்பதும் பழந்தமிழர்களின் கடவுட் கோட்பாட்டைத் தெரிவிக்கிறது" என்று மிக மிக விரிவாக விளக்கினார்.

பின்பு திரு. அ. கந்தசாமிப் பிள்ளை "இயற்பகையார்" என்ற பொருள் பற்றிப் பேசுகையில், இயற்பகை நாயனாரின் புராணத்தைப் பகுத்தறிவுடன் பார்த்தால் அதைப்போல் வேறொரு புராணமில்லை எனத் தெரிய வருமென்றும், ஒருவன் தான் பெரிதும் இச்சித்த ஒன்றை மற்றவர்க்குக் கொடுப்பதிலேயே அம் மற்றவரிடம் தான் பூண்டிருக்கும் அன்பின் திறம் விளங்குமென்றும், இயற்பகை நாயனார் தம் மனைவியாரை ஒரு சிவனடியாருக்குக் கொடுத்ததும், கொடுத்த வொன்றைப் பிறர் கவரா திருக்க முன் எச்சரிக்கையாக விருந்ததும், இயற்பகையாரின் அன்பின் திறத்தைக் காட்டுகிற தென்றும், சமயக் கண்ணுடன் பெரிய புராணம் முழுவதையும் படித்தால் குற்றஞ் சொல்வதற் கிடமில்லை என்று தெளிவாகும் என்றும் நன்கு விளக்கிப் பேசினார்.

மூன்று நாட்களிலும்நடந்த சொற்பொழிவுகளைப் பற்றிய தலைவர் கருத்துரை மிக நன்றாக விளக்கப்பட்டது. பிறகு திரு சின்னசாமி ரெட்டியார் அவர்கள் தமது வந்தனத்தைச் செலுத்தினார்கள். பிறகு, தலைவர் அவர்கட்கும், உடனிருந்த சுவாமிகட்கும், தேவார ஆசிரியருக்கும், சொற்பொழிவாளர்கட்கும், வரவேற்புத் தலைவர் திரு. சின்னசாமி ரெட்டியார் அவர்கட்கும், அவர் உடனிருந்து எல்லா வற்றையும் செவ்வனே நடத்திய நண்பர்கட்கும், சமாஜத்தின் கடந்த ஆண்டு உத்தியோகஸ்தர்கட்கும், சமாஜத்துக்கும், பத்திரிகைக்கும் பலவகைகளில் உதவி புரியும் சைவப் பெரியார்கட்கும், பத்திரிகையையும், சுந்தரா தேவாரம் முதலியவற்றையும் மிக அழகாக அச்சிட்டு உதவும் சாது அச்சுக்கூடத் தினருக்கும், ஆண்டுவிழாவையும், சைவர் மகாநாட்டையும் தாங்கள் வந்திருந்து சிறப்பித்த பெரியார்கட்கும் காரியதரிசி நன்றி கூறிய பின்னர் கடவுள் வாழ்த்தொலி முழங்க சபை இனிது நிறைவெய்தியது.

# சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை

## 1905ஆ நிறுவப்பட்டது

## 24-வது ஆண்டு அறிக்கைப் பத்திரம்

"எவ்வுயிரும் நீங்கா துறையும்இறை சிவனென்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு"

### சமாஜம் நிறுவிய காலம்

இச்சமாஜம் சைவ சித்தாந்த சமயத்தையும் அதன் தத்துவ சாஸ்திர முடிவுகளையும் ஞானத்தையும் யாவருக்கும் எளிதிலே விளக்கும் பொருட்டு 1905ஆ ஜூலை மாதம் 7-ந் தேதி நிறுவப்பட்டது. பின்னர் 31-12-1927-ல் நிருவாக சபையினராலும் சமாஜ அங்கத்தினர்களாலும் புதுச்சேரியில் கூடிய கூட்டத்தில் புதிய அமைப்பு விதிகளால் புதுப்பிக்கப்பட்டது.

### இடம்

இச் சமாஜத்தின் காரியாலயம் தற்சமயம் 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெருவில் நிலைபெற் றிருக்கின்றது.

### உறுப்பினர் தொகுதி

சமாஜத்தின் உறுப்பினர்கள் நால்வகைப் படுவர். அவர்கள் போஷகர், ஆயுள் அங்கத்தினர், கௌரவ அங்கத்தினர், சாதாரண அங்கத்தினர் என்பவராவார்கள். அவர்களில்,

| | | |
|---|---|---|
| ஆண்டு முதலில் இருந்தவர்கள் | 582 | |
| இவ்வாண்டில் சேர்ந்தவர்கள் | 426 | |
| | | 1008 |
| இவ்வாண்டில் நீங்கியவர்கள் | | 287 |
| இவ்வாண்டின் முடிவி லிருப்பவர்கள் | | 721 |

### நிருவாக உறுப்பினர்கள்

சமாஜத்தின் காரிய நிருவாக உறுப்பினர்களின் எண் 20. அவர்களுள் ஒரு தலைவர் இரண்டு உதவித் தலைவர்கள், இரண்டு காரியதரிசிகள், ஓர் உதவிக் காரியதரிசி, ஒரு பொருட்காப்பாளர், ஒரு பத்திராசிரியர், ஓர் உதவிப் பத்திராசிரியர், மற்றவர் உறுப்பினர்கள். ஆகமொத்தம் இருபதின்மர் ஆவர். இவ்வாண்டில் நிருவாக உறுப்பினர் கூட்டம் 6 முறை நடைபெற்றது.

### வெளியூர் ஆலோசனை சபை உறுப்பினர்கள்

இவர்கள் தமிழ் வழங்கும் ஜில்லா ஒவ்வொன்றிற்கும் மூன்று பேராகவும், புதுக்கோட்டை, நீலகிரி ஜில்லாக்களுக்கு இரண்டு இரண்டு பேராகவும், திருவனந்தபுரம், பெங்களூர் ஜில்லாக்களுக்கு ஒவ்வொருவராகவும் மொத்தம் 42 பேர். இவர்களின் உதவியும் ஆலோசனையும் வேண்டும்பொழு தெல்லாம் உபயோகித்துக் கொள்ளப்பட்டன.

### வரவு செலவு கணக்கு

24-ம் ஆண்டு வரவு செலவு கணக்கு 1928ஆ டிசம்பர் மாதம் 1-ந் தேதி முதல் 1929ஆ நவம்பர் மாதம் 30-ந் தேதி வரை நடந்த நடவடிக்கையின் குறிப்புகளாகும். இவை

களைச் சரிவர வைத்து வந்த திருவாளர் T. N. தங்கவேலு முதலியார் அவர்களுக்கும் மாதா மாதம் கணக்குகளை நன்கு பரிசோதித்துத் தம்முடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்து வந்த கணக்காளர் திரு. C. தியாகராஜ முதலியாரவர்களுக்கும் வருடக் கணக்கைப் பரிசோதித்த திரு. வே. மாணிக்க முதலியார் அவர்களுக்கும் சமாஜத்தின் நன்றி உரித்தாகும். இவ்வருடத்திய வரவு செலவு கணக்கு குறிப்பு கீழ்வருமாறு :—

| வரவு | ரூ. | அ. | பை. | செலவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|---|
| ஆயுள் சந்தா | 147 | 8 | 0 | சித்தாந்தம் அச்சுக்கூலி காகிதம் உள்பட | 977 | 2 | 0 |
| சித்தாந்தம் சந்தா வசூல் I & II | 938 | 8 | 0 | பிளாக்குகள் ரப்பர் ஸ்டாம்புகள் கூட்ட அறிக்கைப் பிரவேச விண்ணப்பம், பாரங்கள் கணக்குப் புத்தகம், அச்சுக்கூலி | 97 | 9 | 3 |
| ,, அச்சிட நன்கொடை | 291 | 0 | 0 | வருடாந்தக் கூட்ட அறிக்கை முதலியன | 85 | 6 | 0 |
| ,, அதிக சந்தா | 6 | 0 | 0 | தபால் | 328 | 4 | 0 |
| ,, பழைய பிரதிகள் விற்பனை | 71 | 0 | 6 | அலமாரி | 24 | 0 | 0 |
| விளம்பரம் | 36 | 0 | 0 | சில்லறை வகை | 80 | 13 | 6 |
| வி. பி. தபால் வகை | 47 | 3 | 6 | வேளாள ஐக்கிய நாணயச் சங்க டிபாசிட் | 689 | 4 | 3 |
| சந்தா முன்பணம் | 13 | 8 | 3 | தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கி | 0 | 9 | 5 |
| டிபாசிட் வட்டி | 28 | 5 | 2 | விளம்பரம் | 15 | 0 | 0 |
| வே. ஐ. நா. சங்க டிபாசிட் | 740 | 0 | 0 | சுந்தரர் தேவாரம் | 1594 | 13 | 4 |
| சுந்தரர் தேவாரம் | 1602 | 3 | 8 | | | | |
| மொத்தம் ... | 3921 | 5 | 1 | மொத்தம் ... | 3892 | 8 | 10 |
| ஆரம்ப இருப்பு ... | 12 | 6 | 0 | முடிவு இருப்பு ... | 41 | 2 | 3 |
| | 3933 | 11 | 1 | | 3933 | 11 | 1 |

## பொதுக்கூட்டங்கள்

இவ்வாண்டில் பதினொரு பொதுக்கூட்டங்கள் நடைபெற்றன. அவைகளுள் திருவிழாக் காலங்களில் மூன்றும், சைவப் பெரியார்களின் பிரிவாற்றுமைக்காக இரண்டும், சைவப் பெரியார் தனிக்கூட்டம், சைவர் மகாநாடு இவைகள்பற்றி நான்கும், ஏனைய விஷயங்களைப்பற்றி இரண்டும் நடைபெற்றன. இப்பதினொரு பொதுக்கூட்டங்களே அன்றி திருநெல்வேலியில் சைவப் பெரியார் தனிக்கூட்டம் ஒன்றும், திருப்பாதிரிப் புலியூரில் சைவர் மகாநாடும் மிகச் செவ்வையாய் நடைபெற்றன. அவைகளின் நடைமுறை விவரங்களெல்லாம் சித்தாந்தம் மலர் இரண்டின் நான்காவது ஆறுவது இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன.

## சமயபோதனை

இவ்வாண்டு 25-1-29 தைப்பூச புண்ணிய தினத்தில் தொடங்கி திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்கள் திங்கட்கிழமைதோறும் சிவஞான போதபாடம் நடத்தி வருகிறார்கள். அவர்களுக்கு சமாஜத்தின் நன்றி பெரிதும் உரித்தாகும்.

## "சித்தாந்தம் பத்திரிகை"

இவ்வாண்டு தொடக்கத்தில் திருநெல்வேலி ஜில்லாவைச்சேர்ந்த பல பேரன்பர்கள் உதவி புரிந்தது போற்றத்தக்கது. உதவி பத்திரா

சிரியராயிருந்த திரு. வல்லை. பாலசுப்பிரமணியன் அவர்கள் அரசாங்கத்தில் புதிய வேலையை மேற்கொண்டது நிமித்தம் உதவி பத்திராசிரியர் பதவியினின்றும் நீங்க நேரிட்டதுபற்றிச் சமாஜத்தினர் பெரிதும் வருந்துகின்றனர். அவர் செய்த உதவிக்கு நன்றி செலுத்துகின்றனர். அவருக்குப் பதிலாக உதவி பத்திராசிரியரா யிருந்தும் இவ்வாண்டு தொடக்கத்திலிருந்தே அச்சுத்தாள்களைப் பரிசோதித்தும் உபகரித்த திரு. கி. குப்புச்சாமி முதலியாரவர்களுக்கும் கட்டுரைகள் வழங்கிய பேரறிஞர்களுக்கும், பத்திரிகையைச் செவ்வனே அழகுடன் உரியபொழுதில் வெளிவரச்செய்துதந்த சாது அச்சுக்கூடத்திற்கும் சமாஜத்தினர் என்றும் நன்றி பாராட்டுகின்றனர்.

## தேவார வெளியீடு

தேவாரத் திருமுறைகளைப் பல்லாயிரக் கணக்காக அச்சிட்டு வெளியிட வேண்டும் என்ற அவா நம்சமாஜத்தினருள் நெடுநாளாகக் குடி கொண்டிருந்தது. இவ்வெளியீட்டுக்காகத் தேவையுள்ளபோதெல்லாம் வேண்டிய பொருளை முன் பணமாக உதவி ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரப் பதிகங்கள் பதினாயிரம் பிரதிகள் வெளியிடுவதற்கு முக்கிய காரணராக இருந்த திரு. அ. சோமசுந்தரஞ் செட்டியாரவர்கட்கும் திரு. ம. பாலசுப்பிரமணிய முதலியார் அவர்கட்கும் அச்சுத் தாள்களைப் பரிசோதித்தும் வேறு பல வழிகளில் பணிசெய்தும் உபகரித்த திருவாளர்கள் - கி. குப்புச்சாமி முதலியார், திரு. வி. உலகநாத முதலியார், பாலி. சு. நெல்லையப்பர் அவர்கட்கும் இப்புத்தகங்களை மிக விரைவில் ஆயிரக் கணக்காக வாங்கி உபகரித்த தமிழ் நாட்டு சைவ மக்கட்கும் நம் சமாஜத்தினரின் மறவா நன்றி என்றும் உரித்தாகும்.

## நன்றி கூறுதல்

சைவப் பெரியார் தனிக்கூட்டம், சைவர் மகாநாடு முதலியவைகள் மிகச் செவ்வனே நடைபெறச்செய்ததமிழ்நாட்டுச்சைவசபைப் பிரதிநிதிகட்கும், காரியதரிசி, பொருட்காப்பாளர், கணித பரிசோதகர் முதலிய சமாஜ நிர்வாக சபையினருக்குப் பல வகையிலும் வேண்டிய போதெல்லாம் தம்மால் இயன்ற வரை உழைத்து பேருபகாரம் செய்த உதவி காரியதரிசி திரு தி. க. சுந்தரம் பிள்ளை அவர்கட்கும் சமாஜத்தினர் பெரிதும் நன்றி செலுத்துகின்றனர்.

## வேண்டுகோள்

மேன்மேலும் இச்சமாஜத்தின் அரியநோக்கங்களை ஈடேற்றுவதற்கும், சமய முன்னேற்றத்திற் குரிய சமய சீர்திருத்தம், ஆலய சீர்திருத்தம், மட சீர்திருத்தம் முதலியவைகளுக்காகச் செவ்வனே உழைத்தற்கும், பத்திரிகை மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கும், ஆயிரக் கணக்கான வகையில் தமிழ்நாடெங்கும் பரப்புவதற்கும், சைவ சமயத்தைப் பற்றிய பல நவீன அபிப்பிராயங்களை ஆராய்ந்து உண்மைச் சைவ சமயத்தை உலகெங்கும் பரப்புவதற்குப் பிரசாரகர்களை ஏற்படுத்திப் பணிசெய்வதற்கும், சைவாபிமானிகள் ஆயிரக் கணக்காக முன்வந்து பெரும் பொருள் திரட்டிச் சமாஜத்திற்கு உதவி, இச் சமாஜத்தினரை ஊக்குவித்து தந்நிகரில்லா சைவ சித்தாந்த சமயத்தை உலகெங்கும் உண்மையில் மிளிரச்செய்யும் திருப்பணியில் அன்பர்கள் ஈடுபடுவார்களென முழுமுதற் கடவுள் திருவடியை வழுத்துகின்றோம்.

“ ஆதி வாழிய அஞ்செழுத் தோடுவெண்
பூதி வாழிய புண்ணியர் வாழிய
நீதி வாழிய நீள்புவி வாழிய
கோதில் சைவக் குலமிக வாழியே ”

இங்ஙனம் :
உத்திரவின்படி,

**ம. பாலசுப்ரஹ்மண்யம்,**
காரியதரிசி.

---

திருவொற்றியூரில் நடைபெறும் திருவிழாவில் நம் சமாஜத்தினர் சமயப்பிரசாரம் செய்து வருகின்றனர். திருமயிலாப்பூரில் மாசிமீ கடைசியில் திருவிழாக் காலத்தில் சமயப் பிரசாரம் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவைகளின் விவரங்களைத் துண்டுப் பிரசுரங்களிலும் அடுத்த இதழிலும் காண்க.

சைவ சித்தாந்த மகா சமாஜத்திய

# உசு-வது ஆண்டு நிருவாக சபையினர்

**தலைவர்:—**ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாசாரிய சுவாமிகள், சந்நிதிவீதி, திருப்பாதிரிப்புலியூர்.

**உதவித் தலைவர்கள்:—**திரு. ச. சச்சிதா நந்தம்பிள்ளை பி. ஏ., எல். டி., டிப்டி இன்ஸ் பெக்டர் ஆப் ஸ்கூல்ஸ், தஞ்சாவூர்

திரு. அ. சோமசுந்தரம் செட்டியார், எம். ஏ., சொந்தக்காரர், ருக்மணி குக்கர் கம் பெனி, இராயபுரம், சென்னை.

**காரியதரிசிகள்:—**திரு. ம. பாலசுப்ரஹ்ம மண்ய முதலியார், பி. ஏ., பி. எல்., அட்வ கேட், 150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜி. டி. சென்னை.

திரு. T. M. நாராயணசாமிப் பிள்ளை, எம். ஏ., பி. எல்., எம். எல். சி., அட்வகேட், ஜில்லா போர்டு தலைவர், திரிசிராப்பள்ளி.

**உதவிக் காரியதரிசி:—**திரு. பா. கந்த நர சிம்ஹம், பி.ஏ., பி.எல்., அட்வகேட், 2/19 A, காசிச்செட்டித் தெரு, ஜி. டி. சென்னை.

**பொருட்காப்பாளர்:—**திரு. தி. க. சுந் தரம் பிள்ளை, 88, திருப்பள்ளித் தெரு, ஜி. டி. சென்னை.

**பத்திராசிரியக்கழகம், பணியாளர்கழகம்:—**

1. திரு. வே. நெல்லையப்ப பிள்ளை, திருநெல் வேலி.
2. ,, ச. சச்சிதாநந்தம் பிள்ளை, தஞ்சாவூர்.
3. ,, த. வே. உமாமஹேசுவரம் பிள்ளை, தஞ்சாவூர்.
4. ,, ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரி சிராப்பள்ளி.
5. ,, கே. ஆறுமுகம் பிள்ளை, நாகர்கோயில்.
6. ,, அ. சோமசுந்தரம் செட்டியார், சென்னை.
7. ,, திரு. வி. உலகநாத முதலியார், சென்னை.
8. ,, ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், சென்னை, பத்திராசிரியர்.
9. ,, கி குப்புச்சாமி முதலியார், சென்னை, உதவிப் பத்திராசிரியர்.

### ஏனைய நிருவாக உறுப்பினர்கள்

(சென்னை)

1. திரு. வி. உலகநாத முதலியார், சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை.

2. திரு. பாலி - சு. நெல்லையப்பர், ஆசிரி யர் “லோகோபகாரி”, சிந்தாதிரிப்பேட்டை.

3. திரு. நல். பாலசுந்தர முதலியார், பி. ஏ., பி. எல்., அட்வகேட், 28, நல்லண்ண முதலி தெரு, இராயப்பேட்டை.

4. திரு. நின்றை - தங்கவேல் முதலியார், 22, விநாயக மேஸ்திரி தெரு, ஜி. டி.

5. திரு. E. N. தணிகாசல முதலியார், பி. ஏ., பி. எல்., அட்வகேட், 3, வேங்கட ரங்கம் பிள்ளைத்தெரு, திருவல்லிக்கேணி.

6. திரு. E. T. இராஜேசுவரி யம்மாள் பி. ஏ., 3, வேங்கடரங்கம் பிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி.

7. திரு. காழி. சிவ. கண்ணுசாமிப்பிள்ளை, பி. ஏ., 233, லிங்கசெட்டித் தெரு, ஜி. டி.

8. திரு. S. M. வேங்கடாசல முதலியார், 28, வீராசாமிப் பிள்ளைத்தெரு, எழும்பூர்.

9. திரு. T. நல்லசிவன் பிள்ளை, பி. ஏ., பி. எல்., அட்வகேட், கச்சேரி சாலை, மயி லாப்பூர்.

10. திரு. C. S. சுவாமிநாத முதலியார், பி. ஏ., “தாரக விலாசம்”, லாயிட் ரோட், கதீட்ரல் போஸ்ட்.

11. திரு. ச. நடேச முதலியார், ஜவுளி வியாபாரம், இராயப்பேட்டை.

12. திரு. ம. சம்பந்த முதலியார், 2/38, ஆடம் தெரு, மயிலாப்பூர்.

### மாதக்கணக்கு பரிசோதகர்

திரு. C. இரத்தின முதலியார், 120, சூளை ஹைரோட், வேப்பேரி P. O.

### ஆண்டு கணித பரிசோதகர்

திரு. V. மாணிக்க முதலியார், 88, பெரு மாள் முதலி தெரு, ஜி. டி. சென்னை.

### ஆராய்ச்சிக் கழகம்

1. திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை, சிதம்பரம்.

2. திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை, தஞ் சாவூர்.

3. திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரிசிராப்பள்ளி.

4. திரு. கி. குப்புச்சாமி முதலியார், சென்னை.

5. திரு. ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், சென்னை.

## வெளியூர் ஆலோசனை சபை

### செங்கல்பட்டு

1. திரு க. சபாபதி முதலியார், கட்டியாம் பந்தல்.

2. திரு. கா. வேதாசல முதலியார், காவித் தண்டலம்.

3. திரு. வா. தி. மாசிலாமணி முதலியார், சீவரம்.

### வட ஆறுகாடு

1. திரு. C. S. இராஜா பிள்ளை, வேலூர்.
2. திரு. நடேச செட்டியார், வேலூர்.
3. திரு. P. இராஜவேல் முதலியார், வேலூர்.

### தென் ஆறுகாடு

1. திரு. கா. சுப்பிரமணியம் பிள்ளை, சிதம்பரம்.

2. திரு. வை. கந்தசாமி முதலியார், திருப்பாதிரிப் புலியூர்.

3. திரு. M. சின்னசாமி ரெட்டியார், திருவெண்ணெய் நல்லூர்.

### தஞ்சாவூர்

1. திரு. த.வே. உமாமஹேசுவரம்பிள்ளை, தஞ்சாவூர்.

2. திரு. அ. கந்தசாமி பிள்ளை, கும்பகோணம்.

3. திரு. வேலாயுதம் பிள்ளை, பி. ஏ, எல். டி., ஒரத்தநாடு.

### திரிசிராப்பள்ளி

1. திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரிசிராப்பள்ளி.

2. திரு. அ. மு. சரவண முதலியார், லால்குடி.

3. திரு. அமிர்தஞ் செட்டியார், பூவாளூர்.

### இராமநாதபுரம்

1. திரு. ராம. கு. ராம. இராமசாமி செட்டியார், பலவான்குடி.

2. திரு. T. S. கந்தசாமி முதலியார், சாத்தூர்.

3. திரு. பூ. ஷண்முகசுந்தர முதலியார், சிவகங்கை.

### திருநெல்வேலி

1. திரு. மா. வே. நெல்லையப்ப பிள்ளை, சிந்துபூந்துறை.

2. திரு. அ. முத்தைய பிள்ளை, பாளையங்கோட்டை.

3. திரு. ந. சிவகுருநாதம் பிள்ளை, தூத்துக்குடி.

### கோயமுத்தூர்

1. திரு. சாத்தப்ப செட்டியார், கோயமுத்தூர்.

2. திரு. T. R. இராஜரத்தினம் பிள்ளை, கோயமுத்தூர்.

3. திரு. C. M. இராமச்சந்திரன் செட்டியார், கோயமுத்தூர்.

### திருவனந்தபுரம்

1. திரு. கே. ஆறுமுகம் பிள்ளை, நாகர் கோயில்.

### பெங்களூர்

1. திரு. ஆறுமுக முதலியார், நால்வர் பவனம்.

### புதுக்கோட்டை

1. திரு. அழகர்சாமிவேலர்,கோனாப்பட்டு.
2. திரு. P. S. சிவஞான முதலியார், சீப் ஜட்ஜ், புதுக்கோட்டை.

### புதுச்சேரி

1. திரு. S. பழனிசாமி பிள்ளை.
2. திரு. S. P. அண்ணாமலை முதலியார்.
3. திரு. A. V. முத்தையா முதலியார்.

### மதுரை

1. திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை, மதுரை.
2. திரு. R. S. பதி.
3. * * *

### சேலம்

1. திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை,
2, 3. * * *

### சித்தூர்

1, 2, 3. * * *

### நீலகிரி

1, 2. * * *

குறிப்பு :— * * * என்ற குறியிட்ட காலி ஸ்தானங்களுக்குத் தகுதியுள்ள சைவ உழைப்பாளிகள் பெயர்களை நமக்கு அன்பர்கள் குறித்தனுப்புமாறு வேண்டுகிறோம்.

# சதமணிக்கோவை

[இலக்கண விளக்கவாசிரியர் பரம்பரை சோமசுந்தர தேசிகர்]

**சை**வசித்தாந்த சாத்திரங்களுள்ளே 'சதமணிக் கோவை' யென்ற நூலும் ஒன்றெனச் சொல்லப்படு கிறது. இதனை 1898-ம் ஆண்டில் அச்சிட்டு வெளியிட்ட 'வைதிக சைவ சித்தாந்த சண்டமாருதம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்களது மாணவ கரும் சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதரும் ஆகிய நாகபட் டினம் வேதாசலம் பிள்ளையவர்கள்' இந் நூலைப்பற்றிய குறிப்பொன்றும் கொடுக்கவில்லை. இந்நூலின் ஆசிரியர் பெயரும் குறிக்கவில்லை. இதனை இயற் றிய பெரியார் சந்தானசாரியருள் ஒரு வரான மறைஞான சம்பந்தரென்பர் ஒரு சாரார். காழிப்பெரும் பழுதை கட்டிச் சிற்றம்பலவர் என்பது வித் வான் முத்துத் தாண்டவராய பிள்ளை யவர்கள் துணிவு. தருமபுர மடத் துச் சிஷ்யகோடிகளுள் ஒருவரான சண்முகமுனிவர் அருணமச்சிவாயர் என்பர். மெய்கண்டார் அவரது சீட ருக்கு உபதேசக் கிரமத்தில் பேசிய தென்பது ஒரு சாரார் கொள்கை. இப் படிப் பலவிதக் கொள்கைகள் உலவு கின்றன. இவற்றிற்கெல்லாம் ஆதார மாகவிருப்பது,

"கண்ணை நுதலிற் கறையைக் களத்தின் [மறைத்
தெண்ணமிலா வெண்போ லெழுந்தருளும் [வெண்ணெய்நல்லூர்
**மெய்கண்ட தேவர் வினவெண்பா** விற்கு
கைகண்ட தேமிகவுங் காப்பு" [முகங்

என்ற வெண்பாவாம்.

இலக்கண முறைப்படி **மெய்கண்ட தேவர் வினு வெண்பா** என்பதனை ஆறும் வேற்றுமைத் தொகையாகக் கொண்டு மெய்கண்ட தேவரால் இயற் றப்பட்ட தென்றும் கொள்ளலா காதோவெனின் நூலினுள்ளே பல செய்யுள்களில் காணப்படும்

'தஞ்சவருண் **மெய்கண்டாய்** சாற்று'

'**தூலவுடல் விட்டுவிடு-மெய்கண்டாய்**'

'பொருளுடை லாவியினைப் புண்ணியனுக்கீய
வருளிணுய் **வெண்ணெ யரசே**'

'அருள் **வெண்ணெய் மெய்த்தேவே**'

'மெய்கண்ட தேவனே வெண்ணெய்வரு [வித்தகா'

என்பது போன்ற தொடர்களால் மெய் கண்டாரை வினவிய வெண்பாக்க ளென்றே பொருள் கொள்ளக்கிடக் கின்றது. இதனாலே காழிப்பெரும் பழுதைகட்டிச் சிற்றம்பலவர் என்றும் அருணமச்சிவாயர் என்றும் கொள் வதற்குப் பல ஆட்சேபங்கள் ஏற் படுகின்றன. காழிப் பெரும் பழுதை கட்டி கொற்றங்குடி உமாபதி சிவத் துக்குப் பின் மூன்று தலைமுறை கழித்து வந்தவர். சந்தான பரம்பரை யின் றலைவர்க்கும் இவர்க்கும் இடை யீடு ஏழு தலைமுறைகளாவதால் எவ் வளவு குறைத்து வைத்துக் கொண் டாலும் நூற்றெழுபத்தைந்து ஆண்டு கள் பிறப்படுகின்றன. காழிக்கங்கை மெய்கண்டா ராவார் கோவையில் கூறிய மெய்கண்டா ரென்பதற்கும் வெண்ணெய்த் தேவு, வெண்ணெயரசு போன்ற தொடர்கள் தடையாக நிற் கின்றன. ஆகவே பெரும்பழுதை கட் டிக்கும் இந்நூலுக்கும் யாதொரு தொடர்பு மில்லையென் றேற்படுகின் றது. இனி தருமை ஞ. சண்முகத்

தம்பிரான் கொள்கைக்குள்ள மாறு கோள் 'மெய்கண்டாய் வெண்ணெய்த் தேவே' போன்ற தொடர்களும், இவர்க்கும் மெய்கண்டாருக்கும் ஐந்து தலைமுறை இடையீடுபடுவதும், இவரது ஆசிரியர் உமாபதி சிவமாவரென்பதுமேயாம். ஆகவே இவ்விருவரும் இச்சதமணிக் கோவைக்கு ஒரு விதத்திலும் சம்பந்தமுடையவர்க ளல்லவெனத் துணிதற்கு இடந் தருகின்றது.

இனிச் சந்தானசாரியாருள் ஒருவரான மறைஞான சம்பந்தர் இந்நூலை இயற்றி யருளினாரென்ற கொள்கையை எடுத்துக் கொள்வோம். இந்நூலிலே பலவிடத்தும் மெய்கண்டாரை விளித்தும், அவர் அருளை நாடியும் நிற்பதாகக் கற்கப்படுவதாலே அருணந்திப் பெருமானது சீடரான மறைஞான சம்பந்தர் சந்தான குரவர் தலைவர் காலத்து இருந்தனர் என்று கொள்ள பரம்பரை வழக்கு இடந்தரவில்லை. மெய்கண்டார் காலத்திலேயே மறைஞான சம்பந்தர் இருந்தாரென்றும், அவரது மாணக்கருள் இவரும் ஒருவராவர் எனவும் காட்டக் கூடிய ஆதாரங்கள் இருந்தாலொழிய இதனையேற்க வழியில்லை. ஆகவே இக்கொள்கையும் ஆதரவற்று வீழ்கின்றது. இனி இந்நூலை உபதேசக் கிரமத்தில் பேசிய தென்பதொன்றே நிற்கின்றது. இது உபதேசக்கிரமத்திற் கூறியதா அன்றி மாணக்கர் பலருள்ளும் ஒருவர் தன் ஐயங்களை யகற்றிக் கொண்டதாவென்பது விசாரித்தறிய வேண்டியதொரு செய்தி. இதனைப்பற்றி ஆராய்ந்து பின்னொருமுறை யெழுதுவேன்.

இந் நூலின் பெயர் சதமணிக் கோவையென்று சொல்லப்படுகிறது. இதற்கு ஆதாரம் பரம்பரை வழக்கென்று தெரிகின்றது. பிற்காலத்து எழுந்த **ஞானதீக்கைத் திருவிருத்தம்** என்ற நூலிலே,

"தேசுமிகு மருட்பயின்ற சிவப்பிரகா சத்திற் றிரிந்து பொதுச் சங்கற்ப நிரா காணத் திருத்தி, யாசிலரு [பயனுடனே] வினா வெண்பாச் சார்புநூலா லருளொளிதிற் குறி கூடவளித்து ஞானப்பூசைதக்க காரணமுன் புகன்றதனிற் புரிந்துபுணர் விக்கச்சிவ ஞான போதச் சித்தவழி நூல், மாசில்சத மணிக் கோவை முன்னூற் சான்று மருவுதிரு முறைத்திரட்டு திரட்டிவைத் தனன்மன் னுயிர்க்கே."

என்ற செய்யுளொன்று இருப்பதாக அச்சிட்ட சிவப்பிரகாசத்தில் காணப்படுகின்றது. ஞானதீக்கைத் திருவிருத்தம் இப்பொழுது கிடைக்க வில்லை. ஆயினும் இவ்வுரை நடையின் முதலிற் குறிக்கப்பட்ட காப்பு வெண்பாவின் படி இது வினா வெண்பா அல்லது மெய்கண்டான் வினா வெண்பா என்ற பெய ருடையது என்று ஊகிக்க வேண்டி யிருக்கின்றது. கொற்றங்குடிப் பெரியார் இயற்றிய வினாவெண்பாவிற்கு, 'திருவருட் பயன் வினா வெண்பா' என்று முற்காலத்தில் அதாவது ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன் வழங்கி யிருத்தல் வேண்டுமெனப் பழைய ஏட்டுப் பிரதிகளால் அறியக் கிடக்கின்றது. இச்செய்தி மெய்கண்டான் வினா வெண்பா என்பதனை ஒருவாறு வலியுறுத்தும். அன்றியும் சதமணிக் கோவையென்ற பெயருக்கேற்ப இஃதொரு நூறு செய்யுளாலாகாது நூற்றேழு செய்யுட்களாலானது. அச்சிட்ட சதமணிக்கோவையில் நூற்றைந்து செய்யுட்கள் வரிசையாகக் காணப் படினும் மற்றிரண்டு செய்யுட்களும் மிகையென்று காட்டி

முதற்பக்கத்தில் அச்சிடப்பட் டிருப் பது சிந்தனைக் குரியது.

இனி இந்நூல் கூறும் விஷயங்களை ஆராய்வோ மாயின் புராணங்களிற் காணப்படுஞ் சில செய்திகளை யெடுத் துக் கொண்டு அவற்றிற்குப் பல கார ணங்கள் கூறுகின்றார். ஆணவம்,கன் மம், மாயை இவற்றை வியவகரிக்கின் றார். மற்றும் பல சைவ சித்தாந்தத் திற்கு அடிப்படையான கொள்கைகள் இந்நூலில் விவகரிக்கப் படுகின்றன. ஆகவே இந்நூல் சைவசித்தாந்திகட்கு இன்றியமையாத தொன்றும். இந்நூ லுக்கு உரைபோன்ற குறிப்புக்கள் அந்நூலோடேயே எழுதப்பட் டிருக் கின்றன. இவ்வளவு பெருமைவாய்ந்த நூலைத் தகுந்தபடி விளக்கி யச்சிட வேண்டியது சைவர் கடமைகளில் ஒன் றாகும்.

---

# சென்றடையாத திருவுடையான்

[வேள். N. துரைக்கண்ணன்]

ஈண்டு நாம் எடுத்து ஆராயப் புகுந்த பொருள், "சென்றடையாத திரு வுடையான்" என்பதாகும். இத்தொ டர், பந்தணை மெல்விரலாளும் பரம ரும் பாய்விடைமீது வந்து பொன் வள்ளத்து [பொற்கிண்ணத்து] அளி த்த வரம்பில் ஞானத்து அமுதுண்ட செந்தமிழ் ஞானசம்பந்தப் பெரு மான் திரிசிராப் பள்ளி போந்து, ஆண்டு எழுந்தருளியுள்ள தாயுமான வரையும், மட்டுவார் குழலம்மையை யும் வணங்கிப் பாடியருளிய, "நன்று டையானை" என்னும் முதலடியுள்ள திருப்பாடலுள் உள்ளதாகும். கன் னற்பாகிற் கோற்றேனிற்கனியிற்கனிந் ததாகிய இப்பாடலை யுள்ளுந்தொறும் உள்ளுந்தொறும் 'அனைத் தென்பும் உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்' என்க. இப்பாடலின் ஒவ்வொரு சொல் லும் இருள்படாத்தைக் கிழித்து ஊடு ருவிச் செல்லும் ஞாயிற்றின் கதிர் களைப்போன்று, மக்களின் அகவிருளை [மலமறைப்பை]ப் போக்கி ஒளிப் பிழம்பாக்கும் ஞானக் கதிர்களாயிருக் கின்றன. ஞானத்தின் தனித் துணை யான ஆளுடைய பிள்ளையார், முழு முதற் கடவுளின் வழிபாட்டையே மக் களுக்கு அறிவுறுத்துவார், "பொரு ளல்லவற்றைப் பொருளென்றுணரும் புன்மதியாளர்களே! தனக்குவமையில் லாப் பெருமானுடைய இலக்கணத் தைக் கூறுகின்றேம். கேட்டறிந்துய் மின்கள். பேரொளிப் பிழம்பாம் பரம் பொருள் வியாபகத் தன்மையில் குற் றம் குணம் என வேறு பிரித்தறிய வொண்ணாத வண்ணம் யாவுமாயிருப் பினும் இயற்கையில் அவன் நல்லன வற்றையே தன்னகத்தே யுடையான்; தீயன ஒரு சிறிதுமில்லாதான்; மிக்க வெண்மை நிறம் வாய்ந்த விடையைத் தனக்கு ஊர்தியாகவுடையான், அரு ளுருவமான உமாதேவியை இடப் பாகத்துடையான்; இந்திரன் முத லிய இறையவர்களிடத்துப் போய் பெறக்கூடாத விழுச் செல்வத்தைத் தனக் குடைமையாக வுடையான்; அவன்விரும்பி யெழுந்தருளிய திருப் பதிகளில் திரிசிராப்பள்ளிக் குன்

றையும் தனக்கு இடமாகவுடையான். அவன் எத்தன்மை யுடையனாயினும், எப்பொருளை யுடையனாயினும் ஆகுக. அவனை வணங்குவதால்,வழிபடுவதால் எங்களுக்கு என்ன பயன் ? என்னும் வினா நுங்கள் உள்ளத்து எழுதல் இயற்கையே. அவ்வையம் நுங்கட்கு வேண்டா. கருணைத் தடங்கடலாம் ஆண்டவன் வேண்டுவார் வேண்டுவனவற்றையெல்லாம் ஈவான். அதிகம் கூறல் வேண்டா ! மனமொழி மெய்களால் சிந்தித்தல் வாழ்த்தல் வணங்குதல் என்னும் மூவித வழிபாடுகளுள் யாவராலும் எளிதில் செய்யவல்ல வாயால் ஒருமுறை வாழ்த்துதல் செய்யின் அமையும். இன்பப்பிழம்பாம் இறைவன் வாழ்த்தியவர் உள்ளத்தை மகிழ்விப்பான். எனவே, அறியாமையில் அமிழ்ந்து கிடக்கும் மக்களே! நுங்கள் போன்று பிறந்திறந்து அல்லலுறும் தேவர்களை முழுமுதற் கடவுளென எண்ணி மனமருள் கொண்டு மாழ்காதீர்கள்" என்னுங் கருத்துக்களை யுள்ளடக்கி அம்மை யப்பனை இறைஞ்சுமுகத்தான்,

"நன்றுடையானைத் தீயதில்லானை
நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமையொருபாக
முடையானைச்
சென்றடையாத திருவுடையானைச்
சிராப்பள்ளிக்
குன்றுடையானைக் கூறவென்னுள்ளங்
குளிருமே"

என்று என்னனைய ஏழை மக்களும் அறிந்துய்யும் வண்ணம் பானல்வாய் மலர்ந்து பாடியருளினார்.

இனி, நாம் எடுத்துக் கொண்ட "சென்றடையாத திருவுடையான்" என்பதைச் சற்றுத் துருவி யாராய்வாம். இத்தொடர் அச் செய்யுளில் நித்திலக் கோவையினிடையே மிளிரும் மாணிக்க மணிபோன்று திகழ்கின்றது. இஃதில்லையேல் அச் செய்யுள் சிறவாததோடு 'கூறவென்னுள்ளங் குளிரும்' என்பதற்கும் பொருளில்லையாய் ஒழியும். முழு முதற் பெருங் கடவுளின் இலக்கணத்தை யுணர்த்துதற்கு இச் சொற்களினுஞ் சிறந்த தொன்று நாம்காணக்கிடத்தல் அரிது. அத்துணை விழுப்பமுடைய சொல் இதுவென்பதை நுண்மாண் நுழைபுலமுடையார் அறிவர். இனி யொருவர் இதுபோன்று கூறவியலாவகை தெள்ளத் தெளிய யாவர்க்கும் முன்னவனாம் இறைவனின் இலக்கணத்தைச், "சேர்ந்தறியாக் கையானை" என்ற ஒரு சிறு தொடரால் மணிவாசகப் பெருந்தகை விளக்கி யருளியதுபோலவே, காழிவேந்தனும், "சென்றடையாத திருவுடையான்" என்று அருளிப் போந்தார்.

இங்ஙனம் அருளிய "சென்றடையாத திருவுடையான்" என்னுந்தொடரில் முழுமுதற் கடவுளின் இலக்கணத்தை யுணர்த்தும் பொருள் என்னவிருக்கின்ற தென்பதை நோக்குவாம். "சென்றடையாத திருவுடையான்" என்பதற்கு "இந்திரன் முதலிய இறையவர்களிடத்துப் போய்ப் பெறக்கூடாத விழுச் செல்வத்தைத் தனக் குடைமையாக வுடையான்" என்று நாம் முன்னர் பொருள் கூறினோம். நாம் இம்மண்ணுலகத் துள்ளாரிடத்தோ விண்ணுலகத்தா ரிடத்தோ பெறுபவைகளை விழுச் செல்வம் என்று சொல்லுதற்கில்லை. ஏனெனில் அவையெல்லாம் நிலையுதலுடையனவாக வில்லை. நிலைத்து நில்லாத போது ஆண்டு இன்பமும் இல்லை

என்க. நாம் ஒரு பொருளைப் பெற்ற போது இன்பமும், அதனை யிழக்கும் போது துன்பமும் அடைகின்றோம். நீடித்து நிற்கும் பொருளிடத்தன்றி நமக்கு இன்பம் உண்டாவதில்லை. அவ்வாறே நிலைத்த - என்ஞான்றும் இடையறாத - இன்பத்தைத் தரவல்ல பொருளை அளிக்கவல்லவரையும் இவ் வுலகத்திலோ மேலுலகத்திலோ கண் டோமில்லை. அவர்கள் நிலைபேறுடை யராயிருந்தாலன்றோ நிலைத்து நின்று இன்பத்தைத் தரவல்ல பொருளை நம் மனோருக்கு அளிக்க வல்லவராவர். எனவே, நிலைத்து நின்று என்ஞான் றும் இடையறா இன்பத்தை நல்கவல் லனவல்லாத பொருள்களை விழுச்செல் வம் என்றோ, அவ்வித விழுச்செல்வ முடையரல்லாதவரைத் திருவுடையார் என்றோ கூறவொல்லுமோ? ஆழ்ந்து சிந்தியுங்கள் அறிஞர்களே! நிலைபே றுடையவனும், இன்ப வுருவினனும், எல்லாப் பொருளையுந் தன்னகத்தே யுடையவனுமாகிய முழுமுதற் பெருங் கடவுள் ஒருவனே "சென்றடையாத திருவுடையான்" என்று தெளிக. 'ஈறி லாதவன் ஈசன் ஒருவனே' யாதலால், அவ் வாதியு மந்தமுமில்லா அரும் பெருஞ்சோதிப் பிழம்பே உயிர்களா கிய நம்மனோர்க்கு நிலைத்த பேரின்ப மாம் விழுச்செல்வத்தைத் தருதற்கு உரியன் என்க.

இனிச், 'சென்றடையாததிரு' என் பது எதுவென ஆராயின், வீடுபேறு என்பது இனிது புலப்படும். வீடுபேற் றினுஞ் சிறந்த பொருள் ஒன்று உண்டு கொல்! அதனினும் இடையறா இன்ப மளிக்கவல்லது வேறொன்று உண்டு கொல்! இல்லை என்க. ஆகவே வீடு பேறு என்னும் விழுச்செல்வத்தையே "சென்றடையாத திரு"வெனக் காழி நாடுடைவள்ளல் சிறப்பித்துக் கூறினா ரென்க. இச்"சென்றடையாத திரு" வையே திருவள்ளுவநாயனார், 'சிறப்பு' எனச் சிறப்பித்துக் கூறினார். இதற்கு உரை வரையவந்த பரிமேலழகியாரும், 'சிறப்பு' என்னுஞ் சொற்கு, 'வீடு பேறு' என்று பொருள்கூறி விரிவுரை யில், "எல்லாப் பொருளினுஞ் சிறந்த தாதலால் வீடு சிறப்பெனப்பட்டது" என விளக்கிப் போந்தார். முத்தி நாதன், சங்கரன், அரன், பகவான், ஈசுவரன் என்னுந் திருப்பெயர்கள் முத்தியைத் தரவல்ல முழுமுதற் கட வுளுக்கே உரியதாக வழங்குதலை அறிந்து உண்மைதெளிக. "பரம்பரத் துய்ப்பவன், மாயப்பிறப்பறுக்கு மன் னன், பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்" என் பனவாதிய சமய குரவர்களின் மதுர வாசகங்களும் இவ்வுண்மையை நிலை நாட்டுதற்கே எழுந்தனவாமென்க. சம யக்கணக்கர் மதிவழி கூறாது உலகியல் கூறிப் பொருளிதுவென்ற பொய்யில் புலவரும், முழுமுதற்கடவுளே "சென் றடையாத திருவுடையான்" என்ப தனை, 'மெய்ப்பொருள்' 'சிறப்பென் னுஞ் செம்பொருள்' என்னும் சொற் களால் விளக்கியருளினார்.

எனவே, இதுகாறும் ஆராய்ந்தவாற் றால், தோற்றக்கேடுகள் இன்மையின் நித்தமாய், நோன்மையால் தன்னை யொன்றுங் கலத்தல் இன்மையின் தூயதாய்த் தானெல்லா வற்றையுங் கலந்து நிற்கின்ற முதற்பொருளே, 'சென்றடையாத திருவுடையான்'என் றும், 'அந்தமில் இன்பத்து அழிவில் வீடே' 'சென்றடையாத திரு' என் றும் அறிந்தோம்.

குறிப்பு :—'சென்றடையாத திருவுடை யான்' என்னுந் தொடர் பொருள் விழுப்ப மும், ஆழமுடைமையும் உடையதா யிருப்ப தால் பலருடைய கருத்துக்களையும் அறிதல் வேண்டுமென்னும் அவாவால், எனது போா சிரியர் மறைமலை யடிகளாரிடம் இதுபற்றி வினவினபோது, யான் இக்கட்டுரையில் எப் பொருள் கொண்டெழுதினேனோ அதையே கூறினார். இதுபற்றிய கருத்துக்களை அறிஞர் கள் எழுதுவாராக.

# அக்ஷமாலிகோபநிஷத்

## (இதுவரை தமிழில் வெளிவரவில்லை)

[அடையாறு லைப்ரேரிப் பணியாளர்
பலாசூர். இராமநாத சாஸ்திரியார் மொழிபெயர்ப்பு]

குறிப்பு :—மறைகள் நிந்தனை மிகுந்துள்ள இக்காலத்தில் மறைகளிலுள்ள செம்பொருள்களை அறிவது நமது கடன். அறியாமலே நிந்திப்பது அறிவுக்கும் அறிவை நல்கிய அரனுக்கும் வஞ்சனையாக முடியும். ஆகவே மறையின் முடிவுப் பொருள்களாகிய உபநிடதங்களை மொழிபெயர்க்க முன் வந்துள்ள சாஸ்திரியார் அவர்கள் எழுதும் பொருள்களை அன்பர்கள் ஊன்றிப்படிக்க வேண்டுகிறோம்.
[ப - ர்.]

வாங்மேமநஸி-என்பது சாந்தி

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியை பிரும்மாவானவர் இவ்வாறுகேட்டார். "ஹே பகவானே ! அக்ஷமாலையின் பேதம் விதி இவைகளை உபதேசித்தருள வேண்டும். அதின் லக்ஷணம் என்ன, பேதங்கள் என்ன, எவ்வளவு சூத்திரங்கள் எவ்விதம் கோப்பது, வர்ணங்கள் எவ்வளவு, எப்படிபிரதிஷ்டை செய்வது, அதன் அதிஷ்டான தேவதை எது, பலன் என்ன ?"

ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் உபதேசித்ததாவது. பவழம், முத்து, ஸ்படிகம், சங்கு, வெள்ளி, ஸ்வர்ணம், சந்தனம், செம்மரம், கொட்டை இவைகளால் ஆகிய ருத்ராக்ஷங்கள் அகாராதி க்ஷகாராந்த வர்ணங்களின் அர்த்தமுள்ள மூர்த்திகளுடன் சேர்ந்து மாகாத்மியத்தை யுடையவைகள். தங்கம், வெள்ளி, தாம்ரம் என்று மூன்று ஸூத்ரங்கள். அதன் த்வாரத்தில் தங்கம். அதன் வலதுபுறத்தில் வெள்ளி. அதன் இடது புறத்தில் தாம்ரம். அதன் முகத்தில் முகம். அதன் பின்புறத்தில் பின்புறம். இவ்வாறு இருக்கும்படி கோக்க வேண்டும்.

அந்த அக்ஷத்தின் உள்ளேயிருக்கும் ஸூத்ரம் பிரும்மம். அதன் இடது புறத்திலுள்ளது வைஷ்ணவம். வலது புறத்திலுள்ளது சைவம். அதன்முகம் ஸரஸ்வதீ. அதன் வால் (பின்புறம்) காயத்ரீ. அதன் த்வாரம் வித்தை. அதன் முடிச்சு பிரகிருதி. உயிரெழுத்துக்கள் வெண்மையானவை. க-முதல் ம-வரையிலுள்ள 25 மெய் அக்ஷரங்கள் மஞ்சள் வர்ண முள்ளவை. மற்றவை இரத்தவர்ண முள்ளவை.

பிறகு அதை ஐந்து பசுக்களின் சரீரங்களாலும் பஞ்ச கவ்யங்களாலும் சோதனை செய்து சந்தனம் சேர்ந்த தீர்த்தத்தால் அபிஷேகம் செய்வித்து பிறகு ஓங்காரத்தோடு தர்ப்பை கூர்ச்சத்தால் அபிஷேகம் செய்வித்து அஷ்ட கந்தங்களால் நன்கு மேல்பூசி நல்ல புஷ்பங்கள் நிறைந்த இடத்தில் வைத்து அக்ஷதை புஷ்பம் இவைகளால் பூஜித்து ஒவ்வொரு அக்ஷத்திலும் அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள வர்ணங்களாக (அக்ஷரங்களாக) த்யானம் செய்யவேண்டும்.

* ஓம். அகார மிருத்யுவை ஜயிப்பவரே முதல் அக்ஷத்தில் (கொட்டையில்) ஸ்திரமாயிரும்.

ஆகார ஆகர்ஷண ஸ்வரூப (வச்யம் செய்யும் சக்தியுள்ளவரே.) எங்கும்

---

* ஓம்என்பதை ஒவ்வொரு அக்ஷரத்தின் ஆதியிலும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

வியாபகரே இரண்டாவது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

இகார புஷ்டியைக் கொடுப்பவரே கலகமற்றவரே மூன்ருவது அக்ஷத் தில் ஸ்திரமாயிரும்.

ஈகார வாக்கின் அநுக்ரஹத்தைக் கொடுப்பவரே நிர்மலரே நான்காவது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

உகார ஸகல பலத்தையும் கொடுப் பவரே மிகவும் சிரேஷ்டமானவரே ஐந்தாவது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஊகார உச்சாடனம் (துஷ்ட விஷ யங்களை விரட்டுதல்.) செய்பவரே, ஸஹிக்க முடியாதவரே ஆருவது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ரு (ஸ்ரீ) கார ஸம்க்ஷோபத்தை யுண் டாக்குகிறவரே, சஞ்சல ஸ்வபாவமுள் ளவரே ஏழாவது அக்ஷத்தில் ஸ்திர மாயிரும்.

ரூ (ஸ்ரீூ) கார ஸம்மோஹனம் செய் பவரே பிரகாசம் உள்ளவரே எட்டா வது அக்ஷத்தில்ஸ்திரமாயிரும்.

லு (ளு) காரத் வேஷத்தை யுண்டு பண்ணுகிறவரே ஸகலத்தையும்மறைப் பவரே ஒன்பதாவது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

லூ (ளூ) கார மோஹத்தைச் செய் பவரே பத்தாவது அக்ஷத்தில் ஸ்திர மாயிரும்.

ஏகார சர்வவச்யமும் செய்பவரே சுத்தஸத்வகுணம் உடையவரே பதி னோராவதுஅக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஐகாரசுத்தஸாத்விகரே புருஷர்களை வச்யம் செய்பவரே பன்னிரண்டா வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஓகார ஸகல வாக்ஸ்வரூபியே நித் யம் சுத்தமானவரே பதின்மூன்ருவது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஔகார ஸகல வாக்ஸ்வரூபியே வச் யம் செய்பவரே சாந்தமானவரே பதி ஞன்காவது அக்ஷத்தில் ஸ்திரமா யிரும்.

அம்கார யானை முதலியவைகளை வச் யம் செய்பவரே மோகன ஸ்வரூபியே பதினைந்தாவது அக்ஷத்தில் ஸ்திரமா யிரும்.

அ: கார மரணத்தை நாசம் செய் பவரே ருத்ரஸ்வரூபியே பதிஞருவது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ககார ஸர்வ விஷயங்களையும் போக் கடிக்கிறவரே! மங்களம் கொடுப்ப வரே பதினேழாவது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

க(வ) கார ஸகலகலக்கம் உண்டாக் குகிறவரே வியாபகரே பதினெட்டா வது அக்ஷத்தில்|ஸ்திரமாயிரும்.

க(ம) கார ஸகல இடையூறுகளை யும் அடக்குகிறவரே மிகவும் சிரேஷ்ட மானவரே பத்தொன்பதாவது அக்ஷத் தில் ஸ்திரமாயிரும்.

க(வ) கார நல்ல பாக்யத்தைக் கொடுப்பவரே ஸ்தம்பனம் செய்கிற வரே 20-வது அக்ஷத்தில் ஸ்திரமா யிரும்.

ஙகார ஸகல விஷயங்களையும் நாசம் செய்பவரே, உக்ரமானவரே 21-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

சகார அபிசாரங்களை நாசம் செய் பவரே க்ரூர மானவரே 22 - வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ச்ச (஛)கார பூதங்களை நாசம் செய் பவரே பயங்கரமானவரே 23-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஜகார பிசாசு முதலியவைகளை நாசம் செய்பவரே அடக்க முடியாத

வரே 24-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஜ்ஜ (ஞ) கார பிரேதங்களை நாசம் செய்பவரே 25-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஞகார மரணத்தை நாசம் செய்பவரே 26-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

டகார ஸகல வியாதிகளையும் அபஹரிப்பவரே அழகுள்ளவரே 27-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ட (ஂ) கார சந்திரன் போன்ற ரூபமுள்ளவரே 28-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ட (஢) கார கருட ரூபியே விஷங்களை நாசம் செய்பவரே 29-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ட (஢) கார ஸகல ஸம்பத்துகளையும் கொடுப்பவரே ஸௌபாக்யம் உள்ளவரே 30-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ணகார ஸகல ஸித்திகளையும் கொடுப்பவரே பிறரை மோகிக்கும்படி செய்பவரே 31-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

தகார தனம் தான்யம் முதலிய ஸம்பத்துகளைக் கொடுப்பவரே பிரஸன்னமானவரே 32-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

த(ய)கார தர்மங்களை அடையும்படி செய்பவரே நிர்மலமானவரே 33-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

த(ஓ)கார புஷ்டி விருத்தி முதலியவைகளை செய்பவரே அழகுள்ளவரே 34-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

த(ய)கார விஷ ஜ்வரங்களை நீக்குபவரே ஸர்வவியாபகரே 35-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

நகாரபோக மோக்ஷங்களைக் கொடுப்பவரே சாந்தரூபியே 36-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

பகார விஷம் விக்னம் முதலியவைகளை நாசம் பண்ணுகிறவரே மங்களரூபியே 37-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ப(ஃப)கார அணிமாதி ஸித்திகளைக் கொடுப்பவரே ஜோதிரூபியே 38-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ப(ப)கார ஸகல தோஷங்களையும் போக்கடிக்கிறவரே சுபரூபியே 39-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ப(ஹ)கார பூதங்களை (பிசாசு முதலியவைகளை) சமனம் பண்ணுகிறவரே பயங்கர ரூபியே 40-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

மகார சத்துருக்களை மோகிக்கும்படி செய்கிறவரே 41-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

யகார எங்கும் வியாபித்தவரே பரிசுத்தமானவரே 42-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ரகார தஹிக்கும் குணமுள்ளவரே விகாரம் செய்பவரே 43-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

லகார உலகத்தைக் காப்பாற்றுகிறவரே பிரகாசமானவரே 44-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

வகார எங்கும் வியாபிக்கச் செய்பவரே நிர்மலமானவரே 45-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ச(ஶ)கார ஸகல பலன்களையும் கொடுப்பவரே பரிசுத்த மானவரே 46-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஷகார தர்மம் அர்த்தம் காமம் இவைகளைக் கொடுப்பவரே வெண்மை

நிற முள்ளவரே 47-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஸகார ஸகலத்திற்கும் காரணமானவரே ஸகல வர்ணங்களுக்கும் பொதுவான வரே 48 - வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

ஹகார ஸகல வாக்ஸ்வரூபியே நிர்மயமானவரே 49 - வது அக்ஷத்தில் ஸ்தாரமாயிரும்.

ளகார ஸகல சக்திகளேயும் கொடுப்பவரே பிரதானமானவரே 50-வது அக்ஷத்தில் ஸ்திரமாயிரும்.

க்ஷகார பராபர தத்துவங்களே போதிப்பவரே சிலாக்யமான சோதிரூபியே சிகாமணியில் (நாயகமணியில்) ஸ்திரமாயிரும்.

இவ்வாறு ஒவ்வொரு அக்ஷத்திற்கும் ஆவாஹனம் செய்து விட்டுக் கீழ் வரும் மந்திரங்களேச் சொல்ல வேண்டும். எந்த தேவர்கள் பூமியில் இருக்கிறார்களோ அவர்களுக்கு நமஸ்காரம். பகவத் ஸ்வரூபமான அவர்களும் பிதுர் தேவதைகளும் ஞானமயமான இந்த அக்ஷமாலேக்குத் தேஜஸை அனுக்ரகம் செய்ய வேண்டும்.

எந்த தேவர்கள் ஆகாயத்திலிருக்கிறார்களோ அவர்களுக்கு ஓம் நமஸ்காரம். பகவத் ஸ்வரூபமான அவர்களும் பிதுர் தேவதைகளும் ஞானமயமான இந்த அக்ஷமாலேக்கு தேஜஸை அநுக்ரஹம் செய்ய வேண்டும்.

எந்த தேவதைகள் ஸ்வர்க்கத்தில் இருக்கிறார்களோ அவர்களுக்கு நமஸ்காரம். அவர்களும் பிதுர் தேவதைகளும் ஞானமயமான இந்த அக்ஷமாலேக்குத் தேஜஸை அனுக்ரஹம் செய்ய வேண்டும்.

எந்த மந்திரங்களோ எந்த வித்தைகளோ அவைகளுக்கு நமஸ்காரம். அவைகள் இதற்குச் சக்தியை அனுக்ரஹிக்க வேண்டும்.

எந்த பிரும்மா விஷ்ணு ருத்திரர்களோ, ஸகுணமான அவர்களுக்கு ஓம் நமஸ்காரம். அவர்களின் வீர்யம் இதில் ஸ்திரமா யிருக்க வேண்டும்.

எந்த ஸாங்கியம் முதலிய 96 தத்துவங்களின் பேதங்களோ அவைகளுக்கு நமஸ்காரம். நீங்கள் இங்கு மிகவும் சிரேஷ்டர்களாய் இருந்து கொண்டு காமதேனுக்கள்போல் அக்ஷமாலிகாவை உபாஸனேசெய்கிறவனுக்கு இஷ்டமான பலன்களேக் கொடுத்துக் கொண்டு இங்கு எப்போதும் பிரத்தியக்ஷமா யிருங்கள்.

எந்த சைவர், வைஷ்ணவர், சாக்தர் நூற்றுக் கணக்காயும் ஆயிரக் கணக்காயும் இருக்கிறார்களோ அவர்களுக்கு அநேக நமஸ்காரம். பகவத் ஸ்வரூபமான அவர்கள் அங்கீகாரம் செய்ய வேண்டும். அனுக்ரஹம் செய்யவேண்டும். எவைகள் மிருத்யுவுக்குப் பிராணனேக் கொடுக்கின்றனவோ அவைகளுக்கு நமஸ்காரம். அவைகள் இந்த மாலேயில் ஸ்திரமாயிருந்து உபாஸகனுக்குச் சுகத்தைக் கொடுக்கும்படிச் செய்யவேண்டும். பிறகு இந்த மாலேயில் ஸர்வ ஆத்ம ஸ்வரூபத்தையும் தியானம் செய்து சித்த சுத்தியுடன் மாலேயை உற்பத்திசெய்து விசேஷ நிவேதனங்களால் திருப்தி செய்து அகாரம்முதல் க்ஷகாரம் வரையிலுள்ள அக்ஷரங்களால் 108 அக்ஷங்களுள்ள மாலேயை ஸ்வீகரிக்க வேண்டும். (அதாவது அகாரம் முதல் ள காரம் வரையில் இரண்டு முறை திருப்பினல் 100 ஆகின்றது. பிறகு அ, க, ச, ட,

த, ப, ய, ச, என்னும் வர்க்கங்களின் ஆதி அக்ஷரங்களைச் சேர்த்தால் அப்போது 108 ஆகின்றது. க்ஷகாரத்தை ஒரு முறை மேரு ஸ்தானத்தில் (நாயகமணி ஸ்தானத்தில்) சேர்க்க வேண்டும் என்பது கருத்து.

பிறகு பிரதக்ஷிணம்செய்து இவ்வுலகில் வச்யம் முதலிய ஆறு கர்மங்களுக்குச் சாதகமாய் இருக்கும்படிக்கும் சிலாக்யமான மோக்ஷபதவியைக் கொடுப்பதற்குத் தகுதியாய் இருக்கும்படிக்கும் அக்ஷமாலையை இம்மந்திரங்களால் ஸ்தோத்திரம் செய்ய வேண்டும். 'பகவத்ஸ்வரூபமான அக்ஷமாலையே ஓம் உனக்கு நமஸ்காரம். நீ மந்திரங்களுக்கு மூலபூதமான அக்ஷரமயமாய் இருக்கின்றாய். ஸகலரையும் வசம் செய்வாயாக. ஸகலரையும் ஸ்தம்பனம் செய்வாயாக. உச்சாடனம் செய்வாயாக. மிருத்யுவை ஜயிக்கும் ரூபமுள்ளவளே! ஸகலத்தையும் பிரகாசிக்கச் செய்பவளே! ஸகல உலகங்களையும் ரக்ஷிப்பவளே! ஸகல உலகங்களையும் ஜீவிக்கச் செய்பவளே! எல்லாவற்றையும் உண்டு பண்ணுகிறவளே! பகலிலும் இரவிலும் காரியங்களைச் செய்யும்படிச் செய்பவளே! நதிகள் தீவுகள் தேசாந்தரங்கள் லோகாந்தரங்கள் இவைகளைத் தாண்டுகிறவளே! எப்போதும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறாய். எல்லாருடைய மனதிலும் வசிக்கின்றாய். பராரூபிணி! 'உனக்கு நமஸ்காரம். பச்யந்தீ ரூபிணி, மத்யமாரூபிணி, வைகரீ ரூபிணி உனக்கு நமஸ்காரம். ஸகலதத்துவ ஸ்வரூபிணி, ஸகல வித்யா ஸ்வரூபிணி, ஸகல சக்தி ஸ்வரூபிணி, ஸர்வதேவதா ரூபிணி, வஸிஷ்ட முனிவரால் பூஜிக்கப்பட்டவளே, விச்வாமித்ரமஹரிஷியால்ஸேவிக்கப் பட்டவளே உனக்கு அநேக கோடி நமஸ்காரம். (இவ்வாறு பூஜித்து விட்டுப் பிறகு அக்ஷமாலிகையைத் தரித்துக் கொள்ள வேண்டும்.)

இவ்வுபநிஷத்தைக் காலையில் அத்யயனம் செய்தால் இரவில் செய்த பாபம் நிவர்த்தியாகும். மாலையில் படித்தால் பகலில் செய்த பாபம் போகும். காலையிலும் மாலையிலும் படிப்பவன் எவ்வளவு பாபமுள்ளவன் ஆனாலும் அவ்வளவும் நீங்கி மிகவும் பரிசுத்தனாகிறான். இவ்விதம் அக்ஷமாலிகைக்கு ஜபிக்கப்பட்ட மந்திரங்களெல்லாம் அப்போதே உபாஸகனுக்கு ஸர்வ காரியஸித்திகளையும் உண்டாக்குகின்றன என்று ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யர் பிரும்மாவுக்கு உபதேசம் செய்தார்.

---

# பண்டைத் தமிழரின் சமயம்

[K. சோமசுந்தரம், B. A., தஞ்சை]

பழந்தமிழ் மக்களது சமய நிலைமையினையும், அதன் பரந்த பெருக்கினையுமறிய நம் தமிழ் இலக்கிய நூற்களே இன்றியமையாதனவா யிருக்கின்றன. வடநாட்டாரியர்கள் தம் நூதன மதத்தைத் தமிழ்மக்களிடம் புகுத்தி வைப்பதற்குப் பன்னெடு நாட்களுக்கு முன்னரே தமிழ் மக்கள் கடவுள் வணக்கத்தினைக் கைக்கொண்டிருந்தனர். இவரது மதப்பற்று தனித்து சிறப்புற்று விளங்கும் தன்மைத்து. இவர்கள் முதன் முதலில் ஒளியுற்று விளங்கும் சூரியசந்திராதிகளையும் விண் மீன்களையும் விசும்பினை

யும் கடவுளாகத் துணிந்து வணங்க லுற்றனர். பின்னர் அரவம் முதலிய அவ்வகை யினத்தையே வழிபடுவா ராயினர். இவ்வரவங்கள் அரவம் செய்யாது மக்கள் வாழுமில்லங்களி னண்மையில் உலவித் திரிந்து கொண்டிருப்பதும், அவைகள் மக்களைத் தீண்டும்பொழுது அவர்களுக்கு 'யாதொரு விதமான இன்னல்கள் உண்டு பண்ணாது அவர்களை உடனே மரிக்கச் செய்வதுமாகிய இவ்வகை மகிமைகளை அவைகள் கைக்கொண் டிருப்பதால் * நம் தொல்குடியினர் மக்களது ஆன்மாவினை நாகங்கள் இழுத்துத் தம் மகத்தே வைத்துக் கொள்கின்றன எனவும் மற்றும் இடியின் சப்தமும் மின்னின் ஒளியும் கண்ட அரவங்கள் உடனே இறத்தல் போன்று அருளொளியின் முன்னர் ஐம்புலன் அவாக்களாகிய அரவுகள் அடியுடன் அழிவுறும் எனவும்

* The serpent has been selected of all animals as the distinctive type or emblem of wisdom. Its silent gliding motion, its habit of making haunts near human households, like an animal easily domesticated and yet retaining its native fierceness, the remarkable effects of snake-bite where death almost immediately follows and yet without dismemberment, with little or no loss of blood and with hardly any perceptible mark of a wound making it appear as if the soul of a dead man had been drawn out by the serpent and dwelt in it: all these are phenomena calculated to impress the mind forcibly.

—*Froude.*

" அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலே
றணங்குடை யரவின ருந்தலை துமிய
நின்றுகாண் பன்ன நீண்மலை மிளிரக்
குன்றுதூ வெறியு மரவம் போல "

—**புறம்**-211.

உள்ள சிறந்த கொள்கைகளைக்கொண்டு அவைகள் தாம் கடவுளென அவைகளை வணங்கி வந்தனர். மற்றும் இவ்வரவங்கள் ஒவ்வோர் ஆட்டையில் தங்களைக் காத்துக் கொள்ளுவதற்காகத் தாங்களே ஏற்படுத்திக் கொண்ட ஒரு வெள்ளிய சட்டையினை உரித்துக் கொண்டு புதியதை நாடியதினுன் இவைகளை வணங்கும் பழந்தமிழ் மக்களிலொரு குழுவினராகிய நாகர்கள் [முரஞ்சியூர் முடிநாகராயர்] தங்களுடல் அரவத்தின் கழிந்த ஆடையென வுன்னி ஆன்மாவிற்கு அழிவில்லையென்றும் மறு பிறப்புண்டென்றும் நம்பியிருந்தனர்.*

உருவ வழிபாட்டினும் அருவவழிபாடே நனிசிறந்ததெனத் தமிழகத்துச் சான்றோர்கள் கடவுளை அருவ வணக்கமாகவே வணங்கினர்.

' கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றுங்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே '

—**தொல் - பொருள்** ௮௮.

என்பது தொல்காப்பியம். கொடிநிலை யென்பது 'வெஞ்சுடர் மண்

* 'The snake throughout the East is the symbol of knowledge and immortality. The serpent with his tail in his mouth (an ancient persian symbol) represented the circle of eternity. The serpent in annually shedding its skin was supposed to renew its life for ever. This casting off the slough is regarded as an emblem of resurrection and immortality.'

—*Froude.*

டிலம்.' 'பொய்தீர் உலகம் எடுத்த கோடிமிசை மையறு மண்டிலம் வேட்டனள்' என்பது கலித்தொகை. ஈங்கு 'கொடி' யென்பது கிழக்குத் திசையிற் றோன்றும் வெஞ்சுடர் மண்டிலத்துக் கதிரொளியைக் குறிக்கும். ஞாயிறு உலகினிருளை நீக்குகின்றான். அஃதேபோன்று அக இருளை நீக்கும் வன்மையும் அவனுக்குண்டென ஞாயிற்றைக் கடவுளாக வோர்ந்து தொழுதனர் நம் பண்டைத் தமிழர்.

'உலக முவப்ப வலனேர்பு திரிதரு
பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு'

**—திருமுருகாற்றுப்படை.**

'ஞாயிறு போற்றுதும் ஞாயிறு போற்றுதுங்
காவிரி நாடன் திகிரிபோற் பொற்கோட்டு
மேறுவலந் திரிதலால்'—**சிலப்பதிகாரம்.**

மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர் கந்தழி யென்பதனைப் பற்றி பின்வருமாறே கூறியுள்ளார். 'கந்தழியாவது ஒரு பற்றுமற்று அருவாய்த் தானே நிற்குந் தத்துவங் கடந்தபொருள்' அது

'சார்பினுற் றோன்றாது
தானருவா யெப்பொருட்குஞ்
சார்பெனநின் றெஞ்ஞான்று
மின்பத் தகைத்தரோ
வாய்மொழியான் மெய்யான்
மனத்தான் அறிவிறந்த
தூய்மையதா மைதீர் சுடர்'

என்பதாம்.

இதனை 'உற்றவாக்கையினுறுபொருணறுமல ரெழுதரு நாற்றம்போற், பற்ற லாவதோர் நிலையிலாப் பரம்பொருள்' என அதனை உணர்ந்து கூறியவாற்றா னுணர்க. இதனுற் 'கந்தழி எனப்படுங் கடவுள் சித்து, சடம் எனும் இருவகை யுலகினுள்ளும் ஒன்றாய் இவை தம்மையெல்லாம் முற்றும் வியாபித்துக் கொண்டு எவ்வகைப் பற்றுமின்றி நிலைபெறும் பேரின்ப நிலையமென்பது' பெற்றாம்! தொல்காப்பிய காலத்து முன்னரேயுள்ள பண்டைத் தமிழர் கடவுளை 'உலகத்தின் உள்ளும் புறம்புமாய் நின்று அறிய வல்லதை அறிவித்தும் அசைய வல்லதை அசைவித்தும் பேரொளிப் பிழம்பாய் அருவாய், அறிவாய் இன்பமாய் விளங்குபவர் முழுமுதற் கடவுள் என அபிப்பிராயப்பட்டு பற்றற்ற தனிப்பொருள் அம் முழுமுதற் கடவுளென ஆராய்ந்து கொண்டார்கள். 'வள்ளி' என்பது தண்கதிர் மண்டிலமாகிய சந்திரனைக் குறிப்பது. இதனையும் கடவுளெனப் பழந்தமிழர் துணிந்து கோடற்கு,

'தேய்த லுண்மையும் பெருக லுண்மையு
மாய்த லுண்மையும் பிறத்த லுண்மையு
மறியா தோரையு மறியக் காட்டித்
திங்கட் புத்தே டிருதரு முலகத்து'

**—புறம் - 27.**

'மாய்தலும் பிறத்தலும் வளர்ந்து வீங்கலுந்
தேய்தலு முடைமையைத் திங்கள் [செப்புமால்'

**—சீவக சிந்தாமணி.**

என்பன சான்றுகளாம்.

பண்டைத் தமிழ்ப் பேராசிரியர் காலத்தமிழர், அடவியில் உலவி, கானவர்க்குத் துன்புறுத்துமாறு அலைந்து கொண்டிருக்கும் புலி முதலிய கொடிய மிருகங்களைக் கொன்றும், போர்முகத்தே பகைவர்களை வென்று குடிகளுக்கு யாதொரு தீங்குறாவண்ணம் ஓம்பும் குணமுடைய வாகைமாலை புனைந்த வீரர்களையும் கடவுளெனக் கருதி அவர்களைக் குறித்து 'நடுகல்லை' நாட்டி சிவந்த பூமாலையினையும் பீலியையும் சூட்டி, பெருவிழா செய்து வணங்கி

வந்தனர் (Hero-worship). இது ஈண்டு வரும் வரிகளால் ஒரு சிறிது விளக்கப் பட்டது.

'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல்
சீர்த்தகு மரபிற் பெரும்படை வாழ்த்தல் [என்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணர'
—தொல்காப்பியம்.

'நல்லமர் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலைநடுகல்—அகம்.

'பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுந்து தொடுத்த செம்பூங் கண்ணியொ
டணிமயிற்பீலி சூட்டிப் பெயர் பொறித்
தினி நட்டனரே கல்லும்'—புறம்.

# "உம்பர்கட் கரசு"

[கி. குப்புச்சாமி முதலியார்]

"உம்பர்கட் கரசே ஒழிவற நிறைந்த
யோகமே யூற்றையேன் றனக்கு
வம்பெனப் பழுத்து என்குடி முழுதாண்டு
வாழ்வற வாழ்வித்த மருந்தே
செம்பொருட் டுணிவே சீருடைக்கழலே
செல்வமே சிவபெரு மானே
எம்பொருட் டுன்னைச் சிக்கெனப் [யே"
பிடித்தேன் எங்கெழுந் தருளுவதினி

(இ-ள்.) உம்பர்கட்கு-தேவர்கட்கு, அரசே - தலைவனே, ஒழிவு-ஒழிதல், அற - இல்லாது, நிறைந்த - நிறைவு பெற்ற, யோகமே - யோக மயமா யிருப்பவனே, ஊற்றையேன் றனக்கு - அழுக்கு மெய்கொண்ட எனக்கு, வம்பு எனப் பழுத்து - பருவமல்லாத காலத்தில் தோன்றி, என் குடி முழுதும் - என் குடியிலுள்ள எல்லோரையும், ஆண்டு - அடிமைகொண்டு, வாழ்வற - பிறப்பினின்றும் நீங்க, வாழ்வித்த - தேவரீர் திருவடியில் வாழச் செய்த, மருந்தே - அமுதம் போன்றவனே, செம்பொருள் துணிவே-செம்பொருள் இதுவேயெனத் துணிவதற்கு இடமானவனே, சீருடைக்கழலே - சிறப்பினையுடைய திருவடியை யுடையானே, செல்வமே - நிலையாயுள்ள செல்வமா யிருப்பவனே, சிவபெருமானே - சிவபெருமானென்னும் திருநாமமுடையானே, எம்பொருட்டு-என் நன்மையின் பொருட்டு, உன்னை-தேவரீரை, சிக்கென - உறுதியாக, பிடித்தேன் - பற்றினேன், இனி-இனிமேல், எங்கு-எவ்விடத்து, எழுந்தருளுவது - செல்வது? (எ - று.) ஏ - அசை.

(வி-ரை.) பிடித்தப் பத்தின் முதற் செய்யுளாகிய இத்திருவாசகத்தைச் சிறிது ஆராய்வாம். சமய குரவராகிய மணிவாசகப் பெருந்தகை "பற்றுக பற்றற்றான் பற்றினை" என்னும் திருவாக்கின் வண்ணம், இறைவன் திருவடியைத் தாம் பற்றிநின்ற தகுதியை உலகோர்க்கு அறிவிப்பான் கருதி முன்னால் அவ்விறைவன் இவ்வித தகுதியுடையான் என்று அறிவிப்பார், "உம்பர்கட் கரசே" என விளித்தனர். ஏனெனில் அவனொடு ஒப்பாரும் அவனினும் மிக்காரு மில்லையாதலால் அவ்விதம் கூறினார் என்க. அது என்னையோவெனின்,

"சிவஞ் சத்தி நாதம்
விந்து சதாசிவன் றிகழுமீச
னுவந்தரு ளுருத்திரன் றான்
மாலய னொன்றி னொன்றாய்ப்

பவந்தரு மருவ நாலிங்
குருவனா லுபய மொன்று
நவந்தரு பேதமேக
நாதனே நடிப்ப னென்பர் ''

என்ற இச் சிவஞான சித்தியார் திரு விருத்தத்தின்படி, சிவம், சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசன், உருத்திரன், மால், அயன் என்கின்ற ஒன்பது பேதங்களாக இறைவன் ஒருவனே நடிக்கின்றுனுதலால், அவ்வித தகுதியுடையானே முதல்வன் என்பார், " உம்பர்கட்கரசே " என்றனர்.

இனி, உலகத்து நித்தியமாயுள்ள பொருளை யாய்ந்துணர வேண்டுவோர் தியானிப்பதற் குரிய தியானமாயும், கூடுதற்குரிய கூட்ட மாயும், ஓர்ந்து உணருவதற்குரிய உபாயமாயும், உயர்ந்த பொருள்களுக் கெல்லாம் உயர்ந்த பொருளாயு மிருப்பது இப்பொருள் என்பார், " ஒழிவற நிறைந்த யோகமே " என்றார். இவ்வித பெரிய தகுதியுடையார் தம்மைவந்து ஆண்டது மிகுதியும் விந்தை யென்பார், " ஊற்றையேன் றனக்கு " என்றனர். தாம் இருவித பற்றுமற்று ஆண்டவன் திருவடியையே பற்றி நிற்பவ ராயினும் ஏனைய மானுடர் இயல்பில் நிற்பார் போல், " ஊற்றையேன் " என்றார். முற்றத்துறந்த முழுஞானியரும் இவ்விதம் தம்மை யிழித்துக் கூறுவது இயல்பு என்பதை, " அழுக்கு மெய் கொடுன் திருவடியடைந்தேன் " என்னும் மற்றோர் சமய குரவராகிய சுந்திரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கானும் உணர்தல் கூடும்.

இனி, தாம் அதிதீவிர பக்குவ நிலையை யடைந்தவரா யிருந்தும் தாம் பக்குவரல்லர் என்றும், பக்குவரல்லாத தமக்கு இறைவன் அருள் செய்தனர் என்றுகூறுவார்போன்று, "வம்பெனப் பழுத்து " என்றார். " வம்பெனப் பழுத்து " என்னுஞ் சொற்களை உலக வழக்கின்மேல் வைத்து ஓதினாரயினர். அது எவ்விதமெனின், கார்காலத்துக் காய்க்கும் மாங்கனியைப் பருவமல்லாத காலத்துக் காய்த்ததொரு காய் என்னும் குறிப்பினை யுணர்த்த உலகோர், " வம்புக்காய் " என்றனர். அவ்வழக்கைக் குறிப்பிப்பான் பொருட்டு நம் குரு சிகாமணி, " வம்பெனப் பழுத்து " என விதந்தனர். இவ்விதம் தன்னளவில் மாத்திரம் நில்லாது தன் குடித் தோன்றினாயுள்ள எல்லோர்க்கும் ஆளுந் தகைமையுடைய இறைவனயினன் என்பது போதர, "என்குடி முழுதாண்டு " என்றனர்.

இவ்விதம் ஆண்டமையால் மறுபடியும் மண்ணுலகத்து வந்து பிறவாத "வாழ்நாள் வழியடைக்குங்கல்" ஆயிற்று என்பார் "வாழ்வற" என்றும், எல்லா உலகிற்கும் மேலாய வீட்டுலகின்கண் இனி வாழும்படிச் செய்தார் என்பது போதர, "வாழ்வித்த" என்றும், பிறவி யென்னும் பெரும் பிணியைத் தீர்ப்பதற்கு இதனினும் ஒரு மருந்து இல்லையென்பார், "மருந்தே" என்றும் கூறினர்.

உலகத்துப் பொருள்கள் பல உளவாயினும் அழிந்துபடாது அடைந்தோர் பலரையும் பிறவியென்னும் பேதைமை நீங்கும்படி, 'சிறந்துள்ள செம்பொருள் வேறொன்றில்லை இதுவே யாகும்' என்று அறுதியிட்டுக்கூறுவார், "செம்பொருட்டுணிவே" என்றனர். இத் திருவாசகத்து எழுந்த செம்

பொருள் என்பதனைப் பெருநாவல ராகிய பொது நூலாரும்,

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்
பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு"

என்று தமது அருமைத் திருவாக்கால் இறைவனைச் செம்பொருள் எனக் கூறினார். எல்லா உலகத்தும் உள்ளார் கழலைப் போற்றுவது "புணை" யாகாது. இத்திருவடியே பிறவியென்னும் பெருங்கடல் நீந்தி முத்தியென்னும் கரை சேருவதற்குரிய தெப்பமாகுமென்பார், "சீருடைக்கழலே" என்றனர். ஆயின் உலகத்துச் செல்வத்தை யடைந்தார் அறத்தையும் இன்பத்தையும் அடைதல் கூடும் என்று உபசரித்துக் கூறினும், அச்செல்வம் அழிதன் மாலைத்தாகிய செல்வமென்றும், என்றும் ஒழிதலில்லாத இன்பமாகிய வீட்டின்பத்தைத் தருவது இச்செல்வமே யென்பார், "செல்வமே" என்றும், உம்பர்கட்கரசாகிய இவனுக்கு உரியதோர் திருப்பெயர் இதுவென்று கூறுவார், "சிவபெருமானே" என்றும் அருள் செய்தனர்.

அன்றியும் இவ்விதம் பெரியதோர் தகுதி வாய்ந்தவராகிய தேவரீரைப் புல் முதலாகச் சொல்லப்பட்ட பிறவிகள் தோறும் உழன்று நிலைபெற எண்ணிய யான் பற்றுவான்பொருட்டு பற்றினேனென்பார், "எம் பொருட்டு" என்றனர். பற்றை யறுப்பதற்குப் பற்றற்றவனையே பற்றுதல் வேண்டுமாதலால், "உன்னை" என்றனர். அவ்விதம் பற்றுதலிலும் தூய்மை கொண்ட மனதுடன் உறுதியாகப் பற்றுதல் வேண்டு மென்பார், "சிக்கெனப் பிடித்தேன்" என்றார். ஒரு முறை ஆண்டவன் திருவடியை அடைந்தார் மறுபடியும் அத்திருவடியை அகல்வதற்கில்லை யென்பார், "எங்கெழுந் தருளுவது இனியே" என்றனர்.

இவ்விதம் அருட் பெருந்தகையாகிய மணிவாசகப் பெருந்தகை உலகத்து உள்ள ஆன்மாக்களுக்கு முத்திப்பேறு இதுவாகும்; அதில் உண்டாகும் இன்பம் இதுவாகும் என்று உணர்த்திய பிடித்த பத்து என்னும் செய்யுட்களில் முதற் செய்யுளில் ஒரு சிறிது சிற்றறிவுக் கெட்டிய வண்ணம் கண்டு மகிழ்வதற்காயிற்று.

---

# அறம் பொருளின்பம் வீடு

[R. M. அண்ணாமலை செட்டியார்]

மா:—அறவழி நிற்கும் ஐயனே! அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கும் மக்கட்கு உறுதிபயக்கும் பொருளென்பதாக முன்னர்க் கூறியதை மனதிற்கொண்டேன். ஆதலால் அவற்றைப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்த வேண்டுகின்றேன்.

குரு:—அன்பனே! உன் மனப்படியே முறையாகநிகழ்த்துவாம். கேட்பாயாக. முதலாவதாக இருப்பது அறமல்லவா; அறமானது ஏனைப் பொருளும் இன்பமும் போலன்றி இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றனையும் பயத்தலால் அவற்றின் வலியுடைத்தென்பது பெற்றும். இதனாலன்றோ "அறஞ்செய விரும்பு" என்னும் முதுமொழியும் எழலாயிற்று. எழுவகைப் பிறப்பினுள்ளும் மானு

டப் பிறவியை நாம் பெற்றுக்கொண்ட அருமையை உற்று நோக்குவோ மாயின் அது ஒரு மனிதன் கடலைக் கையால் நீந்திக் கரையேறிய தன்மை யை யொக்கும். ஆதலால் பெறுதற் கரிய பிறவியாகிய மானுடப் பிறவி யைப்பெற்று வைத்தும் அறவழி நில் லாது காலத்தை அவமாகக் கழிப்போ மாயின் மக்கட்பிறப்பாற் பெறவேண் டிய பயனை பெறுவதெக்காலம். இனி வரும் பிறவியில் அறவழிநின்று பெற வேண்டிய பயனைப்பெற்றுக் கொள் வாமெனின் 'இப்பிறவி தப்பினால் எப் பிறவி வாய்க்குமோ ஏது வருமோ' அறிகிலேம். அற்றாயின் இப்பிறவி யிற்றானே யாம் இதுபொழுது இளைய மாகலின் இறக்குங் காலத்துச் செய்து கொள்வாமெனின், சென்ற காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியை நினைத்துப்பார்த் துங் கூறமுடியாத நமக்கு இனி நிகழ விருக்கும் நிகழ்ச்சியைக் கூற முடி யுமோ?முடியாதென்பதுதானே பெறக் கிடத்தலால்இறக்குந்தருணத்தை நாம் கூறவல்லே மல்லேம். அன்றியும் எப் படி வெள்ளம் வருதற்கு முன்னரே அணைகட்டி வையாமல் ஆற்றில் வெள் ளம் வருங்காலத்து அணை கட்டிக் கொள்ள முடியாதோ அப்படியே உயி ரோடிருக்கும் காலத்து அறத்தைச் செய்யாமல் இறக்குந் தருவாயில் பிறரை நோக்கி நமது பொருட்களை அற வழியிற் செலவு செய்யுங்கள் என்று கூறவும் முடியாதே. ஆதலால் அறமாகிய நல்வினையை இன்றே செய் தல் வேண்டும். இன்று இன்னே செய் தல் வேண்டும். ஏனென்றால் முற் பிறவியி லிருந்து நாம் இப்பிறவிக்கு வரும்போது நம்முடன் வந்தவை மண்ணா? பெண்ணா? பொன்னா? இவை யொன்றுமில்லை. பின் எது வந்தது? "பற்றித் தொடரும் இரு வினைப் புண்ணிய பாவமுமே" என்ற படி நாம் செய்துகொண்ட வினைகளே யாகும். நல்வினையின் பயன் இன்ப மும் தீவினையின் பயன் துன்பமு மன்றோ! அற்றாயின் ஆன்மாக்களாகிய நாமெல்லோரும் துன்பத்தினின்றும் விடுபட்டு இன்பத்தையே பெறுதற் குப் பேரவாவுடையே மென்பதை எவரே மறுக்க வல்லார். மறுப்பா ரொருவருமில்லை. ஆதலால் அறமாகிய நல்வினையை விரைந்து செய்தல்வேண் டும். அதுவே செய்த வுடம்பழியவும் உயிரோ டொன்றி ஏனையுடம்பினுஞ் சேரலால் பொன்றாத் துணை யென்பது பெற்றாம். இதுபற்றியன்றோ "அன் றறிவா மென்னா தறஞ்செய்க மற்றது பொன்றுங்காற் பொன்றாத் துணை" யென்றார் நம் தெய்வப்புலமைத் திரு வள்ளுவனார்.

அஃ தூண்மையானால் அறத்தைச் செய்தார் இன்பத்தையும் மறத்தைச் செய்தார் துன்பத்தையும் அடைவார்க ளென்பதற்குப் பிரமாணம் என்னை யோவெனின், அன்பனே! இதற்கு ஆகமப் பிரமாணம் வேண்டுவதில்லை. காட்சி யளவையில் வைத்தே காட்டு கின்றேன். கேட்பாயாக. அருளே திரு மேனியாகவுடைய நம் ஆண்டவனுக்கு ஆன்மாக்களாகிய நாமெல் லோரும் ஒத்த பிள்ளைகளாயிற்றே. அங்ஙன மாக இங்கே சிலர் இன்பத்தை யநுப விப்பாராயும் பலர் துன்பத்தை யநுப விப்பாராயும் சிலர் அறிவுடையாராயும் பலர் அறிவிலாராயும் சிலர் செல்வந்த ராயும் பலர் வறியராயும் சிலர் அழ குடையராயும் பலர் அழகிலராயும் இருப்பதே சான்று. இதற்குக் கார ணம் "அவரவர் வினையில் அவரவர்

வருவர்,'' என்ற திருவாக்குப்படி அவ ரவர்கள் செய்து கொண்ட நல்வினை, தீவினைகளே அவ்வேற்றுமை கட்குக் காரணமென்க. அவ்வேற்றுமை கட்குக் காரணம் வினையெனக் கொள்வா னேன்? உலகம் நடைபெறுதற் பொருட்டு இறைவனால் அங்ஙனம் வேற்று மைப்படப் படைக்கப் படுகின்றார்க ளென்று லென்னையெனின், கடவுட்கு ஆன்மாக்க ளனைவரும் ஒத்த மக்களா தலின் தன்னிச்சைப்படி வேற்றுமைப் படப் படைக்கமாட்டாரென்க. ஈண்டு இன்பத்தைவெறுப்பாரும்துன்பத்தை விரும்புவாரும் உளரோ! அறிவை வெறுப்பாரும் அறியாமையை விரும்பு வாரும் உளரோ! செல்வத்தைவெறுப் பாரும் வறுமையை விரும்பு வாரும் உளரோ! அழகைவெறுப்பாரும் அழ கின்மையை விரும்புவாரும் உளரோ! இல்லை, இல்லை; இல்லை. பின் விரும்புவ தென்னை?

இன்பத்தை யநுபவித்தல் வேண் டும். அறிவுடையராய் விளங்குதல் வேண்டும். செல்வந்தராய் வாழ்தல் வேண்டும். அழகுடையராய்ப் பொலி தல்வேண்டும். இன்னோரன்ன சிறப் புக்களெல்லாம் வேண்டும். அற்றாயின் யாது செய்தல்வேண்டும்? அவற்றிற் குக் காரணமாய அறத்தைச் செய்தல் வேண்டும். மறத்தை நீக்குதல் வேண் டும். இனி இவ்வறத்தை எவ்வாறுசெய் தல் வேண்டுமென்பையாயின் மனதால் நல்லதை நினைத்தல் வேண்டும். வாக் கால் நல்லதைச் சொல்லுதல் வேண் டும். காயத்தால் நல்லதைச் செய்தல் வேண்டும்.

இல்லறம் பொருளளவிற் கேற்பவும் துறவறம் யாக்கைநிலைக் கேற்பவும் செய்தல்வேண்டும். எப்போது செய் தல் வேண்டுமெனின் இன்பத்தையே எப்போதும் பெற விருப்பமாதலின் இவ்வறமாகிய நல்வினையையும் எப் போதும் செய்தல்வேண்டும். எல்லா வற்றிலும் மனம் செம்மையாக இருத் தல் இன்றியமையாதது. மனம் மாசுடை ய வழி அதன் வழியவாகிய வாக் காலும் காயத்தாலும் செய்யப்படு வன பிறரறிதல்வேண்டிச் செய்கின் றனவாதலின் அவ்வறத்திற்குப் பய னில்லை யென்றறிதல்வேண்டும். அன் றியும் ''அழுக்கா றவாவெகுளி யின் னாச் சொன்னான்கு மிழுக்காவியன்ற தறம்'' என்று நம் நாயனார் அருளு கின்றாராதலின் இவற்றோடுகூடிச் செய் யப்படுவது அறமெனப் படாதென்ப தூஉம் கவனிக்கத்தக்கது. இதற்கு எடு த்துக்காட்டு, தக்கன் செய்தவேள்வி, தவத்தை மேற்கொண்டிருந்தும் மேற் கூறிய அழுக்காறு முதலிய குற்றங்க ளோடு செய்யப்பட்டமையால் யாகம் அழிக்கப்பட்டுத் தக்கன் தலை போன மை நாடறியும். ஆதலால் அழுக்காறு முதலிய குற்றங்களின்றி அறஞ் செய் தல் வேண்டு மென்பதூஉம் பெற்றாம். இனி இவ்வறமானது பசு புண்ணிய மென்றும், பதி புண்ணிய மென்றும் இரு திறப்படும். ஆன்மாக்களாகிய நாமெல்லோரும் முதற்படியாகப் பசு புண்ணியத்தைத்தான் செய்தல்கூடும். இப்பசு புண்ணியமானது இம்மை, மறுமைப்பயனை யளிக்கவல்லது. இவ் வாறு பல பிறவிகளிற் செய்த பசு புண்ணியத்தால் நல்லறிவு விளங்கிப் பதி புண்ணியத்தைச் செய்தல் கூடும். இப்பதி புண்ணியமே வீடுபேற்றைத் தரவல்லது. இக்கருத்தை ''எண் ணிறந்த சென்மமெடுத்துச் சிவபூசை பண்ணிப் பிழையாமல் பதியிழந்து கெட்டேனே'' என்று நம் பட்டினத்

தடிகளருளிய திருவாக்கும் வலியுறுத் துவதாகும். இவ்வுண்மையைக் காண மாட்டாமல் அறநெறிக்கு மாறுபட்ட மறநெறி புகுந்து அம்மற நெறியின் பயனாகிய துன்பத்தை யநுபவிக்குங் கால் மறநெறி யொழுகிய தம்மை நோவாது அநியாயமாகக் கருணாமூர்த் தியாகிய கடவுளைநொந்து வீணே எரி வாய் நிரயத்திற் காளாகின்றனர். கட வுளை நோவதாற் பயன் என்னை? அரிசி யிடாமற் பானையை யடுப்பிலேவைத்து எரிமூட்டினால் வெறும்பானை மேலே பொங்குமோ? பொங்காது. அது போல அறமாகிய நல்வினையை முன் னர் செய்யாதபோது இப்போது இன் பத்தைப் பெறுதல் கூடுமோ? கூடா தன்றோ! ஆதலால் அன்பனே! அற மானது மறந்தும்கைவிடற்பாலதன்று. மறப்பின், அதைப்போல துன்பத் தைப் பயக்கவல்லது வேறொன்று மின் றெனக் கண்டாமாதலின் அறஞ்செய் வது நமது கடமை யென்று கொள்ளத் தக்கது.

மா:—தாங்களிதுகாறுங் கூறியவாற் றால் அறமானது இம்மை, மறுமை, வீடென்னும் மூன்றனையும் பயக்க வல்லதென்பதைச் சாதிக்குமுகத்தால் மக்கட்கு உறுதிபயக்கும் பொருளென் பது பெறப்பட்டது. இனிப் பொரு ளைப் பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்த வேண்டுகின்றேன்.

குரு:—பொருளாவது மாணிக்கம், தங்கம், வெள்ளி, நெல் முதலியனவா கும். இது மேற்கூறிய அறத்தைச் செய்தற்கும் இன்பத்தைப் பெறுதற் கும் துணையாக வேண்டப் படுவதால் இம்மைக்கும் மறுமைக்கும் பயனு டைத்தென்பது பெற்றாம். எனவே மக்கட்கு உறுதிபயக்கும் பொருள்க ளில் இப்பொருளும் ஒன்றாகும். இதனா லன்றோ,

“பொருளிலார்க் கின்பமில்லை
புண்ணிய மில்லையென்று
மருவிய கீர்த்தியில்லை
மைந்தரிற் பெருமையில்லைக்
கருதிய கருமமில்லை
கதிபெற வழியுமில்லைப்
பெருநிலந் தனிற்சஞ்சாரப்
பிரேதமாய்த் திரிகுவாரே”

என்றார் ஒரு பெரியார்.

அன்றியும் உலகத்தைப் பொருளா கக் கொள்ளாத பெரியார் முனிவர். உலகத்தைப் பொருளாகக் கொண்ட பெரியார் அரசர். இவ்விருவரும் தாங்கள் நினைத்த காரியங்களை யெல் லாம் முடிக்க வேண்டுமாயின் பொருள் வேண்டியது இன்றியமையாததாகும். எவ்வாறெனில் முனிவரது விருப்பம் பேரின்பப் பெருவாழ்விலே. அவ்வாழ் வைத் தரவல்லது தவம். அத்தவத் தைச் செய்தற்கு உடலோடுயிர் நிற் றல் வேண்டும். அவ்வுடலோடு கூடி உயிர் நிற்றற்கு வேண்டப்படுவது ஆகாரம். அவ்வாகாரத்தைப் பெறு தற்கு வேண்டப் படுவது பொருள். எனவே பொருளிருந்தா லன்றி முனி வர் தாம் விரும்பும் பேரின்பப் பெரு வாழ்வைப் பெற முடியாதென்பதைப் பெற்றாம்.

இவ்வாறு உலகத்தைப் பொருளா கக் கொள்ளாத முனிவர்க்குங்கூட பொருள் இன்றியமையாது வேண்டப் படுமானால், உலகத்தைப் பொருளாகக் கொண்ட அரசனுக்கும் ஏனைக் குடிகட் கும் பொருள் இன்றியமையாது வேண்டப்படு மென்பதைச் சொல்ல வும் வேண்டுமோ! சொல்லாமலே யமையும். இக்கருத்துப்பற்றி யன்றோ

'முனிவரும் மன்னரும் உன்னுவ பொன்னால் முடியும்" என்று பெரியாரும் பணித்தார். இதுவேயுமன்றி அநுபவிக்கப் படும் பொருள்களில் இல்லாமையால் நாட்டை விட்டுக் காட்டுக் கோடுவார் சிலர். மடத்திற்குச் செல்வார் சிலர். இரத்தற்குத் துணிவார் பலர். இரக்கற்கு நாணி மானம் பொறாது உயிரை விடுவார் சிலரினுஞ் சிலர். நெறியல்லா நெறியிற்சென்று இடர்ப்படுவார் பலரினும் பலர். மேலும் தாம் அறிவுடையராயினும் பொருளுடையார் அறிவிலராயினும் தாம் அறநெறி நின்றொழுகும் உயர் குலத்தினராயினும் பொருளுடையார் மறநெறி நின்றொழுகும் இழி குலத்தினராயினும் அன்னவரை ஒரு பொருளாகக் கொண்டு தாம் மிகவும் தாழ்ந்து நின்றே பொருளைப் பெறுவதைக் கண்கூடாகக் காண்கின்றேமல்லேமோ? சுருங்கக்கூறின் உடல் நலத்திற்கும் உயிர் நலத்திற்கும் பொருள்இன்றியமையாது வேண்டப்படும். எனவே இத்துணைச் சிறப்பு வாய்ந்த பொருளை ஈட்டாது சும்மா விருத்தல் கூடுமோ? சொல்லுமின்! இதுபற்றியன்றோ "அஃகமுங் காசும் சிக்கெனத் தேடு," "திரைகடலோடியுந் திரவியந்தேடு," "பொருள்தனைப் போற்றிவாழ்," என்றின்னோரன்ன முதுமொழிகள் எழுந்தன. ஆ! பொருளின் பெருமையே பெருமை! அறம், பொருள், இன்பம், வீடென்னும்நான்கிற்கும்பொதுவாகப்பொருள் என்ற பெயரே இருந்தும் சிறப்பாக ஈண்டெடுத்துக்கொண்ட பொருட்கே பொருள் என்ற பெயர் இருத்தல் கொண்டும் இப்பொருளது பெருமை விளங்கும் போலும்! இனிப் பொருளானது இன்றியமையாது வேண்டப்படும் என்று கூறியது கொண்டு நெறியல்லா நெறியிற் சென்று பொருளை ஈட்டத் துணிந்துவிடக் கூடாது. ஏனென்றால் நாம் பொருளைப் பெற விரும்புவதெல்லாம் இன்ப நிலையையெய்தும் பொருட்டுத்தானே. அற்றாயின் அது பிறர்க்குத் தீமை பயவாத நிலையாகிய அறநெறியில் நின்றல்லவோ ஈட்டப்படல் வேண்டும். இதற்கு மாறாகப் பொருளைப் பெறுதலையே குறிக்கோளாகக்கொண்டு பிறரைத் துன்புறுத்தி மறநெறியில் நின்று ஈட்டிய பொருளெல்லாம் நம்மையும் துன்புறுத்தியே நாம் இரங்கும்படியான நிலையில் நம்மை விட்டகலும் என்பதை உய்த்துணர்தல் வேண்டும். இவ்வுண்மை காண மாட்டாமல் சிலர் தாங்கள் அநுபவித்தற்குப் போதிய பொருள் முற்றவப்பயனாலெய்தப் பெற்றிருந்தும் பொருள்பாற்கொண்ட பேராசையினாலே மறநெறி புகுந்தும் மென்மேலும் பொருளை ஈட்டத் துணிகின்றார்களே! ஐயோ! இஃதென்ன பேதமை! அவர்,

"அழக்கொண்ட வெல்லா மழப்போமிழப்பி
பிற்பயக்கு நற்பாலவை" [னும்

என்று தெய்வப் புலமை திருவள்ளுவநாயனாரருளிய நல்லுரையைக் கேட்டிரார் போலும்.

மா:—ஈண்டு கூறியவாற்றால் மக்கட்கு உறுதிபயக்கும் பொருள்களில் பொருட்செல்வமும் ஒன்றென்பதை, அதனது இன்றியமையாமையையும் அதனை ஈட்டும் வழியையும் விளக்கியது கொண்டு தெரிந்து கொண்டேன். இனி இன்பத்தைப் பற்றியும் வீட்டைப்பற்றியும் ஒரு விரிவுரைநிகழ்த்த வேண்டுகிறேன்.

குரு :—நல்லது. நண்பனே! இன்பமானது சிற்றின்பமென்றும் பேரின்பமென்றும் இருதிறப்படும். பேரின்பத்தைப் பற்றி வீடென்னுந் தலைப்பில் விளக்குவாம். ஈண்டு கூறப்பட்ட இன்பமானது கண்ணாற்கண்டும் செவியாற் கேட்டும் நாவாலுண்டும் மூக்கால் முகர்ந்தும் மெய்யாற்றீண்டியும் அநுபவிக்கப்படும் இன்பமாகும். அதாவது ஒருகாலத்தில் அழகான பொருளைக் கண்டின்புறுதலுண்டு. இன்னொரு காலத்தில் இனிய வொலியைக்கேட்டின்புறுத லுண்டு. வேறொரு காலத்தில் அறுசுவை யுணவை யுண்டு இன்புறுத லுண்டு. மற்றொரு காலத்தில் நறுமணங் கமழும் பொருளை முகர்ந்தின்புறுதலுண்டு. இன்னுமொரு காலத்தில் மெல்லிய பொருளை மெய்யாற்றொட் டின்புறுதலுண்டு. இவ்வாறு வேறு வேறு காலங்களில் வேறு வேறு பொருள்களால் அநுபவிக்கப்படுவன ஒரே காலத்தில் உருவுந்திருவும் பருவமுங் குலமுங் குணனு மன்பும் முதலியவற்றாற் றம்முளொப்புமையுடைய தலைமகன் தலைமகளோடு கூடியநுபவிக்கு மின்பமே சிறப்பாகச் சிற்றின்பமென்று கூறப்படும். இன்பமே சொரூபமாகவுடைய இறைவன் இச்சிற்றின்பத்தை உயிர்கட்கு அருளினமைக்குக் காரண மென்னையெனின் ஆணவ மலத்தால் கட்டுண்டு கிடக்கும் உயிர்கட்குக் கருணையினாலே தநு, கரண, புவன போகங்களைக் கொடுக்கவும், அவ்வுயிர்கள் அறிவு, இச்சை, செயல்கள் சிறிது விளங்கப்பெற்று தாம் துன்பத்தி னின்றும் விடுபட்டு இன்பத்தைப் பெறுதற் குரியவர்களெனத் தெளிந்து மேன்மேலும் இன்பத்தையே பெறுதற்குரிய வழிகளில் முயல்கின்றன. அம்முயற்சியால் இறுதியில் இவ்வுலகம் நிலைபெறாப் பொருளாக இருப்பதால் இங்கநுபவிக்கப் பெறும் இன்பமும் நிலைபெறா தொழிகின்றது என்று மெய்யுணர்ச்சி கைவரப்பெற்று நிலைபேறுடைய இறைவனோ டிரண்டறக் கலந்தநுபவிக்கும் பேரின்பப் பெரு வாழ்வைப் பெற முயற்சிக்கும். எனவே பேரின்பத்தைப் பெறுதற்குச் சிற்றின்பமும் வழியாக இருப்பதால் இச்சிற்றின்பமானது உயிர்க்கு உறுதி பயக்கும் பொருளென்பதாகப் பெற்றாம். இனி வீடாவது விடுபட்ட இடம், எவற்றினின்று விடுபட்ட இடமென்னின் ஆணவம், கன்மம், மாயையாகிய பாசத்தினின்றும் விடுபட்ட இடம். எப்படி தொழிற்றுறையினின்றும் விடுபட்டு நிலைபெறுத இன்பத்தைப் பெறுதற்குரிய இடத்திற்கு வீடென்று சொல்லப் படுகின்றதோ, அப்படியே பாசத்தினின்றும் விடுபட்ட இடத்திற்கு வீடென்று சொல்லப்படும். ஈண்டு வீடடைதலாவது எங்கும் நிறைந்த கடவுளோ டிரண்டறக் கலத்தல். எல்லாவற்றினும் முடிந்த நிலை இதுவேயாகும்.

இந்நிலை பெறும் பொருட்டே எல்லாம்வல்ல இறைவன் ஆன்மாக்கள் பாற்கொண்ட பெருங் கருணையால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளலாகிய ஐந்தொழிலை நடாத்துகின்றார். இனி இந்நிலையே முடிந்த நிலை யென்பது எவ்வாறு பெறப்படுமெனின் ஒரு சிறிது கூறுவாம். கேட்பாயாக. எக்காலத்தும் இரண்டு மாறுபட்ட பொருள்கள் ஒன்று சேர்ந்திருக்க முடியாதென்பது பலரும் அறிந்ததே. எடுத்துக் காட்

டாகக் கற்றாரைக் கற்றாரும் கல்லாரைக் கல்லாரும் மூர்க்கரை மூர்க்கரும் விரும்புவதைக் காண்கின்றோ மன்றிக் கற்றாரை மற்றாரும் மற்றாரைக் கற்றாரும்விரும்புவதைக்காண்கிலேமன்றோ?" அதுபோல இவ்வுயிரும் உடலும் மாறுபட்ட தன்மையுள்ள பொருள்களாக இருப்பதால் யாண்டும் ஒன்று சேர்ந்திருக்கமுடியாது. இவ்வுயிரும் உடலும் தம்முள் மாறுபட்ட தன்மையுடையனவென்பது எப்படி யெனில், உயிர் அறிவுடைப் பொருளாகவும் உடல் அறிவிலாப்பொருளாகவும் உயிர் நித்தியப் பொருளாகவும் உடல் அநித்தியப் பொருளாகவும் உயிர் அருவப் பொருளாகவும் உடல் உருவப்பொருளாகவும் இருப்பதுகொண்டு அறியலாகும். ஆனால் வினை வசத்தால் உடலோடுயிர்கூடி நிற்கிறதேயன்றி மற்றப்படி உயிருக்கும் உடலுக்கும் சம்பந்தமில்லை யென்பதே பெற்றாம். இவ்வுண்மையை "குடம்பை தனித்தொழிய புட்பறந்தற்றே, வுடம்பொடுயிரிடை நட்பு" என்று நம் நாயனார் அருளியது கொண்டும் தெளியலாம். இனி உயிருக்கும் உடலுக்கும் சம்பந்தமில்லையென்பது பெறப்பட்ட மாதிரி உயிருக்கும் கடவுளுக்கும் சம்பந்த முண்டென்பது எவ்வாறு பெறப்படுமெனின் காட்டுதும்: உயிர் அறிவுடைப் பொருள். கடவுளும் அறிவுடைப் பொருள். உயிர் நித்தியப் பொருள். கடவுளும் நித்தியப் பொருள். உயிர் அருவப்பொருள். கடவுளும் அருவப்பொருள். இங்ஙனம் உயிருக்கும் கடவுளுக்கும் ஒற்றுமையுடைய தன்மைகள் காணப்படலால் கடவுளோடிரண்டறக் கலத்தலாகிய நிலையே முடிந்த நிலையெனக் கூறினு மென்றறிவாயாக. இதன்றியும் நிலைபேறில்லாத பொருளோடு கூடியநுபவிக்கும் சிற்றின்பமே பெரியதோர் இன்பமாக இருக்குமானால் நிலைபேறுடைய இறைவனோ டிரண்டறக் கலந்தநுபவிக்கும் பேரின்பம் எவ்வாறிருக்கு மென்பதைச் சொல்லவும் வேண்டுமோ. இவ்வுண்மை கண்டல்லவோ மெய்ஞ்ஞானிகளெல்லாம் ஆண்டவனுடைய பேரின்பப் பெரு வாழ்வைப்பெரிதும் வேண்டிப்பெற்றார்கள். அப் பெரியார்களின் வேண்டுகோளையெல்லாம் இவண் விரிப்பிற் பெருகுமாதலின் இரண்டொன்றை மாத்திரம் இங்குக் குறிப்போம். அதாவது:—

"கடவுளே போற்றி யென்னைக்
கண்டுகொண் டருளு போற்றி
விடவுளே வுருக்கி யென்னை
யாண்டிட வேண்டும் போற்றி
வுடலிது களைந்திட் டொல்லை
யும்பர்தந் தருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த
சங்கரா போற்றி போற்றி"

—**மாணிக்கவாசகர்.**

"காலையுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டுச்சி
சாலவுபாதி பசிதாக மாகுமுறற் சஞ்சிதமா [யிற்
மாலையுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்
ஆலமுகந்தரு ளம்பலவா வென்னை யாண் [டே
[டருளே"

—**பட்டினத்தடிகள்.**

"ஆணவத்தோ டத்துவித
மானபடி மெய்ஞ்ஞானத்
தாணுவினோ டத்துவிதஞ்
சாருநா ளெந்நாளோ" —**தாயுமானுர்.**

இனி, இப்பேரின்ப மானது எவ்வாறிருக்கு மென்று கேட்பாயாகில் அது அவரவர் அநுபவ வாயிலாக வுணரத் தக்கதேயன்றி வாயாற் சொல்லுந்தரத் ததன்று. அது எதுபோலு மெனின்,

எப்படி சிற்றின்பமானது அவரவர் அநுபவாயிலாக வுணரத்தக்கதாக இன்பம் இவ்வாறிருக்கு மென்று வாயாற் கூற முடியாததாக இருக்கின்றதோ அப்படியே பேரின்ப நிலையும் அவரவர் அநுபவாயிலாக வுணரத்தக்கதே யன்றி வாயாற்கூறுந் தரமன்றறிவாயாக.

இனி இப்பேரின்ப வாழ்வை எவ்வாறு பெறக்கூடுமெனின் துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல் முதலான குணங்களால் மேம்பட்டு இறைபணி நிற்கவல்லாரே பெறக்கூடு மென்றறிய வேண்டும்.

மா :—அந்தணரேறே ! இன்பமானது சிற்றின்பமென்றும் பேரின்ப மென்றும் இருதிறப்படு மென்றும் பேரின்பத்தைப் பெறுதற்குச் சிற்றின்பமும் வழியாக இருக்கிறதென்றும் ஆன்மாக்களுக்கெல்லாம் முடிந்த நிலை இன்பமே சொரூபமாகவுடைய இறைவனோ டிரண்டறக் கலத்தலே யென்றும் இந்நிலையை இறைபணி நிற்பாரே பெறக்கூடு மென்றும் இதுகாறும் கூறியது கொண்டு இன்பமும் வீடும் உயிர்க் குறுதிபயக்கும் பொருளென்பதாகத் தெரியலானேன். ஆதலால், "எவ்வுயிரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே" என்றருளிய தாயுமான சுவாமிகளின் திருவாக்குப் படி எல்லா வுயிர்களும் இந்நிலையெய்தி பேரின்பப் பெருவாழ்வைப் பெறல் வேண்டுமென்று அருளே திருமேனியாகவுடைய நம் ஆண்டவனை எப்போதும் வேண்டுகின்றேன்.

---

## மதிப்புரைகள்

1. "**இராமலிங்க சுவாமிகள் திருவுள்ளம்**"—ஆசிரியர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார்—விலை ரூ. 1—முருகவேள் புத்தகசாலை இராயப்பேட்டை—௨௦௫ பக்கங்கொண்ட இவ்வரிய நூல் ஒவ்வொரு சமரச ஞானியின் கையிலும் இருத்தற்குரியது. இந்நூல் அறிவுறுத்தல், முறை, பேறு, இளமைமுயற்சி என்ற நான்குகூறாக அமைந்துள்ளது. முதற்கூறில் "ஷடாந்த சமரச சன்மார்க்க சங்கம்" என்ற சொற்றொடரிலுள்ள ஒவ்வொரு பகுதியின் பொருள் மிக அருமையாக விளக்கப்பட்டுளது. இரண்டாவது கூறில் கடவுளிடத்துறுதி, இயற்கை வாழ்வு, முறையீடு, அருளொழுக்கம் ஆகிய நான்கும் சுவாமிகள் அருட்பாக்களால் விளக்கப்பட்டுள்ளன. 'பேறு' என்ற கூறில் உறுதிநிலை, திருவருள் நிலை, சாகாநிலையாகிய மூன்று நிலைகள் செவ்வையாக விளக்கப்பட்டுள்ளன. இளமை முயற்சியென்ற நான்காவது பிரிவில் சுவாமிகள் இளமையிலேயே குரு, நூல், கடவுள்வழிபாடு, ஆகிய சாதனங்களைப் பயன்படுத்தியதிறன் மிகத் திறனோடு விளக்கப்பட்டுள்ளது. இந்நூல் மேனாட்டு முறைபற்றிய ஆராய்ச்சி நூல். இஃதேபோல் இவ்வாசிரியர் ஏனைய ஞானகுரவர்கள் திருவுள்ளங்களையும் விரைவில் வெளியிடுமாறு கடவுள் திருவுள்ளம் இருப்பதாக.

2. "**திருஞான சம்பந்தர்**" **சரித்திர நாடகம்**—ஆசிரியர் ஸ்ரீமான் S. K. பார்த்தசாரதி ஐயங்கார், District Munsiff of Mannargudi—விலை அணா 8—இது 72 பக்கக்கொண்ட மிக உயரிய முறைபற்றிய நூல். பிற மத தூஷணையில்லாமல் சைவ சமயத்தின் உயர்வையும் சமயாசாரியராகிய திருஞான சம்பந்தர் வாழ்வையும் நாடகரூபமாக எடுத்து விளக்குவது. ஆர்வமிக்க ஒரு சைவப்பெரியார் இவ்வாறு ஒரு நாடகம் எழுத வேண்டுமெனின் இதைவிட மேலாக எழுத இயலாது என்பது திண்ணம். இவ்வாசிரியர் ஒரு வைணவராகயிருந்தும் சமரச ஞானம் கைவரப்பெற்ற சைவப்பெரியார் மனோநிலையில் நின்று இந்நூல் இயற்றியது இந்நூற்றாண்டில் சமயப் பிணக்குகள் தொலைந்து ஒற்றுமை மேம்பட்டு வருவதற் கறிகுறியாகும். இந்நூலை ஒவ்வொருவரும் வாங்குவதேயன்றி ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் சிறுவர் சிறுமிகளைக்கொண்டு இந்நாடகத்தை நடிக்கச் செய்வதும் இன்றியமையாது செய்வதற்குரிய சமயப் பணியாகும். இந்நூலைப்போல் ஏனைய சமயகுரவர் சரிதைகளையும் நாடகரூபமாக இயற்றி வெளியிட இவ்வாசிரியரை வேண்டுகிறோம். இந்நூலின்மூலம் கிடைக்கும் லாபம் தமிழ்க் கல்விப் பரிசுக்காக அர்ப்பணம் செய்யப்பட்டிருக்கிறது.

## சைவ சிகாமணிகள் இருவர்

இந்நூல் 120 பக்கங்கொண்டது. இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரை சோமசுந்தர தேசிகரவர்கள் இயற்றியது. இது சிறந்த ஆராய்ச்சியுடன் எளிய நடையில் இனிய சொற்களால் படிப்பவர் மனதிற் படியும்படி தெளிவாய் எழுதப்பட்டிருக்கிறது. நம்பியாண்டார் நம்பியின் காலமும் சேக்கிழார் காலமும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலிய சான்றுகள் செவ்வனே விளக்கப்பட்டுள்ளன. பெரிய புராணம் முதல் நூலேயொழிய மொழிபெயர்ப்பல்லவென்றும் தக்க சரித்திரச் சான்றுகளைத் தழுவியே எழுதப்பட்டுள்ளதென்றும் இவ்வாசிரியர் முடிபு கூறுதல் போற்றத்தக்கதே. இந்நூல் ஒவ்வொரு சைவரும் வாங்கத் தகுந்தது. விலை ரூபா 1. ஆசிரியர் விலாசம் 1/25, நாச்சியப்ப செட்டித் தெரு, மயிலாப்பூர், சென்னை.

---

## சைவ இளைஞர் மகாநாடு, திருவிடைமருதூர்.

திருவிடை மருதூரிலே மார்ச்சுமாதக் கடைசி வாரத்தில் சைவ இளைஞர் மகாநாடு ஒன்று நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இதுபற்றிய விரிவான அறிக்கைகளை தினசரி, வாரப் பத்திரிகைகளில் எதிர்பார்க்க வேண்டுகிறோம்.

---

## சைவ மங்கையர் மகாநாடு

நமது சமாஜத்தில் மங்கையர் பகுதி ஒன்று ஏற்படுத்தி, பெண்மக்களுக்குச் சமய போதனை முதலியன செய்வதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்ய **மங்கையர் தனிப் பெருங் கூட்டம்** ஒன்று சென்னைக் கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, 150-வது எண்ணுள்ள மாளிகையில் 1930ளு பிப்ரவரிமீ 22உ சனிக்கிழமை மாலை 6-மணிக்குக் கூடும். கூட்டத் தலைவி, நடைமுறை முதலிய விவரங்கள் தினசரிப் பத்திரிகைகளிலும் துண்டு அறிக்கைகளிலும் வெளியாகும். தீர்மானங்கள் நிறைவேற்ற விரும்பும் பெண்மக்கள் அடியிற்காணும் விலாசத்துக்கு உடனே எழுதுக. ஸ்ரீமதி பண்டிதை எஸ். கிருஷ்ணவேணியம்மாள், 33/35, சிங்கராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி, சென்னை.

---

# சுந்தரர் தேவாரம்

சைவ சித்தாந்த மகா சமாஜத்தினர் சுந்தரர் தேவாரம் 10,000 பிரதிகளை அச்சிட்டு அடக்க விலைக்கு வழங்குகின்றனர். நேரில் வருவோர் நான்கணா தந்து தனிப்பிரதி பெறலாம். மொத்தமாக ரூபாவுக்கு ஐந்து பிரதிகள் வீதம் பெற்றுக்கொள்ளலாம். முன்பணமாக அனுப்புவோருக்கு 25 பிரதிகட்கு மேற்பட்டால் ரயில்வே பார்சலாகப் புத்தகங்கள் அனுப்பப்படும். முன்பணம் அனுப்புவோர் புத்தகக் கிரயத்தோடு பார்சல் கட்டும் செலவிற்கும் ரயில்வே ரசீதனுப்பத் தபாற் செலவிற்கும் 2 அணா சேர்த்தனுப்ப வேண்டும். ரயில்வே ரசீது கிடைத்தவுடன் பார்சலை ஒப்புக்கொள்ளா விட்டால் ரயில்வே கம்பெனிக்கு டிமரேஜ் கட்டணம் கட்ட நேரிடும். ரயில்வே பார்சலைப் பெற்றுக் கொண்டதை ஒவ்வொருவரும் தயவு செய்து காரியதரிசிக்குத் தெரிவிக்கவேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தனிப்பிரதி (பார்சல் செலவு, வி. பி. அல்லது ரிஜிஸ்தர் செலவுள்பட) | | | ரூ. | 0 | 8 | 0 |
| 5 பிரதிகள் | ஷை | ஷை | ,, | 1 | 9 | 0 |
| 10 ,, | ஷை | ஷை | ,, | 2 | 15 | 0 |
| 25 ,, | ஷை | ஷை | ,, | 6 | 14 | 0 |
| 50 ,, | ஷை | ஷை | ,, | 13 | 8 | 0 |

ஷை ஐம்பது பிரதிகளைத் திருநெல்வேலிக்கு ரயில்வே பார்சலில் அனுப்ப மொத்தச் செலவு 11-2-0. ரயில்வே ஸ்டேஷனில்லாத உள்நாட்டு ஊர்களிலிருப்போர் ரயில்வே ஸ்டேஷனுக் கருகிலுள்ள நண்பர் விலாசத்துக்கு அனுப்பும்படி செய்தல் நலம். மூன்று நான்கு அன்பர்கள் சேர்ந்து ஒரே பார்சலாகப் பெற்றுக்கொள்வதும் நலம். இப்பிரதிகள் வெளிவந்தது முதல் மிக விரைவாகச் செலவாய் வருகின்றன. ஆகவே புத்தகம் தேவையுள்ளவர்கள் விரைந்து கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்புவார்களாக.

150, கோவிந்தப்பநாய்க்கன் தெரு,
ஜி. டி. சென்னை.

இங்ஙனம் :
**ம. பாலசுப்ரஹ்மண்யம்,**
காரியதரிசி.

## சைவ சித்தாந்த மகா சமாஜத்தில்

# விற்பனைக்குரிய புத்தகங்களின் அட்டவணை

| | ரூ. | அ. |
|---|---|---|
| "சித்தாந்தம்" மலர் ஒன்று (பைண்டு பிரதி) ... | 2 | 0 |
| "சித்தாந்தம்" மலர் இரண்டு (பைண்டு பிரதி) ... | 2 | 0 |
| சுந்தரர் தேவாரம் ... ... | 0 | 4 |
| திருவாசகம் ... ... | 0 | 2 |
| திருக்குறள் விளக்கம் - அறத்துப்பால். | 3 | 4 |
| ஷெ பொருட்பால். | 4 | 8 |
| ஷெ காமத்துப்பால். | 1 | 12 |
| ஷெ தொகுப்புரை. | 0 | 8 |
| புலால்மறுத்தலுக்கு 50 காரணங்கள்... | 0 | 2 |
| சர்வமத சம்மதம் ... ... | 0 | 2 |
| திருநாளைப்போவார் தீக்குளித்ததேன். | 0 | 2 |
| நள்ளிரவில் நகர்க்காட்சி ... | 0 | 2 |
| கடவுள் ... ... | 0 | 2 |
| பண்மயத்த மொழிப்பரவை ... | 0 | 2 |
| சமயத்தின் சாரம் ... ... | 0 | 2 |

| | ரூ. | அ. |
|---|---|---|
| சமய வளர்ச்சி ... ... | 0 | 2 |
| சுயமரியாதை சம்பாஷணை ... | 0 | 2 |
| சைவப் பெரியார் தனிக்கூட்டத் தீர்மானங்கள் ... ... | 0 | 2 |
| சங்க நூல்களும் சைவமும் ... | 0 | 2 |
| சைவர் மகாநாடு, திருப்பாதிரிப்புலியூர். | 0 | 8 |
| அறுசமயப் பகுதி ... ... | 0 | 2 |
| அறுபத்துமூன்று நாயன்மார் சரித்திர உண்மை ... ... | 0 | 4 |
| சிவஞானபோதம் ... ... | 0 | 2 |
| அஷ்டப்பிரகாணம் ... ... | 3 | 0 |
| சிவார்ச்சனு சந்திரிகை ... ... | 1 | 8 |
| சைவபூஷணம் ... ... | 1 | 0 |
| சைவ சித்தாந்த பரிபாஷை ... | 0 | 8 |
| The Grace of Lord Siva (ஆங்கிலத்தில்) ... ... | 0 | 4 |

சுந்தரர் தேவாரம் மொத்தயாக வாங்குவோர்க்கு ரூபாய் ஒன்றுக்கு ஐந்து பிரதிகள் வீதம் கொடுக்கப்படும். மேற்கண்ட விலைகள் புத்தகக் கிரயம் மட்டுந்தான். தபாற்கூலி வேறு. பார்சல் செலவு, தபாற்கூலி, வி. பி. செலவு முதலியன வாங்குவோரே செலுத்தவேண்டும்.

மேலேகண்ட அட்டவணையிலுள்ள புத்தகங்கள் தேவையாயின், சமாஜ ஆண்டுவிழா முதலிய கூட்டங்கள் நடக்குமிடங்களிலும் பெறலாம்; கீழ்வரும் விலாசத்துக்கு முன்பணம் அனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம்.

ம. பாலசுப்ரஹ்மண்ய முதலியார், காரியதரிசி.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
150, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை.

---

# அப்பர்சுவாமிகள் தேவாரம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் 10,000 பிரதிகள் அச்சிட்டதைப் போலவே சமாஜத்தினர் அப்பர் சுவாமிகள் தேவாரம் 5,000 பிரதிகள் அச்சிடுகின்றனர். இதற்கு சுமார் ரூ. 3,000 தேவை. சைவப்பற்றுடைய தருமசீலர்கள் சிலர் ரூ. 1500 முன்பணமாக உபகரித்துள்ளார்கள். இவ்வறிக்கையைக் கண்ணுறும் ஒவ்வொரு சைவரும் தம்மால் இயன்ருல் நூறுரூபாய் அனுப்பியாவது இன்றேல் தருமசீலர் ஒருவரை அடுத்து நூறு ரூபாய் வாங்கி அனுப்பியாவது உபகரிக்க வேண்டுகிறேம். புத்தகம் நாளது சித்திரைமீ சதய நக்ஷத்திரமாகிய அப்பர் சுவாமிகள் திருநக்ஷத்திரத்தன்று வெளிவரும்.

---

# முருகன் திருவருட்பா

வடலூர் - இராமலிங்க சுவாமிகள் அருளிச் செய்தது; திருவருட்பாவில் ஐந்தாந் திருமுறையாகத் திகழ்வது. இராமலிங்க சுவாமிகள் திருவருட்பேறு குறித்துத் திருத்தணிகையில் முருகப் பெருமான் முன்னிலையில் "அமுத அமுகை" இந்நூலில் தேங்கி வழிகிறது. "முருகன் திருவருட்பா" கருங்கல் மனதையுங் கரைத்துக் கரைத்து இளகச் செய்யும்; திருவருட்பேற்றில் காதல் எழுப்பும். அதை ஒருகால் ஓதுவோரும் அன்பராதல் ஒருதலை.

விலை அணு 8.

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

---

Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah and Published by M. Balasubramania Mudaliar (Editor-in-charge) for the Saiva Siddhanta Maha Samajam, 150, Govindappa Naicken Street, G. T. Madras.